# ஊழியர் சேமலாப நிதியம்
# ஆண்டறிக்கை
# 2021

இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களின் மிகப்பெரிய ஓய்வூதிய நிதியமாக விளங்கும் ஊழியர் சேமலாப நிதியமானது முகாமைத்துவத்தின் கீழ் ரூ.3.1 ரில்லியன் சொத்துக்களை விஞ்சி, 2021இல் அதன் சொத்துத் தளத்தினைத் தொடர்ந்தும் வளர்ச்சியுறச் செய்த வேளையில் பணிகளின் தரத்தினை மேம்படுத்தி, அதன் உறுப்பினர்களுக்கான நியாயமான வருவாய் வீதத்தையும் நிதியத்தின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தி வருகின்றது. நிதியத்தின் பெறுமதி 12.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,824 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.3,166 பில்லியனைப் பதிவுசெய்தது. இவ்வாண்டுப்பகுதியில், ஊ.சே.நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வூதிய நன்மைகளுடன் உற்பத்தித்திறன் வாய்ந்த பணிகளை வினைத்திறனுடன் வழங்கிய வேளையில் நிதியத்தின் பாதுகாப்பினையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்தியது. ஊ.சே.நிதியம், 2021இல் ரூ.342 பில்லியன் வருவாயினை ஈட்டிக்கொண்டதன் மூலம் அதன் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளை வெற்றிகரமாக வழிநடத்தியிருக்கின்றது. 2021 இறுதியில் நிதியத்தின் மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூ.3,173 பில்லியனை அடைந்தது. சந்தையில் நிலவிய சாதகமற்ற நிலைமைகள் மற்றும் சந்தை வட்டி வீதங்களின் தளம்பல் என்பனவற்றிற்கு மத்தியிலும் ஊ.சே.நிதியம், 2021ஆம் ஆண்டிற்காக அதன் உறுப்பினர்களுக்கு 9.00 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான வருவாய் வீதத்தினைப் பிரகடனப்படுத்தக் கூடியதாக இருந்தது.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 5 (1) (i)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், 2021.12.31 அன்று முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் பிரதிகள் 2022.03.07 அன்று தொழில் மற்றும் நிதி அமைச்சுக்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், 2022.02.24 அன்று அதே நிதியியல் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

# பொருளடக்கம்

பிரிவு அ

## கூட்டாண்மை நிர்வாகம்


நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின்
ஆளுநரிடமிருந்தான செய்தி 115
நாயணச் சபையின் கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளரின் செய்தி 116
தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி 118
மூத்த முகாமைத்துவக் குழு 119
ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு 121
இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது தொழிற்பாடுகள் 122
தொழில் ஆணையாளர் நாயகத்தின் தொழிற்பாடுகள் 123


பிரிவு ஆ

## கூட்டாண்மை பொதுநோக்கு


தொலைநோக்கு மற்றும் பணி 126
பயணத்தின் மைல்கற்கள் 128
நிதியியலின் முக்கிய பண்புகள் - 2021 131
தொழிற்பாட்டின் முக்கிய பண்புகள் - 2021 135
ஊ.சே.நிதியச் செயலாற்றத்தின் மீளாய்வு - 2021 137


பிரிவு இ

## நிதியியல் கூற்றுக்கள்


வருமான செலவினக் கூற்று 151
அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று 152
நிதியியல் நிலைமைக் கூற்று 153
பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கு 154
முதலீடுகளின் கூற்று 155
காசுப்பாய்ச்சல் கூற்று 156
பங்குரிமை மூலதனத்தில்/ உறுப்பினர்களின் செல்வத்தில் ஏற்பட்ட
மாற்றங்களின் கூற்று 157
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 158

பிரிவு ii

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 206

பிரிவு iii

## புள்ளிவிபரவியல் பின்னிணைப்பு மற்றும் துணைநிரப்பு தகவல்கள்

1. முதலீடுகள், முதிர்ச்சிகள் மற்றும் முதலீடுகள் மீதான வருவாய் (1992 - 2021) 329
2. உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாய் வீதங்கள் (1992 - 2021) 330
3. உறுப்பினர் நிலுவைகள், உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி மற்றும் உறுப்பினர் நிலுவைகள் மீதான பயனுறு வீதம் (1992 - 2021) 331
4. முதலீட்டுச் சொத்துப்பட்டியல் கூற்று (1992 - 2021) 332
5. தொகுக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் (நாணயச் சபை) (1992 - 2021) 333
6. தொகுக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கணக்கு (1997 - 2021) 335
7. புள்ளிவிபர அட்டவணையின் வரைவிலக்கணங்கள் விளக்கக் குறிப்புக்கள் 338

## பிரிவு அ

# கம்பனி நிர்வாகம்





# நாணயச் சபையின் தலைவரும்

## இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடமிருந்தான செய்தி

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் சார்பில், ஊழியர் சேமலாப நிதியத்தின் 2021ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைக்கு இச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் பாரிய ஓய்வூதிய நிதியமாக தொழிற்பட்டு வருகின்ற ஊழியர் சேமலாப நிதியமானது 2020இன் இறுதியில் 2.9 றில்லியனிலிருந்து 2021இன் இறுதியில் 3.2 றில்லியனாக வளர்ச்சியடைந்துள்ளது. ஊழியர் சேமலாப நிதியம் ஆண்டு முழுவதும் உலகளாவிய நோய்த்தொற்றின் பரவல்கள் போன்ற பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுத்த அதேவேளை ஆர்வலர்களுக்கான தனது பணிகளை தொடர்ந்தும் வழங்கியது. நாட்டின் பாரிய ஓய்வூதிய நிதியத்தை முகாமைசெய்வதில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் ஈடுபாட்டையும் பிரதிபலித்து, உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பிரதான முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

இத்தகைய தீவிரமான சவால்மிக்க காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளுக்கு தொழில் திணைக்களமும் மகத்தான பங்களிப்பை வழங்கியது. ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களின் சிறந்த நலனுக்காக உயர் தரத்திலான பணிகளைப் பேணும் பொருட்டு, ஊழியர் சேமலாப நிதியத்தினாலும் தொழில் திணைக்களத்தினாலும் ஆற்றப்படும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கதாகும்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கட்டுக்காவலர் என்ற ரீதியில் நாணயச் சபையில் தொடர்ந்தும் நம்பிக்கையை வைத்த ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களுக்கும், தொழில்தருநர்களுக்கும், வேறு ஆர்வலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்க விரும்புகின்றேன். ஊழியர் சேமலாப நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு தொடர்ந்தும் நிலைபெறத்தக்க நீண்ட கால வருவாய்களை வழங்கும் என நம்புவதுடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆர்வலர்களின் எதிர்பார்க்கைகளை நிறைவுசெய்வதற்கு முன்னோக்கி பயணிப்பதற்கும் எதிர்பார்க்கின்றேன்.

**முனைவர் பி நந்தலால் வீரசிங்க**

ஆளுநரும் நாணயச் சபையின் தலைவரும்



# நாயணச் சபையின் கண்காணிப்பாளர்

## ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் கண்காணிப்பாளரின் செய்தி

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் 5ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. பங்களிப்புக்களின் சேகரிப்பு, மீளளிப்பு நன்மைகளின் கொடுப்பனவு, அரையாண்டு நிலுவைக் கூற்றுக்கள், வீடமைப்புக் கடன் உத்தரவாதங்கள் போன்ற ஓய்வூதிய நன்மைகள், உறுப்பினர் மீதியின் முப்பது சதவீதத்தை எடுப்பனவுசெய்தல், பன்முக சொத்து வகுப்புக்களில் முதலீடு செய்வதன் மூலமாக ஊழியர் சேமலாப நிதியத்தை முகாமை செய்தல், அதன் உறுப்பினர்களுக்கு உகந்த இடர்நேர்வு சீராக்கப்பட்ட வருவாயை உருவாக்குதல் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்துடன் தொடர்புடைய நிதியியல் கூற்றுக்களை வெளியிடுதல் என்பனவற்றை இத்திணைக்களம் உள்ளடக்குகின்றது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மீளத்தோன்றலின் விளைவாக, மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் 2021ஆம் ஆண்டு சவால்மிக்க மற்றுமொரு ஆண்டாக விளங்கியது. உலகளாவிய நோய்த்தொற்றின் பல்வேறு பரவல்களுடன், உலகளாவிய பொருளாதாரமானது சரிவை அனுபவித்து இலங்கையிலும் அதன் கசிவுத் தாக்கங்களைக் கொண்டிருந்தது. 2021 காலப்பகுதியில் நிலவிய பொருளாதார நிலைமைகளின் கீழ், ஊழியர் சேமலாப நிதியத்தின் முதலீட்டு சூழ்நிலையானது ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் ஒட்டுமொத்த வட்டி வீத கட்டமைப்பில் சடுதியான அதிகரிப்புடன் தாக்கம்செலுத்தியது.

2021இறுதியளவில், ஊழியர் சேமலாப நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் ரூ.3,173.3 பில்லியனை அடைந்து 12.15 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. நிதியங்களின் பெரும்பான்மையானவை அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டன மற்றும் ஆண்டுகாலப்பகுதியில், ரூ.382.7 பில்லியன் கொண்ட மொத்தம் திறைசேரி முறிகளில் முதலீடு செய்யப்பட்டன என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அனைத்து திறைசேரி முறி ஏலங்களில் ஊழியர் சேமலாப நிதியம் பங்குபற்றியுள்ளது.

2021 இறுதியில், எஸ் அன்ட் பி எஸ்எல் 20 சுட்டெண்ணில் 12 கம்பனிகளை உள்ளடக்கிய ஊழியர் சேமலாப நிதியத்தின் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலானது ஏறத்தாழ 58 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியைக் காண்பித்திருந்தது. 2021 ஆண்டு காலப்பகுதியில், ஊழியர் சேமலாப நிதியமானது பங்குரிமை மூலதன மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தி காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட சடுதியான விலை உயர்விலிருந்து ஈட்டும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட இருப்புக்களை அகற்றுவதில் ஈடுபட்டிருந்தது.

இதற்கமைவாக, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது அதன் முதலீட்டு நடவடிக்கைகளின் ஊடாக நியாயமான இடர்நேர்வு சீராக்கப்பட்ட வருவாய் வீதத்தை உருவாக்க முடிந்துள்ளது. மரபுரீதியான நிதிய முகாமைத்துவ மூலோபாயங்களை பாதுகாப்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு இந் நடவடிக்கைகள் முன்னேடுக்கப்பட்ட அதேவேளை உறுப்பினர்களுக்கு உருவாக்கப்பட்ட வருவாய்களை முன்னேற்றியுள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் ரூ.342.2 பில்லியனுக்கு வகைகூறி 2021இல் உறுப்பினர் நிலுவைகளில் 9சதவீதம் கொண்ட வட்டி வீதமொன்றை ஊழியர் சேமலாப நிதியம் செலுத்தியது.

தமிழ்

ஊழியர் சேமலாப நிதியமானது 2021இல் வரிகளாக ரூ.41.66 பில்லியனை செலுத்தியது.

ரூ.165.7 பில்லியன் கொண்ட மொத்த உறுப்பினர் பங்களிப்புக்களும் ரூ.118.2 பில்லியன் கொண்ட மொத்த மீளளிப்புக்களும் 2021 காலப்பகுதியில் செயன்முறைப்படுத்தப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது ரூ.5,423 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்கள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊழியர் சேமலாப நிதிய மீதிகளுக்கு எதிராக கடன் உத்தரவாதங்களின் 9,068 சான்றிதழ்களை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஓய்வு காலத்திற்கு முன்னரான நன்மைத் திட்டத்தின் கீழ், வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் மருத்துவ தேவைகளை நோக்காகக் கொண்டு, 16,554 உறுப்பினர்களுக்கு ரூ.8.8 பில்லியன் வழங்கப்பட்டது. ஆண்டுகாலப்பகுதியில், 2019ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டுடன் தொடர்புடைய 2.75 மில்லியன் கொண்ட அரையாண்டு உறுப்பினர் நிலுவைக் கூற்றுக்கள் வழங்கப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுடன் தொடர்புடைய 1.99 மில்லியன் அரையாண்டு கூற்றுக்கள் வழங்கப்பட்டன அத்துடன் 2020ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்கான 2.45 மில்லியன் கொண்ட அரையாண்டு கூற்றுக்கள் வழங்கப்பட்டன.

உறுப்பினர்களை அவர்களின் தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள நற்சான்றிதழ்களுக்கமைவாக மீண்டும் பதிவுசெய்தல், மக்கள் தொடர்புகளையும் விசாரணை கருமபீடங்களையும் கையாளுதல், பதிவு திருத்தங்களை நடாத்துதல் மற்றும் பதிவு முகாமைத்துவங்கள் போன்ற ஏனைய முக்கிய செயற்பாடுகள் வினைத்திறன்மிக்க வகையிலும் உரிய வகையிலும் முன்னெடுக்கப்பட்டன. மேலும், கோரப்பட்ட திருத்தத்தை நிறைவுசெய்தல் தொடர்பில் உறுப்பினர்களுக்கு அறிவிப்பது பற்றிய குறுஞ்செய்தி விழிப்பூட்டலானது உறுப்பினர்களின் சௌகரியத்திற்கு செயற்படுத்தப்பட்டது.

இலத்திரனியல் சேகரிப்பு நடைமுறையானது சீரமைக்கப்பட்ட அலுவல்சார் இணையத்தளத்தின் மூலமாக (www.epf.lk) ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு, தொழில்தருநர்கள் தமது திரட்டுக்களை சமர்ப்பித்து, பங்கேற்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் மூலமாகவும், மக்கள் வங்கியினூடாக காசோலையின் மூலமாகவும் கொடுப்பனவுகளை செலுத்தலாம்.

பங்களிப்பு கொடுப்பனவை வெற்றிகரமாக முடித்த 24 மணி நேரத்திற்குள் தனிப்பட்ட உறுப்பினர் கணக்குகளை விரைவாக இற்றைப்படுத்துவதை இம்முறைமை செயற்படுத்துவதுடன், ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் தரவுதளத்திலுள்ள உறுப்பினர் பதிவுகளின் துல்லியத்தை உறுதிப்படுத்துவதற்கும் தொழில்தருநர்களுக்கு வசதிப்படுத்தியுள்ளது. இம்முறைமையின் மூலம், அனைத்தையுமுள்ளடக்கியதும் துல்லியமானதுமான தரவுதளமொன்றை நிறுவுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றை உருவாக்குமென எதிர்பார்க்கப்பட்டு, எதிர்காலத்தில் உறுப்பினர் விபரங்களை திருத்துவதற்கான பூஜ்ஜியம் அல்லது குறைந்தபட்ச தேவைப்பாட்டை தோற்றுவித்தது.

ஏதேனும் இடர்நேர்வுகளை குறைக்கும் அதேவேளை, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் உறுப்பினர் பணிகளின் வினைத்திறனையும் துல்லியத்தையும் நெறிப்படுத்தவும் அதிகரிக்கவும் அதிநவீன தொழில்நுட்பத்தை பின்பற்றுவதை இலக்காகக் கொண்டு செயன்முறை முன்னேற்றம் மற்றும் திறன் அபிவிருத்தி பிரிவானது 2021 ஏப்பிறலில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தில் நிறுவப்பட்டது. செயன்முறை முன்னேற்றம் மற்றும் திறன் அபிவிருத்தி பிரிவானது ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தில் அதிநவீன தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உலக வங்கியின் முன்மொழியப்பட்ட நிதியியல் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தில் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் புத்தாக்க முன்னெடுப்புக்களுக்கு உதவுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இறுதியாக, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் மேற்குறிப்பிட்ட அனைத்து பணிகளையும் நிறைவேற்றுவதில் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் தொழில்தருநர்கள் ஆற்றிய ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நாணயச் சபையின் உறுப்பினர்களினாலும் இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவத்தினாலும் வழங்கப்பட்ட மூலோபாய வழிகாட்டலானது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆர்வலர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் தொழில் திணைக்களத்தின் அலுவலர்கள் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவு தொடர்பிலும் எனது நன்றியைப் பகர்கின்றேன்.

**ஏ ஜி யு திலகரத்ன**

கண்காணிப்பாளர்

ஊழியர் சேமலாப நிதியம்

தமிழ்



தமிழ்

# தொழில் ஆணையாளர்

## நாயகத்தின் செய்தி

தொழில் திணைக்களத்தினாலும் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினாலும் தொகுக்கப்பட்ட 2021இல் ஊழியர் சேமலாப நிதியத்தினால் அடையப்பட்ட முன்னேற்றங்களைப் பகுப்பாய்வுச் செய்கின்ற ஊழியர் சேமலாப நிதியின் ஆண்டறிக்கை - 2021இற்கு இச்செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

தனியார் துறை மற்றும் அரசுசார் துறைகளில் தொழில்புரியும் ஊழியர்களின் ஓய்வுகால வாழ்க்கையினை பாதுகாக்கும் குறிக்கோளுடன் பேணப்பட்டுவரும் இலங்கையிலுள்ள மிகப் பெரிய சமூக பாதுகாப்புத் திட்டமான ஊழியர் சேமலாப நிதியம் 2021இல் அதன் பணிகளை மேலும் விரிவாக்க இயலுமானதாக இருந்தமை தொடர்பில் பகுப்பாய்வு அறிக்கை சான்றுகளை வழங்குகின்றது.

உலகளாவிய நோய்த்தொற்று நிலைமையாகவிருந்த கொவிட்-19இன் பரவலுக்கு மத்தியிலும், அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்தி, 2021 ஆண்டுமுழுவதும் வாடிக்கையாளர்களுக்கு பணிகளை வழங்குவதற்கு இயலுமானதாக இருந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. எதிர்காலத்தில் ஊழியர் சேமலாப நிதிய உரிமைகோரல் கொடுப்பனவு செயன்முறையை வசதிப்படுத்துவதன் மூலமாக வினைத்திறன்மிக்க பணியை வழங்குவதற்கான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உரிமைகோரல் கொடுப்பனவு செயன்முறையை முன்னெடுப்பதன் மூலமும் தொழில்தருநர் மற்றும் ஊழியர் ஆகிய இருவருக்குமான நிவாரண கொள்கைகளை கடைப்பிடிப்பதன் மூலம் நிதியத்தின் தொடர்ச்சியான வளர்ச்சியினூடாகவும் நிதியத்தின் நிதியியல் உறுதிப்பாடு அதேபோன்று வாடிக்கையாளர் திருப்திப்படுத்தலும் உயர் மட்டத்தில் பேணப்பட்டுள்ளன.

தொழில் திணைக்கள அலுவலர்களுக்கும் தொழில்தருநர்களுக்கும் ஊழியர்களுக்குமிடையில் பொருத்தமான உறவுமுறைகளைப் பேணுகின்ற வேளையில் ஊழியர் சேமலாப நிதியத்தின் சட்ட ரீதியான பொறுப்பாண்மைகளை நிறைவேற்றுவதற்கும் அளப்பரிய பங்களிப்பினை வழங்கிய தொழில் திணைக்கள அலுவலர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் பிரதானி உட்பட, இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வருடாந்த ஊழியர் சேமலாப நிதிய அறிக்கையானது தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகிய இருதரப்பினர்களுக்கும் அதேபோன்று நிருவாகம் மற்றும் நிதி நிறுவனங்களின் அலுவலர்களுக்கும் இத்துறையில் ஆர்வம் கொண்டுள்ள மாணவர்கள் உட்பட மற்றைய அனைத்து அக்கறைதாரர்களுக்கும் பயன்மிக்கதாக இருக்குமென நான் கருதுகிறேன்.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி
**தொழில் ஆணையாளர் நாயகம்**

# மூத்த முகாமைத்துவக் குழு
## 2021.12.31 உள்ளவாறு

### இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களம்

| பிரிவு | பதவி | பெயர் |
|---|---|---|
| கண்காணிப்பாளர்/ ஊ.சே.நி. அலுவலகம் | கண்காணிப்பாளர் | திரு. ஏ ஜி யு திலகரத்ன |
| | மேலதிகக் கண்காணிப்பாளர் | செல்வி எஸ் சி குணதீர |
| | மேலதிகக் கண்காணிப்பாளர் | திருமதி. டபிள்யு எல் எஸ் டபிள்யு ஜெயசுந்தர |
| | துணைக் கண்காணிப்பாளர் | திருமதி எஸ் எம் எல் சிறிவர்த்தன |
| | துணைக் கண்காணிப்பாளர் | திரு. எச் எஸ் விக்ரமசூரிய |
| | துணைக் கண்காணிப்பாளர் | திருமதி. டி பி ஏ என் டி பெரேரா |
| | துணைக் கண்காணிப்பாளர் | திரு. எஸ் ஜே கே குருகே |
| கூட்டாண்மைப் பணிகள் மற்றும் நிர்வாகப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. எம் எஸ் வித்தானகே |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே ஏ எஸ் ஏ குருபாராய்ச்சி |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டபிள்யு எம் ஏ பிரபாஷினி |
| சேகரிப்புப் பிரிவு மற்றும் பொதுமக்கள் தொடர்புகள், விசாரணைகள் பீடம் மற்றும் அழைப்பு நிலையம் | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. பி டபிள்யு விமல் சாந்த |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே எச் குணசேகர |
| நடைமுறைப் பங்களிப்புப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஜி பீ என் ஏ சமரநாயக்க |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஜி பி டி கவிரத்ன |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. ஐ சி ஜொனத்தன் |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி ஆர் எம் மென்டிஸ் |
| | முகாமைத்துவப் பயிலுநர் | திரு எஸ் ஐ ஏ வலவகே |
| கூற்றுப்படுத்தப்பட்ட பங்களிப்புப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஜி பீ என் ஏ சமரநாயக்கா |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. ஐ சி ஜொனத்தன் |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி ஆர் எம் மென்டிஸ் |
| | முகாமைத்துவப் பயிலுநர் | திரு எஸ் ஐ ஏ வலவகே |
| மீள்பதிவுப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஜி பீ என் ஏ சமரநாயக்க |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. ஐ சி ஜொனத்தன் |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி ஆர் எம் மென்டிஸ் |
| | முகாமைத்துவப் பயிலுநர் | திரு எஸ் ஐ ஏ வலவகே |
| இ-சேகரிப்புப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஆர் ஏ சி சி ரூபசிங்க |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. எம் வி டபிள்யு டி சொயிசா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எல் வி எம் என் அரஸ்குலரத்ன |
| நிதிய முகாமைத்துவப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எல் பி எஸ் பெரேரா |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. கே யு பீ தென்னக்கோன் |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. வி பிரபாகரன் |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி எல் டி எஸ் ஆர் குணசேகர |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | செல்வி. டி பி உடுகமகோறள |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. பி செந்தில்மாறன் |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. டபிள்யு எஸ் எச் குமாரசேன |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. டபிள்யு ஏ ஏ எஸ் சுமனதாச |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. டபிள்யு ஏ டபிள்யு என் வன்னியாராய்ச்சி |
| | முகாமைத்துவப் பயிலுநர் | திரு. டி எம் ஐ டபிள்யு திஸ்ஸநாயக்க |
| | முகாமைத்துவப் பயிலுநர் | திருமதி. ஈ ஏ சி எம் எதிரிசிங்க |
| | முகாமைத்துவப் பயிலுநர் | செல்வி கே வி டி சக்குனிக்கா |
| | முகாமைத்துவப் பயிலுநர் | செலவி கே ஏ டி சி கே கீரகல |

| | | |
|---|---|---|
| கணக்குகள் மற்றும் மீளிணக்கப்படுத்தல் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எம் திஸ்ஸநாயக்கா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | செல்வி டபிள்யு ஏ என் டி டயஸ் |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. ஏ கே சத்துரங்க |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. எம் பி எஸ் கல்யாண |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி எம் யற்றவர |
| பதிவேட்டுகள் முகாமைத்துவப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி வை எஸ் மகாஹெதரவத்த |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. பி கே டி பி எஸ் தசநாயக்க |
| | உதவிக் கண்காணிப்பாளர் | செல்வி டபிள்யு எம் எஸ் வீரகொடி |
| பதிவேட்டுத் திருத்தங்கள் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே எம் ஜி சி பண்டார |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. இ எம் எஸ் ஏகநாயக்க |
| | உதவிக் கண்காணிப்பாளர் | செல்வி எம் ஏ வி விஜேந்திரனி |
| | முகாமைத்துவப் பயிலுநர் | திருமதி. வை ஏ ஜே என் யாப்பா |
| | முகாமைத்துவப் பயிலுநர் | திரு. ரி சன்ஜீவன் |
| வீடமைப்புக் கடன் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. ஏ ஏ விமல் காமினி |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. கே ஏ டி எச் ஏ ராஜரத்ன |
| மீளளிப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டபிள்யு ஜி ஏ சி த சில்வா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. பி வி எம் சிறிவர்த்தன |
| மீளளிப்புக் கொடுப்பனவுகள் பிரிவு | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஜி ஜி என் எம் பெரேரா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. பி பிரேமசிறி |
| செயன்முறை மேம்படுத்தல் மற்றும் இயலாற்றல் அபிவிருத்திப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. யு பி ஜெயசிங்க |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. ரி ரி டி பீரிஸ் |
| | முகாமைத்துவப் பயிலுநர் | திருமதி ஆர் கே எம் பிரதிபானி |

## தொழில் திணைக்களம் (ஊ.சே. நிதியப் பிரிவு)

| பிரிவு | பதவி | பெயர் |
|---|---|---|
| | தொழில் ஆணையாளர் | திரு. டி பி கே ஆர் வீரகோன் |
| கோரல் | துணைத் தொழில் ஆணையாளர் | திருமதி. என் எம் வை துஷாரி |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. ஆர் எஸ் ஷியாமன் |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. ரி ரேவதி |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. மதுமதி டயநிதி |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. கே டி ஏ பி குணரத்ன |
| அறவிடல் | துணைத் தொழில் ஆணையாளர் | செல்வி ஏ எம் சிறியானி |
| | உதவித் தொழில் ஆணையாளர் | செல்வி ஏ எல் எச் ரூபிக்கா பத்மினி |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திரு. ஜி சி பி குமார |
| 30% கோரல் | துணைத் தொழில் ஆணையாளர் | திரு. எம் ஐ என் சந்தமாலி |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. கே ஆர் மெத்மா ரணசிங்க |
| தகவல் தொழில்நுட்பம் | துணைத் தொழில் ஆணையாளர் | செல்வி பீ நிரோஷினி |
| நிர்வாகம் | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. ஜே ஏ எம் ஒ விஜேயரத்ன |
| மத்திய கோப்பிடல் பிரிவு | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. ஜே ஏ அனுஷா சந்திரசேகர |
| இறந்த உறுப்பினர்களின் கோரல் | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. டி எம் ரி பி தசநாயக்கா |

# ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் (சட்டம்) நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி./ நிதியம்), ஓய்வூதிய நன்மைகளுக்கு உரித்தற்ற தனியார் துறை மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கான கட்டாயப் பங்களிப்பு ஓய்வுகால திட்டமொன்றாக விளங்குகின்றது. சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, தொழில் ஆணையாளர் நிதியத்தின் பொதுவான நிருவாகியாக செயற்படுகின்ற வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளராக செயற்படுவதற்கான அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்பாண்மைகள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் மூலம் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை அது ஆற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் வசதியளிக்கின்றது.

நிதியத்தின் உறுப்பினர்களுக்கான குறைந்தபட்ச கட்டாயப் பங்களிப்பு வீதம் அவர்களின் மொத்த மாதாந்த வருமானத்தில் 20 சதவீதமாக இருக்கும். தொழில்தருநர்களும் ஊழியர்களும் (உறுப்பினர்கள்) ஊ.சே. நிதியத்திற்கு உறுப்பினரின் மாதாந்த மொத்த வருவாயில் குறைந்தபட்சம் முறையே 12 சதவீதத்தினையும் 8 சதவீதத்தினையும் பங்களிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். சட்டத்தின் ஏற்பாடுகள் நியதிகளின்படி தொழில்தருநர்கள் அவர்களுடைய ஊழியர்களுக்கான ஊ.சே.நிதியப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவர்களாவர்.

ஊ.சே.நிதிய உறுப்பினர்கள் அவர்கள் ஓய்வூதிய வயதினை அடைந்ததும் அதாவது பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினை அடைந்ததும் அவர்களது ஓய்வுகால நன்மைகளை (பங்களிப்புக்கள் மற்றும் வட்டி) கோருவதற்கு தகுதியுடையவர்களாகவர். மேலும், உறுப்பினர்கள் தமது ஊ.சே.நிதியக் கணக்குகளிலுள்ள நிதிகளை புலம்பெயர்தல், நிரந்தரமாக ஊனமடைதல், திருமணம் காரணமாக தொழிலைவிட்டு விலகுதல் (பெண் உறுப்பினர்களுக்கு மாத்திரம்) மற்றும் ஓய்வூதியம் பெறத்தக்க தொழில்களில் இணைந்து கொள்ளுதல் போன்ற சந்தர்ப்பங்களில் நிதியினை மீளபெறத் தகுதியுடையவர்களாவர். மேலும், உறுப்பினரொருவர் மரணமடையும் சந்தர்ப்பத்தில் இறந்த உறுப்பினர்களின் சட்ட ரீதியான வாரிசுகள் நன்மைகளைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர். ஓய்வுகால நன்மைகளுக்குப் புறம்பாக, ஊ.சே.நிதிய உறுப்பினர்கள் வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள நிலுவைகளைப் பிணையாக வைத்து ஒப்புதலளிக்கப்பட்ட ஐந்து கடன்வழங்கல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்ள ஊ.சே.நிதியம் வசதியளிக்கின்றது. மேலும், 2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊ.சே.நிதிய (திருத்தச்) சட்டத்தில் வழங்கப்பட்டவாறு 10 ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பணிபுரிந்து ரூ.300,000 இற்கும் கூடுதலான தொகையினை ஊ.சே.நிதியத்தின் நிலுவைக் கணக்கில் வைத்திருக்கும் உறுப்பினர்கள் 2015 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வீடமைப்பு நிருமாண நோக்கங்களுக்காக உயர்ந்தபட்சம் ரூ.2 மில்லியன் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர்களது கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையில் 30 சதவீதம் வரையான தொகையினை மீளப்பெற உரித்துடையவர்களாவர்.

தமிழ்

# இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது தொழிற்பாடுகள்

உறுப்பினர் பங்களிப்புக்கள், மேலதிக விதிப்புக்கள், கட்டணங்கள் மற்றும் வருமானம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுதல்.

உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல் மற்றும் தனிப்பட்ட கணக்குகளின் வருடாந்தக் கூற்றுக்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

அதேவேளை நிதியத்தின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு இடர்நேர்வைச் சீர்படுத்துவதற்கான வருவாயை வழங்குவதற்கு சபை பொருத்தமானதாக கருதுகின்றவாறு மற்றும் அப்பிணையங்களை விற்பனை செய்கின்றவாறு ஊ.சே.நிதியச் சட்டத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக வேண்டப்படாத நிதியங்களை பிணையங்களில் முதலிடுதல்.

மாண்புமிகு தொழில் அமைச்சர் மற்றும் மாண்புமிகு நிதி அமைச்சர் ஆகியோரின் சம்மதத்துடன் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு வீதத்தில் உறுப்பினர் கணக்குகளுக்கு ஆண்டு வட்டியை வரவு வைத்தல்.

பொதுக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தல்.

தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதங்களிற்கிணங்க மீளளிப்பு நன்மைகளை மேற்கொள்ளுதல்.

வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் தொடர்பான கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு வரவு மீதிகள் தொடர்பான சான்றிதழ்களை வழங்குதல்.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மாண்புமிகு தொழில் அமைச்சருக்கும் மாண்புமிகு நிதி அமைச்சருக்கும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முதலீட்டுக் கூற்றுக்கள் போன்ற தகவல்களைச் சமர்ப்பித்தல்.

உறுப்பினர் கணக்குகளிலுள்ள பெயர்களை அவர்களது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு மீளப்பதிவு செய்தல்.

தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதங்களிற்கிணங்க 30 சதவீத மீளளிப்புக்களை மேற்கொள்ளுதல்.

உறுப்பினர் கணக்குகளின் விபரங்களிலுள்ள பிழைகளைத் திருத்துதல்.

# தொழில் ஆணையாளரின் தொழிற்பாடுகள்

நிறுவனங்களையும் ஊழியர்களையும் நிதியத்தில் பதிவுசெய்தல்.

தொழில்தருநர்களிடமிருந்து செலுத்தத் தவறிய கொடுப்பனவுகளை அறவிட்டுக் கொள்ளுதல்.

தொழிலாளர்களுக்கு நன்மைகளின் கொடுப்பனவிற்கான கொடுப்பனவுகள் கட்டளைகளை வழங்குதல்.

ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியங்களை மேற்பார்வை செய்தல்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றத்திற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.



## பிரிவு ஆ

# கூட்டாண்மை பொதுநோக்கு

# எமது தொலைநோக்கு

“எமது உறுப்பினர்கள் ஒரு நிறைந்த ஓய்வுகால வாழ்க்கையை வாழச் செய்வதனை இயலச்செய்யும் விதத்தில் இப்பிராந்தியத்தில் மிக அக்கறை கொண்ட ஓய்வுகால நிதியமாகத் திகழச் செய்தல்”

# எமது பணி

"முன்மதியும்
நவீனத்துவமும் கொண்ட
முகாமைத்துவத்தினூடாக
எமது உறுப்பினர்களுக்கு
உயர்ந்தபட்ச ஓய்வுகால
நன்மைகளையும்
வினைத்திறன்மிக்க
பணிகளையும் வழங்குதல்"

# பயணத்தின் மைல்கற்கள்

**1958**

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் இயற்றப்பட்டது

நிதியத்திற்கான ஊ.சே.நிதியப் பங்களிப்பு வீதமாக ஊழியர்களினால் 4 சதவீதமும் தொழில்தருநர்களினால் 6 சதவீதமும் செலுத்தப்பட்டது

**1971**

ஊ.சே. நிதியத்திற்கான பங்களிப்பு வீதம் ஊழியர்களைப் பொறுத்தவரை 4 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கும் தொழில்தருநர்களைப் பொறுத்தவரை 6 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது

**1981**

ஊ.சே.நிதியப் பங்களிப்பு வீதம் ஊழியர்களைப் பொறுத்தவரை 8 சதவீதத்திற்கும் தொழில்தருநர்களைப் பொறுத்தவரை 12 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது

**1988**

ஊழியர்கள் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்வழங்கல் நிறுவனங்களிலிருந்து வீடமைப்பு கடனைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் உறுப்பினர்கள் தமது ஊ.சே.நிதியத்தினைப் பிணையாக வைப்பதற்கான வசதியளிக்கப்பட்டது

**1996**

இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பினைத் தொடர்ந்து ஊ.சே. நிதியத்தில் ஏஎஸ் 400 கணனி முறைமை நடைமுறைக்கிடப்பட்டது

**1998**

நாட்டின் 50ஆவது சுதந்திரதின ஆண்டு நிறைவினைக் குறிக்குமுகமாக பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கண்காட்சியில் முதற்றடவையாக "உறுப்பினர் நிலுவைக் கூற்றுக்கள்" வழங்கப்பட்டன

**1999**

ஊ.சே.நிதிய மீளளிப்பு தன்னியக்கப்படுத்தலுக்கு அதிகாரமளித்தல் செய்முறை

தொழில் திணைக்களத்திற்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் தொடர்பூட்டல் இணைப்பு நிறுவப்பட்டது

தீர்மானக் கடிதங்களை இலத்திரனியல் ரீதியாக மாற்றல் செய்வது முன்னெடுக்கப்பட்டது

மாவட்ட தொழில் அலுவலகங்களை இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களத்துடன் இணைக்கும் வேலைகள் கண்டி தொழில் திணைக்களத்தினை இணைத்ததன் மூலம் ஆரம்பமாயிற்று

**2000**

ஊ.சே.நிதியக் கோரல் செய்முறையினை விரைவுபடுத்துவதற்காக புதிய கணனி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது

அரையாண்டு உறுப்பினர் நிலுவைக் கூற்றுக்களின் வழங்கல் ஆரம்பமானது

**2001**

ஊ.சே.நிதியக் கொடுப்பனவுச் செய்முறை மாவட்ட தொழில் அலுவலகங்களுக்குப் பன்முகப்படுத்தப்பட்டது

ஊ.சே.நிதியத் திணைக்களம்

# தொழில் நிலைக்களம்

## 2002
இலத்திரனியல் மூலமாக பங்களிப்புக்களைச் சேகரிப்பது முன்னெடுக்கப்பட்டது

## 2006
பொதுப் பேரேடு, முதலீடு மற்றும் இருப்பு மாதிரிகளுடன் சப் ஈசிசி5 நடைமுறைப்படுத்தப்பட்டது

## 2007
ஊ.சே.நிதிய அலுவல்சார் வெப்தளம் மூன்று மொழிகளிலும் ஆரம்பிக்கப்பட்டது

## 2008
உறுப்பினர்களை மீளப் பதிவுசெய்தல்

நாட்டின் 60ஆவது சுதந்திர ஆண்டு நிறைவினைக் குறிக்கு முகமாக உறுப்பினர் நிலுவைகளையும் தகவல்களையும் வெப்தளத்தினூடாகவும் நடமாடும் சேவைகளூடாகவும் பரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பமாயின

## 2011
மத்திய, இரட்டைப் பதிவு பேரேட்டு முறைமைகளுடன் உறுப்பினர் பொறுப்பு முறைமையின் மீள்பொறியியற்படுத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளூடாக ஊ.சே.நிதியக் கணனி வழி அதேநேரக் கொடுப்பனவு வசதி அறிமுகப்படுத்தப்பட்டது

ஊ.சே.நிதியத்தின் பெறுமதி ரூ.1 றில்லியன் மட்டத்தினை அடைந்தது

## 2012
ஊ.சே.நிதியச் சட்டம் திருத்தப்பட்டதுடன், 2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊ.சே.நிதிய (திருத்தச்) சட்டத்தின் பிரிவு இல.23அ சேர்க்கப்பட்டது

இலத்திரனியல் ஊடகமூடாக ஊ.சே.நிதிய விபரங்களை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டது

## 2013
செலுத்தத் தவறிய கொடுப்பனவுகளையும் நீதிமன்ற வழக்குகளையும் கண்காணிப்பதற்காக புதிய கணனி மயப்படுத்தப்பட்ட முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது

## 2015
ஊ.சே.நிதிய 30 சதவீதக் கோரல் செய்முறை நிறுவப்பட்டது

வீடமைப்பு மற்றும் மருத்துவ நோக்கங்களுக்காக 30 சதவீதம் கொண்ட ஓய்விற்கு முன்னரான மீளளிப்பு முன்னெடுக்கப்பட்டது

இ-பதிவேட்டு அறை நடைமுறைப்படுத்தப்பட்டது

## 2016
கணனிவழி அதேநேர உறுப்பினர் தகவல் சரிபார்ப்பு பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது 100 சதவீதம் தன்னியக்கச் செய்முறையினையும் உறுப்பினர் கணக்குகளின் அதேநேர இற்றைப்படுத்தலையும் கொண்டு வந்தது

## 2017
மக்கள் வங்கியுடன் பங்களிப்புச் சேகரிப்புக்கள் நாடளாவிய ரீதியில் பன்முகப்படுத்தப்பட்டன

ஊ.சே.நிதியத்தின் பெறுமதி ரூ.2 றில்லியன் மட்டத்தினை அடைந்தது

## 2021
ஊ.சே நிதியத்தின் பெறுமதி ரூ. 3 றில்லியன் மட்டத்தை அடைந்தது.

இணையவழி பங்களிப்பு தளமொன்றுடன் ஊ.சே.நிதியத்தின் அலுவல்சா வெப்தளத்தை மீளத்தொடங்குதல்



# நிதியியல்

## முக்கிய பண்புகள் - 2021

பங்களிப்புக்கள்
ரூ.165.7 பில்

உறுப்பினர் நிலுவைகளுக்குச் செலுத்தப்பட்ட வட்டி வீதம் 9.00%

மொத்த வருமானம்
ரூ. 342.4 பில்

சராசரி முதலீடு மீதான வருவாய்
11.40%

நிதியத்தின் மொத்தத்தேறிய பெறுமதி
ரூ.3,166.1 பில்

மீளளிப்புக் கொடுப்பனவுகள்
ரூ.118.2 பில்

தொழிற்பாட்டுச் செலவினம்
ரூ.1.6 பில்

தேறிய பங்களிப்புக்கள்
ரூ.47.5 பில்

உறுப்பினர் நிலுவைகளுக்கு வரவு வைக்கப்பட்ட வட்டி
ரூ.251.8 பில்

மொத்த வருமானத்தின் ஒரு சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவினங்கள்
0.48%

வருமான வரிச் செலவினம்
ரூ.41.7 பில்

தேறிய வருமானம்
ரூ.299.1 பில்


69.928
31.012
26.417

## வரைபடம் 01 நிதியத்தின் வளர்ச்சி




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| தேறிய சொத்துக்கள் (ரூ.பில்.) | 2,066 | 2,289 | 2,540 | 2,824 | 3,166 |
| வளர்ச்சி வீதம் | 12.2 | 10.8 | 11.0 | 11.2 | 12.1 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 02 பங்களிப்புக்கள், மீளளிப்புக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள்




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 133.4 | 145.0 | 157.2 | 150.7 | 165.7 |
| மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 117.5 | 108.0 | 126.3 | 109.7 | 118.2 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 15.9 | 37.0 | 30.9 | 41.0 | 47.5 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 03 உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்பவை (மில்.) | 2.8 | 2.9 | 2.9 | 2.6 | 2.5 |
| பங்களிக்காதவை (மில்.) | 15.3 | 15.9 | 16.5 | 17.1 | 17.8 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 04 முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு




| உள்ளமைப்பு | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| அரச பிணையங்கள் | 91.3 | 92.2 | 93.8 | 93.4 | 93.2 |
| பங்குரிமை | 4.2 | 3.3 | 3.0 | 2.8 | 3.8 |
| தொகுதிக் கடன்கள் மற்றும் ஏனையவை | 4.5 | 4.5 | 3.2 | 3.8 | 2.9 |

அரச பிணையங்கள் பங்குரிமை தொகுதிக் கடன்கள் மற்றும் ஏனையவை

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 05 சராசரி முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வருவாய்




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டு வருமானம் (ரூ.பில்.) | 222.6 | 222.4 | 259.0 | 285.4 | 342.2 |
| முதலீடு மீதான வருவாய் (%) | 11.8 | 10.4 | 10.7 | 10.6 | 11.4 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 06 உறுப்பினர் கணக்குகளின் இறுதி நிலுவைகளில் வரவு வைக்கப்பட்ட வட்டி




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட வட்டி (ரூ.பில்.) | 191.2 | 194.6 | 210.4 | 227.3 | 251.8 |
| வட்டி வீதம் (%) | 10.50 | 9.50 | 9.25 | 9.00 | 9.00 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 07 உறுப்பினர் நிலுவைகளுக்கான வருவாயின் பயனுறு வீதம் எதிர் சந்தை வீதங்கள்




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
ஆண்டறிக்கை - 2019, இலங்கை மத்திய வங்கி


610.46M
577.18M
501.44M
490.92M
430.60M
384.78M
331.19M
192.95M
103.69M
75.15M

# தொழிற்பாட்டின் முக்கிய அம்சங்கள் 2021

2021 காலப்பகுதியில் முதலீடுகள்

- திறைசேரி முறிகளில் ரூ.382.7 பில்லியன்
- திறைசேரி உண்டியல்களில் ரூ.12.1 பில்லியன்
- நிலையான வைப்புக்களில் ரூ.55.0 பில்லியன்

2021 இறுதியில் எண் தொகைகள்:

- உறுப்பினர் கணக்குகள் - 20.3 மில்லியன்
- பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகள் - 2.5 மில்லியன்
- தொழில்தருநர்கள் - 71,203
- தேசிய அடையாள அட்டையின் பெயர்களின்படி மீளப் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் - 1.66 மில்லியன்
- வீடமைப்புக் கடன் உத்தரவாதச் சான்றிதழ்களை பெற்றவர்களின் எண்ணிக்கை - 9,068 உறுப்பினர்கள்

ஓய்வுகால நன்மைகள்:

- பெறுமதி - ரூ.118.2 பில்லியன்
- நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை - 179,681

ஓய்வுகாலத்திற்கு முன்னைய நன்மைகள்:

- பெறுமதி - ரூ.8.8 பில்லியன்
- நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை - 16,554

இ-திரட்டு முறைமை:

- பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களின் எண்ணிக்கை - 11,260 (2021 இறுதியளவில்)
- செயற்படுகின்ற உறுப்பினர் கணக்குகளில் 88 சதவீதம்
- மொத்த மாதாந்த ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களில் 88 சதவீதம்

தொழில்தருநர், உறுப்பினர் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் தொடர்பான விசாரணைகள்:

- வருகைதந்தோர் - 96,561
- கடிதங்கள் - 76,759
- அழைப்புகள் - 50,071
- மின்னஞ்சல்கள் - 11,059

விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்:

- கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்டன
- நடமாடும் பணிகள் - 01

தொழில் திணைக்களம்:

- ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான உறுப்பினர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நடமாடும் சேவைகளை நாடளாவிய ரீதியில் நடத்தியமை, சிற்றேடுகளின் விநியோகம் மற்றும் பல்வேறு ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியமை.
- பொதுமக்களிடையே விழிப்புணர்வினை உருவாக்கும் பொருட்டு ஊழியர் சேமலாப நிதியத்தின் தகவல்களைக் கொண்ட காட்சிப்படுத்தல் பலகைகளை நிறுவியமை.

தொழில் திணைக்களம்:

- முதன்மை தரவுகளாக தேசிய அடையாள அட்டை இலக்கத்தை கருத்திற்கொண்டு ஊ.சே. நிதியத்திலுள்ள ஊழியர்களை பதிவுசெய்தலுடன் தொடர்புடைய 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்தி பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க பணியை வழங்கும் பொருட்டு குறுஞ்செய்தியொன்றின் மூலமாக ஊழியரின் ஊ.சே.நி கணக்கிற்கான மாதாந்த வரவுகளை அறிவித்தல்.
- மாவட்ட அலுவலகங்களுக்கான 30 சதவீத நன்மைத் திட்டத்தை மேலும் பன்முகப்படுத்தியமை.

# 1

# ஊ.சே. நிதியச் செயலாற்றத்தின் மீளாய்வு - 2021

## 1. அறிமுகம்

நிதியத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் 2021 இறுதியில் ரூ.3,166.1 பில்லியனை அடைந்து 2020 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,824.3 மில்லியனை விட 12.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2021 இறுதியில் 20.3 மில்லியனாகக் காணப்பட்டது. 2021 இறுதியில் பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2.5 மில்லியனாக அமைந்து 2020இன் 2.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 3.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டிய வேளையில் 2021 இறுதியில் பங்களிக்காத உறுப்பினர் கணக்குகள் 2020இன் 17.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 17.8 மில்லியனாகக் காணப்பட்டன. அதேவேளை, பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2020 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 89,853 இலிருந்து 2021 இறுதியில் 71,203 இற்குக் குறைவடைந்து 20.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

### 1.1 உறுப்பினர் பங்களிப்புக்கள் மற்றும் ஓய்வுகால நன்மைகளின் கொடுப்பனவுகள்

2021ஆம் ஆண்டுப்பகுதியில், உறுப்பினர் பங்களிப்புக்கள் 2020ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.150.7 பில்லியனிலிருந்து ரூ.165.7 பில்லியனுக்கு 9.9 சதவீதத்தினால் அதிகரித்தன. உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் மீளளிக்கப்பட்ட மொத்தத் தொகை 2021இல் ரூ.118.2 பில்லியனாக விளங்கி 2020இல் மீளளிக்கப்பட்ட ரூ.109.7 பில்லியனை விட 7.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. ஆண்டுப்பகுதியில் மீளளிப்புக்களின் மொத்த தொகையானது செலுத்தப்பட்ட 30சதவீத மீளளிப்பு தொகையும் ரூ.8.8 பில்லியனாக காணப்பட்ட கிரமமான மீளளிப்புக்களான ரூ.109.4 பில்லியனையும் உள்ளடக்கியது. 2021ஆண்டுபகுதியில் மீளளிப்பு கோரல்களின் மொத்த எண்ணிக்கை 179,681ஆக காணப்பட்டது. இது 2020இல் பதிவுசெய்யப்பட்ட 197,401 உடன் ஒப்பிடுகையில் 9.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினை எடுத்துக்காட்டியது. இதன்படி, தேறிய பங்களிப்பானது (மீளளிப்புக்களைக் கழித்த மொத்தப் பங்களிப்புக்கள்) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.41.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.47.5 பில்லியனுக்கு 15.9 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021இல் பதிவுசெய்யப்பட்ட தேறிய பங்களிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மீளளிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பை விடவும் பங்களிப்பில் ஏற்பட்ட உயர்வான அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்தது.

### 1.2 ஊ.சே. நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

நிலையான வைப்புக்கள் உட்பட அரசப் பிணையங்கள், பட்டியலிடப்பட்டதும் பட்டியலிடப்படாததுமான பங்குரிமை மூலதனங்கள், கூட்டாண்மை தொகுதிக்கடன்கள் மற்றும் பணச் சந்தை முதலீடுகள் போன்றவற்றை உள்ளடக்கிய நிதியத்தின் முதலீட்டு சொத்துப்பட்டியல் அட்டவணை 1 மற்றும் வரைபடம் 8இல் காட்டப்பட்டவாறு 2020இன் இறுதியில் ரூ.2,829.5 பில்லியனிலிருந்து 2021இன் இறுதியில் 3,173.3 பில்லியனுக்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்தது.

முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு ரூ.299.1 பில்லியன் கொண்ட தேறிய வருமானமும் ரூ.47.5 பில்லியன் கொண்ட தேறிய உறுப்பினர்

**அட்டவணை 1** **முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2017 - 2021**

| சொத்து வகுப்பு | தொகை ரூ. பில்லியனில் | | | | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2018** | **2019** | **2020** | **2021** |
| அரச பிணையங்கள் | 1,818.6 | 2,119.2 | 2,390.4 | 2,642.9 | 2,958.8 |
| பங்குரிமை மூலதன முதலீடு | 84.3 | 74.9 | 75.4 | 79.9 | 121.1 |
| கூட்டாண்மைத் தொகுதிக் கடன்கள் | 38.7 | 43.7 | 41.9 | 34.9 | 24.0 |
| நிலையான வைப்புக்கள் | 48.0 | 33.6 | 25.0 | 55.8 | 57.2 |
| நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய முதலீடுகள் | 2.7 | 27.4 | 16.0 | 16.0 | 12.3 |
| **முழுமொத்தம்** | **1,992.4** | **2,298.8** | **2,548.7** | **2,829.5** | **3,173.4** |

பங்களிப்புகளும் முக்கியமாகப் பங்களித்தன. அரச பிணையங்களில் முதலீட்டின் திரட்சி 2020இன் 93.4 சதவீதத்திலிருந்து 2021 இறுதியில் 93.2 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியது. எனினும், பங்குரிமை மூலதனத்தில் முதலீடுகளின் உள்ளமைப்பும் 2020இன் 2.8 சதவீதத்திலிருந்து 2021இல் 3.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2021 இறுதியில் கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் மற்றும் குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடுகள் சொத்துப்பட்டியலில் முறையே 0.8 சதவீதத்திற்கும் 1.8 சதவீதத்திற்கும் வகைகூறின. தவணை மற்றும் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் துணைநில் வைப்பு வசதி என்பனவற்றிலுள்ள முதலீடுகளை உள்ளடக்கிய நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் வெளிநின்ற மொத்தமாக 2021 இறுதியில் மொத்தச் சொத்துப்பட்டியலில் 0.4 சதவீதத்திற்கு வகைகூறியது.

வரைபடம் 08 முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2017 - 2021




மூலம்: ஊ.சே நிதியத்திணைக்களம். இலங்கை மத்திய வங்கி

### 1.2.1 அரச பிணையங்களின் சொத்துப்பட்டியல்

திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களை உள்ளடக்கிய அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல் 2020இன் இறுதியின் ரூ.2,642.9 பில்லியனிலிருந்து 2021இன்

**அட்டவணை 2** **திறைசேரி முறிகள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு - 2021 இறுதியிலுள்ளவாறு**

| முதிர்ச்சிக்காலம் | முதிர்ச்சிப் பெறுமதி (ரூ. மில்லியன்) | பங்கு (%) | சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு (%) |
|---|---|---|---|
| 1 ஆண்டிற்கும் குறைவானது | 144,212.7 | 5.0 | 7.73 |
| 1 - 2 ஆண்டுகள் | 357,622.3 | 12.3 | 8.82 |
| 3 - 4 ஆண்டுகள் | 592,422.7 | 20.4 | 10.32 |
| 5 ஆண்டுகளுக்குக் கூடுதலானது | 1,809,671.8 | 62.3 | 11.49 |
| **மொத்தம்** | **2,903,929.5** | **100.0** | **10.73** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

இறுதியில் ரூ.2,958.8 பில்லியனுக்கு 12.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில், ஊ.சே.நிதியம் அரச பிணையங்கள் சொத்துப்பட்டிலின் மீது ரூ.285.3 பில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை ஈட்டி நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானத்தின் 83.4 சதவீதத்தைப் பிரதிபலித்தது. 2021இல், திறைசேறி முறி சொத்துப்பட்டியலின் நிறையேற்றப்பட்ட சராசரி நடைமுறை விளைவு 10.73சதவீதமாகக் காணப்பட்டது. அட்டவணை 2இல் தரப்பட்டுள்ள முதிர்ச்சி தோற்றப்பாற்கமைவாக, 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட முதிர்ச்சிக்காலத்தை கொண்டமைந்து முதிர்ச்சிக் காலத்துடன் கூடிய திறைசேரி முறி சொத்துப்பட்டியலின் 62 சதவீதத்திற்கும் அதிகமாக ஊ.சே.நிதியம் நீண்ட கால முதிர்ச்சிகளில் முதலீடு செய்ய முன்னுரிமையளிப்பதனைப் பிரதிபலித்தது.

### 1.2.2 பங்குரிமைச் சொத்துப்பட்டியல்

பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்கள் இரண்டையும் உள்ளடக்குகின்ற ஊ.சே. நிதியத்தின் பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் பெறுமதி 2020இன் இறுதியின் ரூ.79.9 பில்லியனிலிருந்து 2021இன் இறுதியில் ரூ.121.1 பில்லியனுக்கு 51.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு சந்தை விலைக்குறிப்பீட்டு அடிப்படையில் அறிக்கையிடப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் பெறுமதியில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பு காரணமாக அமைந்தது. பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனங்களின் பெறுமதி 2020இன் இறுதியின் ரூ.70.8 பில்லியனிலிருந்து 2021இன் இறுதியில் 112.0 பில்லியனிற்கு 58.1 சதவீதத்தினால் அதிகரித்தது. செலவு அடிப்படையில் கொண்டுசெல்ல பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் அத்தகைய முதலீடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கள் இடம்பெறாமையினால் மாற்றமடையவில்லை. ஊ.சே.

வரைபடம் 09
சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் 2021 இறுதியிலுள்ளவாறு பட்டியலிடப்பட்ட பங்குரிமைச் சொத்துப்பட்டியலின் துறைவாரியான உள்ளமைப்பு




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

நிதியத்தின் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலானது வங்கிகள், மூலதனப்பொருட்கள், நுகர்வோர் பணிகள், மூலப்பொருட்கள் போன்ற வேறுபட்ட துறைகளில் தொழிற்படுகின்ற பல கம்பனிகளின் முதலீடுகளை உள்ளடக்கியிருந்தன. சந்தைப் பெறுமதியில் 2020 சனவரி 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையால் பின்பற்றப்படும் உலகளாவிய தொழித்துறை வகைப்படுத்தல் முறைமைக்கமைவாக ஊ.சே. நிதியத்தின் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதன சொத்துப்பட்டியலின் விபரங்கள் வரைபடம் 9இல் தரப்பட்டுள்ளது. ஊ.சே. நிதியம் அதன் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலில் 22.0 சதவீதத்தினை வங்கித்தொழில் துறையில் வைத்திருப்பதுடன் அது 2021ஆம் ஆண்டுப்பகுதியில் பின்னடைவினைக் காட்டியது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ஊ.சே.நிதியத்தின் பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் 42.2 பில்லியன் கொண்ட தேறிய இலாபத்தையும் 6.7 பில்லியன் கொண்ட பங்குலாபத்தையும் பதிவுசெய்தது.

### 1.2.3 கூட்டாண்மைப் படுகடன் சொத்துப்பட்டியல்

ஊ.சே.நிதியமானது கூட்டாண்மைத் தொகுதிக்கடன்கள், நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்கள் மற்றும் முதலீட்டுத் தரத்தினைக் கொண்ட கம்பனிகளினால் வழங்கப்படும் ஈடுகளினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் போன்ற படுகடன் சாதனங்களில் முதலிடுகின்றது. இதற்கமைய, 2021 காலப்பகுதியில், குறைந்த வட்டி வீதக் கட்டமைப்பைக் கருத்திற்கொண்டு, கூட்டாண்மைத் தொகுதிக்கடன்களிலுள்ள முதலீட்டு வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை ஊ.சே. நிதியத்தின் கூட்டாண்மைப் படுகடன் சொத்துப்பட்டியலின் கொடுகடன் இடர்நேர்வினைத் தணிப்பதற்கு சிறந்த கடன் தரப்படுத்தல்களுடன்கூடிய கூட்டாண்மைகளில் முதலீடு செய்வதற்கான தேவையையும் ஊ.சே.நிதியத் திணைக்களம் உணர்ந்திருந்தது. 2021 இறுதியிலுள்ளவாறு நிதியத்தின் கூட்டாண்மைத் தொகுதிக்கடன் சொத்துப்பட்டியல் ஏட்டுப்பெறுமதியில் ரூ.24.0 பில்லியனாக விளங்கி, மொத்தச் சொத்துப்பட்டியலில் 0.8 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. கூட்டாண்மைப் படுகடன் சொத்துப்பட்டியலின் மீது ரூ.3,968.7 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை நிதியம் ஈட்டிக் கொண்டதுடன் இவ்வாண்டுப்பகுதியில் சராசரி சொத்துப்பட்டியல் மீதான ஆதாய வீதம் 13.49 சதவீதமாகக் காணப்பட்டது.

### 1.2.4 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்

நிதியத்தின் திரவத்தன்மையை முகாமைப்படுத்துகின்ற விதத்தில், இலங்கை மத்திய வங்கியின் மீள்கொள்வனவுச் சந்தையிலும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு மையத்திற்கும் நிதியங்கள் முதலீடு செய்யப்படுகின்றன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில், மீள்கொள்வனவு ஒப்பந்த கொடுக்கல்வாங்கல்களிலிருந்து நிதியம் ரூ.544.5 மில்லியன் கொண்ட வட்டி வருமானமொன்றினை ஈட்டிக் கொண்டது. இது 2020இல் ரூ.521.0 மில்லியனாகக் காணப்பட்டது.

### 1.2.5 நிலையான வைப்புக்கள்

நாணயச் சபையினால் வழங்கப்படும் விசேட ஒப்புதலின் அடிப்படையில், ஊ.சே. நிதியம் உயர்ந்தபட்சம் ஓராண்டு முதிர்ச்சிக் காலத்துடன் மூன்று அரச வங்கிகளில் குறுங்கால நிலையான வைப்புக்களில் அதன் நிதியினை முதலீடு செய்துள்ளது. 2021 இறுதியில் வெளிநின்ற நிலையான வைப்பு முதலீடுகள் ரூ.57.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது மொத்தச் சொத்துப்பட்டியலில் 1.8 சதவீதத்திற்குச் சமமானதாகக் காணப்படுகின்றது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.3,856.6 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை ஈட்டிக்கொண்டது.

### 1.2.6 நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம்

2021இல் நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் ரூ.342.2 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் அத்தகைய வருமானத்துடன் ஒப்பிடுகையில் 19.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது (அட்டவணை 3). முதலீட்டு வருமானத்தின் 85.8 சதவீதம் கொண்ட வட்டி வருமானம் நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக விளங்கியதுடன் இது 2020இன் ரூ.277.4 பில்லியனிலிருந்து 2021இல் ரூ.293.7 பில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், பங்குரிமை மூலதன சொத்துப்பட்டியலிலிருந்து உருவாக்கப்பட்ட பங்குலாப வருமானம் 2020இல் ஈட்டப்பட்ட 2,985.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.6,685.5 மில்லியனாகப் பதிவாகியது. மேலும், ஊ.சே. நிதியத்தின் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனத்தின் சொத்துப்பட்டியலில் 2020இல் ஈட்டப்பட்ட ரூ.5.0 பில்லியன் கொண்ட தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் ரூ.41.8 பில்லியன் கொண்ட வரவேற்கத்தக்க தேறிய இலாபத்தைப் பதிவுசெய்தது. இதற்கு 2021 இறுதியில் பங்குச் சந்தையின் செயலாற்றம் மேம்பட்டமையே காரணமாகும்.

## 1.3 ஊ.சே. நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான ஆளுகைக் கட்டமைப்பு

ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு ஆளுகை அமைப்பின் மிக இன்றியமையாத பகுதியொன்றாகக் கருதப்படுகின்றது. இதற்கு, நிதியத்தின் கட்டுக்காப்பாளராக விளங்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை இறுதி அதிகாரத்தைக் கொண்டுள்ளது. நிதியியல்சார் மற்றும் நிதிசாரா இடர்நேர்வுகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கி, நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளும் மத்திய வங்கியின் இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பினுள் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மேலும், ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளின்

அட்டவணை 3 நிதியத்தின் முதலீட்டு வருமானம்

| வருமான மூலங்கள் | 2020 தொகை (ரூ. மில்லியன்) | 2021 தொகை (ரூ. மில்லியன்) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| வட்டி | 277,409 | 293,678 | 5.9 |
| பங்குலாபங்கள் | 2,985 | 6,685 | 124.0 |
| இலாபம் அல்லது நட்டமூடாகச் சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்) | 5,023 | 41,840 | 733.0 |
| நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு | 1.6 | (1.0) | (161.8) |
| **மொத்தம்** | **285,419** | **342,203** | **19.9** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

தமிழ்

இறுதித் தீர்மானத்தினை மேற்கொள்கின்ற சபையாக விளங்கும் நாணயச் சபை, ஊ.சே.நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான கொள்கை நெறிமுறைகளை வழங்குவதுடன் இடர்நேர்வினை ஏற்கும் தன்மை மற்றும் நிதியம் முகாமைப்படுத்தப்பட வேண்டிய இடர்நேர்வுகளை தாங்கிக் கொள்ளக்கூடிய மட்டம் போன்ற ஒட்டுமொத்த இடர்நேர்வுகளின் அளவுகளையும் குறித்துரைக்கிறது. நாணயச் சபை, ஊ.சே.நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பின் ஆளுகையினைப் பலப்படுத்தும் பொருட்டு, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் ஊ.சே.நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழு என்ற பெயரிலான இரண்டு உயர்மட்டக் குழுக்களின் மேற்பார்வையினூடாகத் தொடர்பான செயன்முறைகளை நிறுவியிருக்கிறது.

சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவானது இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக இருப்பதுடன் ஊ.சே.நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழு நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்பான உயர் மட்ட மேற்பார்வை அதிகாரங்களின் வழங்குகின்றது. ஊ.சே. நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் வகிபாகமானது நிதியத்தின் முகாமைத்துவத்திற்கான உபாயங்களையும் கொள்கை வழிகாட்டல்களையும் வழங்குவதன் மூலம் ஊ.சே. நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதாகும். மேலும், ஊ.சே.நிதியத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளின் நாளாந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தொழிற்பாடு தொடர்பான அதிகாரங்கள் திணைக்கள மட்டக் குழுவான ஊ.சே. நிதிய முதலீட்டுக் குழுவிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. ஊ.சே.நிதியத்தின் நிதிய முகாமைத்துவப் பிரிவின் நடுவரங்க அலுவலகம் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருப்பதுடன் தொடர்ச்சியான அடிப்படையில் முதலாவது அடுக்குப் பாதுகாப்பாக நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளை கண்காணித்து நிதியத்தின் செயலாற்றத்தை கண்காணிக்கின்றது. மேலும், ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் முதலீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை நடைமுறைப்படுத்துவதை கண்காணிப்பதற்கு நடுவரங்க அலுவலகம் பொறுப்புமிக்கதாக காணப்படுகின்றது. அதற்கமைவாக, முதலீட்டு கொள்கை அறிக்கை, மூலோபாய சொத்து ஒதுக்கீடு மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்கள் ஆகியவற்றில் வழங்கப்பட்ட அளவுருக்களுக்கேற்ப முதலீட்டு நடவடிக்கைகளின் வர்த்தகத்திற்கு முந்திய மற்றும் வர்த்தகத்திற்கு பிந்திய இணங்குவித்தல்கள் கண்காணிக்கப்படுவதுடன் இடர்நேர்வு ஏதேனும் இருப்பின், மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவத்திற்கு அவற்றை இற்றைப்படுத்துதற்கு வழக்கமான இடர்நேர்வு அறிக்கை நடைமுறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், நிதியியலல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு எனப்படும் தனியான குழுவொன்றினூடாக ஒட்டுமொத்த ஊ.சே.நிதியத் திணைக்களத்தினதும் நடவடிக்கைகளுடன் தொடர்பான நிதியல்லா இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கான தனியான பொறிமுறையொன்று நடைமுறையிலுள்ளது.

இரண்டாவது பாதுகாப்பு அடுக்காக இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களமானது தொழிற்படுவதுடன் சுயாதீனமான மதிப்பீட்டின் மூலம் முதலீட்டு ஆளுகைச் செயன்முறைக்கான கொள்கை கட்டமைப்பை வழங்குதல், ஊ.சே.நிதியத்திற்கு இடர்நேர்வு கட்டுப்பாட்டு வழிமுறைகளை பரிந்துரைத்தல், ஊ.சே. நிதியத்தின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் இணைந்து காணப்படும் இடர்நேர்வுகள் மற்றும் இணங்குவித்தலை ஊ.சே.நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழு, நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் நாணயச் சபை ஆகியவற்றுக்கு அறிக்கையிடல் ஆகியவற்றுக்கு பொறுப்பாக இருக்கிறது. இதற்கமைய, தற்போதுள்ள வேலை நடவடிக்கை முறைகளை மேம்படுத்துவதற்காகவும் முதலீட்டுத் தீர்மானத்தினை மேற்கொள்ளும் செய்முறை தொடர்பில் பெருமளவு சுயாதீனத்தினை வழங்குகின்ற வேளையில் உள்ளகக் கட்டுப்பாடுகளைப் போதுமான மட்டத்தில் பேணுவதற்கும் இற்றைப்படுத்தப்பட்ட சந்தை மற்றும் ஊ.சே.நிதியத் தேவைப்பாடுகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் முதலீட்டுக் கொள்கை கூற்று உபாயச் சொத்து ஒதுக்கு மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களைத் திருத்தி இற்றைப்படுத்துவதனூடாக முதலீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான ஏற்புடைய இயைபான கொள்கைப் பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினால் கையாளப்படுகின்றன. மேலும், இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம், ஊ.சே.நிதிய திணைக்களத்தின் நிதியல்லா இடர்நேர்வுகளை இனங்கண்டு அறிக்கையிடுவதற்கு தொடர்ந்தும் ஒத்துழைக்கின்ற வேளையில் வங்கி பரந்தளவிலான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறையினுள் இருந்து வருகின்றது.

மூன்றாவது அடுக்குப் பாதுகாப்பாக, உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் ஊ.சே.நிதியத்தின் நிதிய முகாமைத்துவத் தொழிற்பாடு தொடர்பில் இடர்நேர்வு உத்தரவாதத்தினை வழங்குகிறது.

தமிழ்

2021இல், ஊ.சே.நிதிய திணைக்களத்தின் நடுவரங்க அலுவலகமானது முதலீட்டுச் செயற்பாட்டிலுள்ள கொள்கை கூற்று உபாயச் சொத்து ஒதுக்கு மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களில் தரப்பட்ட அளவுருக்களுடனும் செயற்பாட்டிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையுடனும் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகள் பின்பற்றப்படுவதை மீளாய்வு செய்த அதேவேளை, நிதியங்களின் பாதுகாப்பையும் நிதியத்திற்கு உகந்த வருவாயையும் உறுதிசெய்தது. மேலும், தேவைக்கேற்றவாறு அத்தகைய நடவடிக்கைகளின் நாளாந்த அறிக்கையிடல் மேற்கொள்ளப்பட்டது. மேலும், வர்த்தகத்திற்கு முந்திய மற்றும் வர்த்தகத்திற்கு பிந்திய இணங்குவிப்புக்களின் மதிப்பீடுகளில் ஆண்டுப்பகுதியில் சந்தையில் காணப்பட்ட சடுதியான மாற்றங்களின் காரணமாக முதலீட்டுச் சொத்துப்பட்டியலுக்கான சாத்தியமான இடர்நேர்வுகளை நடுவரங்க அலுவலகம் கலந்தாலோசித்தது. 2021 சனவரியில், அத்தகைய சாவல்கள் ஏற்பட்டமைக்கு விளைவு வளைகோட்டின் குறித்த மேல்நோக்கிய அசைவு, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணில் சடுதியான அதிகரிப்பு, இலங்கை நிதியியல் நிறுவனங்களின் தேசிய நீண்டகால தரமிடல் அளவீட்டின் திருத்தத்தைத் தொடர்ந்து அந்நிறுவனங்களின் தேசிய நீண்ட கால தரமிடல்களை திருத்தம் என்பன காரணங்களாக அமைந்தன. மேலும், நிலவும் சந்தை நிலைமைகளை நோக்கி முதலீட்டு நடவடிக்கைகள் பற்றிய தற்போதுள்ள இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பை வலுப்படுத்தும் பொருட்டு, தற்போதைய முதலீட்டு நிதியத்தின் தொழிற்பாட்டுச் செலவினம் திருத்தம் செய்வதற்கு இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைவாக, இச்செயன்முறையின் பாகமொன்றாக, ஊ.சே.நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கென ஏற்புடைய முதலீட்டுக் கொள்கை கூற்றையும் முதலீட்டு வழிகாட்டல்களையும் இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் திருத்தம் செய்தது. இது 2021.09.23 தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. மேலும், ஊ.சே.நிதியத் திணைக்களமானது அதன் நிதியல்லா இடர்நேர்வுகளை இனங்கண்டு தீர்க்கின்ற அதேவேளை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புடன் அணிசேர்ப்பதற்கு அதன் கவனத்தை தொடர்ந்தும் செலுத்தியது. இதற்கமைவாக, ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் நிதியல்லா இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு மீளாய்வு செய்வதற்கும் மற்றும் அவை மீதான இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் காலாந்தர மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

## 1.4 தொழிற்பாட்டுச் செலவினம்

நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம், 2020இன் ரூ.1,645.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ.1,646.1 மில்லியனுக்கு அதிகரித்து 0.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியமைக்கு

அட்டவணை 4 நிதியத்தின் தொழிற்பாட்டுச் செலவினம்

| விடயம் | இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களம் | | | தொழில் திணைக்களம் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020 (ரூ. மில்லியன்) | 2021 (ரூ. மில்லியன்) | மாற்றம் (%) | 2020 (ரூ. மில்லியன்) | 2021 (ரூ. மில்லியன்) | மாற்றம் (%) | 2020 (ரூ. மில்லியன்) | 2021 (ரூ. மில்லியன்) | மாற்றம் (%) |
| ஆளணிச் செலவினங்கள் | 648 | 602 | (7.1) | 455 | 456 | 0.2 | 1,102 | 1,058 | (4.0) |
| நிர்வாகச் செலவினங்கள் | 282 | 299 | 6.0 | 190 | 224 | 17.9 | 472 | 523 | 10.8 |
| ஏனைய செலவினங்கள் | 63 | 60 | (4.8) | 8 | 6 | (25.0) | 71 | 66 | (7.0) |
| **மொத்தம்** | **993** | **961** | **7.1** | **652** | **685** | **(0.3)** | **1,645** | **1,646** | **0.1** |
| மொத்த வருமானத்தின் சதவீதமாக மொத்தச் செலவினங்கள் | **0.35** | **0.28** | | **0.23** | **0.20** | | **0.58** | **0.48** | |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

ஆளணிச் செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இருப்பினும் கூட, மொத்த வருமானத்தின் சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவினங்கள், 2020இன் 0.58 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 0.48 சதவீதத்திற்குக் குறைவடைந்தன (அட்டவணை 04).

## 1.5 வரிச் செலவினம்

2018 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அறிமுகத்துடன், நிதியத்திற்கு ஏற்புடைய வருமான வரி வீதம் 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு அதிகரித்தது. இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரிச் செலவினத்தில் ரூ.2.6 பில்லியன் கொண்ட அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. மேலும், முன்னைய வரி ஒழுங்குவிதிகளின் கீழ் மொத்த வருமானத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்த திறைசேரி முறி மீதான வட்டி வருமானத்தின் மீது செலுத்தப்பட்ட 10.0 சதவீதம் கொண்ட பிடித்துவைத்தல் வரி 2018 ஏப்பிறல் 01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விலக்கப்பட்டது. 2018 ஏப்பிறல் 01இற்கு முன்னர் ஊ.சே.நிதியத் திறைசேரி முறி சொத்துப்பட்டியலானது தற்போதும் முதலீடுகளை கொண்டிருப்பதனால், பிடித்து வைத்தல் வரி விலக்களிக்கப்பட்டமை நிதியத்தின் முதலீட்டு வருமானத்தை கடுமையாகப் பாதிக்கின்றது.

## 1.6 உறுப்பினர் கணக்கு நிலுவைகள் மற்றும் வரவு வைக்கப்பட்ட வட்டி

2021இல், ரூ.251.8 பில்லியன் கொண்ட தொகை வட்டியாக உறுப்பினர் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டது. இதன்படி, 2021 இறுதியில் உறுப்பினர் நிலுவைகள்

வரைபடம் 10 உறுப்பினர் நிலுவைகளும் வரவு வைக்கப்பட்ட வட்டியும்




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 5** **வீடமைப்புக் கடன் வசதி**

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் (ரூ. மில்லியன்) | முன்னைய ஆண்டின் கடன் நிலுவைகளைத் தீர்ப்பதற்கு கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தொகை (ரூ.மில்லியன்) |
|---|---|---|---|
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| 2014 | 17,786 | 8,021 | 2,394 |
| 2015 | 13,132 | 5,489 | 2,522 |
| 2016 | 12,780 | 5,414 | 2,541 |
| 2017 | 10,998 | 4,946 | 2,485 |
| 2018 | 10,036 | 4,974 | 2,759 |
| 2019 | 10,022 | 5,097 | 3,164 |
| 2020 | 8,537 | 4,497 | 3,321 |
| 2021 | 9,068 | 5,423 | 3,573 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2020 இறுதியின் ரூ.2,767.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.3,066.9 பில்லியனுக்கு 10.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளில் நிலவிய தாழ்ந்த வட்டி வீதச் சூழலுக்கு மத்தியிலும் நிதியமானது, 2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான உறுப்பினர் கணக்குகளின் இறுதி நிலுவைகள் மீது 9.00 சதவீத வட்டி வீதத்தினைப் பிரகடனப்படுத்தக் கூடியதாகவிருந்தது. இது 2020இல் காணப்பட்ட அதே சதவீதமாகும்.

## 1.7 வீடமைப்புக் கடன் உத்தரவாத வசதி

பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களான வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பனவற்றிலிருந்து வீடமைப்புக் கடன்களை பெற்றுக்கொள்வதற்கு உறுப்பினர்களுக்கு வசதியளிக்கும் நோக்குடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டமானது இவ்வாண்டிலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டுப்பகுதியில், ஊ.சே.நிதியத் திணைக்களம் உறுப்பினர்களுக்கு அவர்களது ஊ.சே. நிதிய நிலுவைகளுக்கெதிராக ரூ.5,423 மில்லியன் தொகை கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காகப் பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு 9,068 உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்கியது (அட்டவணை 3). மேலும், 2020ஆம் ஆண்டுப்பகுதியில் நிலுவையிலுள்ள கடன்களைத் தீர்ப்பனவுசெய்யும் பொருட்டு காலப்பகுதியில் தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.3,573 மில்லியன் கழிக்கப்பட்டு பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## 1.8 சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

ஊ.சே.நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பொது நிருவாகத்திற்கும் ஊ.சே. நிதியச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக தொழில் திணைக்களம் இருக்கின்றது. இதன்படி, 2021இல் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்குகின்ற விதத்தில் மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணை

தமிழ்

அட்டவணை 6 சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

| விபரம் | | ஆண்டு 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|
| புதிய பதிவுகள் | தொழில்தருநர்கள் | 7,718 | 9,243 | 8,930 | 5,092 | 4,188 |
| | ஊழியர்கள் | 280,079 | 37,662 | 37,297 | 427,016 | 18,298 |
| மாகாண ரீதியாக தொழில்தருநர் பதிவுகள் (மொத்த தொழில்தருநர் பதிவுகளின் சதவீதமாக) | மேல் | 50.4 | 43.0 | 42.8 | 45.1 | 50.8 |
| | வடக்கு மற்றும் கிழக்கு | 6.3 | 15.0 | 11.3 | 11.3 | 10.1 |
| | ஏனையவை | 43.3 | 42.0 | 45.9 | 43.6 | 39.1 |
| முதலாவது அறிவித்தல்கள் | அனுப்பப்பட்ட அறிவித்தல்களின் எண். | 10,888 | 13,653 | 20,436 | 11,395 | 8,273 |
| | கோரப்பட்ட தொகை (ரூ.மில்லியன்) | 5,876 | 4,316 | 6,839 | 5,076 | 4,380 |
| சிவப்பு அறிவித்தல்கள் | அனுப்பப்பட்ட அறிவித்தல்களின் எண். | 6,613 | 8,364 | 13,756 | 7,742 | 7,319 |
| | கோரப்பட்ட தொகை (ரூ.மில்லியன்) | 3,775 | 3,320 | 5,231 | 3,884 | 4,305 |
| கோப்பிடப்பட்ட வழக்குகள் | வழக்குகளின் எண்ணிக்கை | 3,019 | 2,831 | 4,255 | 2,712 | 2,218 |
| | அறவிடப்பட்ட தொகை (ரூ.மில்லியன்) | 1,093 | 1,710 | 547 | 329 | 557 |

மூலங்கள்: ஊ.சே.நிதியத் திணைக்களம், தொழில் திணைக்களம்

அலுவலகங்களும் 4,188 புதிய நிறுவனங்களையும் 18,298 புதிய ஊழியர்களையும் பதிவுசெய்தன. 2021ஆம் ஆண்டுப்பகுதியில், பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களில் 50.8 சதவீதத்திற்கும் கூடுதலானோர் மேல் மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்ட வேளையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றுசேர்ந்து மொத்தத் தொழில்தருநர் பதிவுகளில் 10.1 சதவீதத்திற்கு வகைகூறின.

சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, உறுப்பினர் பங்களிப்புக்களைச் செலுத்தாத தொழில்தருநர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தொழில் திணைக்களத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கமைய, மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணைத்தொழில் அலுவலகங்களும் நிலுவையிலுள்ள முறையே ரூ.4,379.8 மில்லியன் மற்றும் ரூ.4,304.9 மில்லியன் ஊ.சே.நிதியப் பங்களிப்புக்களைச் செலுத்தக் கோரி 8,273 முதலாவது அறிவித்தல்களையும் 7,319 சிவப்பு அறிவித்தல்களையும் அனுப்பியுள்ளன. மேலும், சிவப்பு அறிவித்தல்கள் கிடைத்ததன் பின்னர் 28 நாட்களுக்குள் நிலுவைகளைத் தீர்ப்பனவு செய்யத் தவறிய 2,218 நிறுவனங்களுக்கெதிராக சட்ட ரீதியான வழக்குகளை தொடுத்ததன் மூலம் தொழில் திணைக்களம் ரூ.556.6 மில்லியனை அறவிட்டுக் கொண்டது.

## 1.9 ஊ.சே.நிதிய உறுப்பினர்களை மீளப்பதிவு செய்தல்

தேசிய அடையாள அட்டையிலுள்ள உறுப்பினர் விபரங்களுக்கிணங்க அவர்களின் விபரங்களை மீளப்பதிவு செய்வதற்காக 2010இல் ஊ.சே. நிதியத் திணைக்களத்தினால் தொடங்கப்பட்ட செயற்றிட்டம் 2021இலும் தொடர்ந்தது. இச்செயற்றிட்டமானது தொழில் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்கள் இருவருக்கும் வினைத்திறன்மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கமைய, சேகரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை விபரங்களுக்கிணங்க உறுப்பினர்கள் ஊழியர் சேமலாப நிதியத்துடன் மீளப்பதிவு செய்யப்பட்டதுடன் தனித்துவமான அடையாளம் காணும் இலக்கமான அவர்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் மூலம் ஒவ்வொரு உறுப்பினரையும் அடையாளம் காணுகின்ற வசதியூடாக இரண்டு நிறுவனங்களும் பொதுவாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய உறுப்பினர் மத்திய தரவுத்தளத்தினைப் பூரணப்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இச்செயற்றிட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டுப்பகுதியில் மீளப்பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மீதான புள்ளிவிபரத் தகவல்கள் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலையினால் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக 2021 ஆண்டுகாலப்பகுதியில் மீள்பதிவு செயற்றிட்டத்தில் சிறிதளவிலான பின்னடைவை அவதானித்தப் போதிலும், பெரும்பாலான இயங்கு நிலையிலுள்ள உறுப்பினர்களை உள்ளடக்கி 2022இல் உறுப்பினர்களை மீள்பதிவு செய்தல் செயன்முறைகளை விரைவுபடுத்தும் நோக்குடன் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவுதளத்திற்கு கிடைக்கப்பெற்ற அணுகலை அடிப்படையாகக்கொண்டு ஊ.சே.நிதியம் பல்வேறு முன்னெடுப்புக்களை எடுத்தது.

## 1.10 ஊ.சே.நிதியக் கொடுப்பனவுகளுக்கான இ-திரட்டு முறைமை

காகிதங்களற்ற தொழிற்பாட்டுச் சூழலொன்றில் ஊ.சே. நிதியத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்திக் கொள்ளும் நோக்குடன் ஊ.சே.நிதிய பங்களிப்புக்களின் சேகரிப்பிற்கும் தொடர்பான உறுப்பினர் விபரங்களை இலத்திரனியல் முறையில் பெற்றுக்கொள்வதற்கும் வசதியளிக்கின்ற இ-திரட்டு முறைமை ஊ.சே. நிதியத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமையானது, தொடர்பான சட்டம் அதாவது 2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊ.சே.நிதிய (திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைக்குவரும் வரை சுயவிருப்பு அடிப்படையில் தொழிற்பட்டது. இதன்படி, 50இற்கும் மேற்பட்ட ஊழியர்களை அவர்களது நிறுவனங்களில் கொண்டுள்ள தொழில்தருநர்களுக்கு அவர்களது

அட்டவணை 7 — உறுப்பினர் கணக்குகளின் மீள்பதிவு

| 2020ஆம் ஆண்டுப்பகுதியில் மீளப்பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை | 2020 இறுதியில் மீளப்பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|
| 18,758 | 1,656,019 |

தமிழ்

ஊ.சே. நிதியப் பங்களிப்பு விபரங்களை இலத்திரனியல் முறைமையூடாக சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

2011இல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் சொந்த இணையவழி நுழைவு வாயில்களினூடாக ஊ.சே. நிதிய பங்களிப்புக்களைச் சேகரிப்பதற்கு வசதியளிப்பவர்களாக இம்முறைமையில் இணைந்து கொண்டமையானது தொழில்தருநர்களின் பங்கேற்பில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டிற்கும் உறுப்பினர் கணக்குகளை விரைவாக இற்றைப்படுத்தும் செயன்முறைக்கும் வழியமைத்த வேளையில் இதன் நிருவாக மற்றும் கண்காணிப்புத் தொழிற்பாடுகளையும் வலுப்படுத்தியது. 100 சதவீத தன்னியக்கப்படுத்தப்பட்ட செய்முறையினையும் உறுப்பினர் கணக்குகளின் அதேநேர இற்றைப்படுத்தலையும் வழங்குகின்ற இணையவழியில் உறுப்பினரின் தகவல்களைச் சரிபார்க்கும் பொறிமுறையின் அறிமுகப்படுத்தலுடன் 2016இல் இ-திரட்டு முறைமை அதன் மிக உயர்ந்த தொழில்நுட்பவியலில் பெரும் முன்னேற்றத்தையடைந்தது. இதற்கிணங்க, எட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஊ.சே. நிதிய இணையவழிக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கின்ற வேளையில் அவற்றில் நான்கு வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு இணையவழி உறுப்பினர் தகவல்களை உறுதிப்படுத்தக் கூடியனவாக இருந்ததுடன் அதேநேர உறுப்பினர் கணக்குகளை இற்றைப்படுத்தும் வசதிகளையும் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கின. 2020இல், உறுப்பினர் கணக்குகளுக்கான ஊ.சே.நிதிய பங்களிப்புகளுக்கு வரவு வைத்தல் தொடர்பான இலத்திரனியல் சேகரிப்பு முறைமைக்கு குறிப்பிடத்தக்க திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. முறைமையை நடைமுறைப்படுத்தலுடன், இ-கோப்புக்கள் தன்னியக்கப்படுத்தல் செய்முறையினை உடனடுத்து உறுப்பினர் கணக்குகளுக்குத் தவறுகளற்ற பங்களிப்புக்கள் உறுப்பினர் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படுவதுடன் நிதியம் கிடைத்தமைக்கான அறிவித்தலுடன் பெயரில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படுமிடத்து, அவற்றையும் சேர்த்து தன்னியக்க முறையில் பதில் அனுப்பப்படும்.

தற்போதுள்ள இலத்திரனியல் சேகரிப்பு நடைமுறையை வலுப்படுத்துவதற்காக ஊ.சே.நிதியத்தின் அலுவலசார் வெப்தளத்தை மறுசீரமைப்பதன் வாயிலாக புதியதொரு பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை 2021ஆம் ஆண்டு ஊ.சே. நிதியத் திணைக்களத்திற்கு குறிப்பிடத்தக்கதொரு ஆண்டாக விளங்குகிறது. தொழில்தருநர்கள் வெப்தளத்தினூடாக அவர்களின் இ-திரட்டுக்களை சமர்ப்பித்து "லங்காபே இணையவழி கொடுப்பனவு தளத்தினூடாக" பங்கேற்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினூடாக அல்லது காசோலை மூலமாக அல்லது நேரடிப் பற்றாக இணையவழி கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் இது இயலுமைப்படுத்தியது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி என்பன 2021ஆம் ஆண்டிறுதியில், வசதியளிப்பது தொடர்பில் ஊ.சே.நிதியத் திணைக்களத்துடன் இணைந்துகொண்டன. புதிய முறைமையின் முக்கிய பண்புகளில் ஒன்றாக வெற்றிகரமாக கொடுப்பனவை செலுத்தியவுடன் தனிப்பட்ட உறுப்பினர் கணக்குகளை இற்றைப்படுத்தும் செயன்முறையை நிறைவுசெய்வதை துரிதப்படுத்துகிறது. மேலும், ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் தரவுதளத்திலுள்ள தொடர்புடைய விபரங்களுடன் ஒப்பிடுவதன் மூலமாக பங்களிப்பு விபர கோவையில் தோன்றுகின்ற உறுப்பினர் பதிவுகளின் துல்லியமான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தொழில்தருநர்களுக்கு வசதிப்படுத்துகின்றது. அனைத்தையுமுள்ளடக்கிய ஊ.சே.நிதியத் தரவுத்தளத்தை நிறுவுவதில் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இருக்கும் என்பதுடன் இதனால் எதிர்காலத்தில் உறுப்பினர் விபரத் திருத்தங்கள் தொடர்பில் முயற்சிகள் எதுவும் தென்படாது அல்லது குறைந்தப்பட்ச முயற்சியே வேண்டப்படும்.

2021 இறுதியில், இ-திரட்டு சமர்ப்பித்தல் முறைமையில் தொழில்தருநர்களின் பங்கேற்பு 10,069 இலிருந்து 11,260 இற்கு அதிகரித்து, செயற்படுகின்ற உறுப்பினர் கணக்குகளில் ஏறத்தாழ 88 சதவீதத்தினையும் மொத்த மாதாந்த ஊ.சே. நிதியப் பங்களிப்பில் ஏறத்தாழ 88 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், இ-திரட்டு சமர்ப்பிக்கும் நடைமுறைகள் தொடர்பில் தொழில்தருநர்களுக்கும் அதன் நன்மைகள் பற்றி ஊ.சே. நிதிய ஆர்வலர்களுக்கும் மேலும் விழிப்புணர்வினை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேளையில் பங்களிப்புக்கள் உறுப்பினர் கணக்குகளுக்குச் சரியான நேரத்தில் வரவு வைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக இலத்திரனியல் கடித தொடர்புகளிலுள்ள உறுப்பினர் பெயர் பற்றிய குறைபாடுகள் தொடர்பிலான பிரச்சனைகளைச் சரிசெய்வதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் முக்கியத்துவம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

## 1.11 ஒய்வுக்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்

2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஊ.சே.நிதிய (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளினன் நியதிகளுக்கும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட

நடைமுறைகளுக்கிணங்கவும் ஊ.சே.நிதிய ஒய்விற்கு முன்னரான மீளளிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கமைவாக, 2015 ஆண்டு தொடர் நடைமுறைக்குவரும் வகையில், 10 ஆண்டுகளுக்கு மேல் சேவையைக் கொண்ட மற்றும் ரூ.300,000 இற்கு அதிகமான ஊ.சே. நிதிய கணக்கு மீதிகளை கொண்டுள்ள உறுப்பினர்கள் வீடொன்றை நிர்மாணிக்கின்ற நோக்கத்திற்காக அல்லது மருத்துவ தேவைப்பாடுகளுக்காக உயர்ந்தபட்சமாக ரூ.2 மில்லியனுக்குட்பட்டு அவர்களின் கணக்கிலுள்ள 30 சதவீத உறுப்பினர் மீதியை மீளப்பெறுவதற்கு உரித்துடையவராவர். குறிப்பிடப்பட்ட இத்திட்டமானது ஊ.சே.நிதியத்தின் உறுப்பினர்களிடையே பெரும் வரவேற்பு இருந்ததுடன் இத்திட்டத்தின் கீழ் 2021 ஆண்டுகாலப்பகுதியில் 16,554 நன்மைபெறுநர்களுக்கு ரூ.8.8 பில்லியன் விடுவிக்கப்பட்ட அதேவேளை 2021ஆம் ஆண்டிறுதியில் 197,057 இற்கு மேற்பட்ட நன்மைபெறுநர்களுக்கு, ரூ.107.1 பில்லியன் கொண்ட தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

### 1.12 ஊ.சே. நிதிய நடமாடும் பணி நிகழ்ச்சித்திட்டம்

2021ஆண்டு காலப்பகுதியில், ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கு வருகை தந்து உறுப்பினரொருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய பெரும்பாலும் அனைத்துப் பணிகளையும் வசதிப்படுத்துகின்ற வகையில் நடமாடும் பணியானது நடாத்தப்பட்டது. ஊ.சே.நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல், ஊ.சே.நிதிய உறுப்பினர் விபரங்களை திருத்துதல், போலி இலக்கங்களை அகற்றுதல், ஊ.சே.நிதியக் கணக்குத் திருத்தல் மற்றும் குறுஞ்செய்தி மற்றும் இணையத்தள உறுப்பினர் பணிகளை ஊக்குவித்தல் என்பனவற்றை இப்பணிகள் உள்ளடக்குகின்றன. மேலும், இ-சேகரிப்பு, நேரடி பற்று முறைமை, உறுப்பினர் விபரங்களை மீளப்பதித்தல் தொடர்பான தொழில்தருநர்களின் விழிப்புணர்வு, ஒட்டுமொத்த ஊ.சே.நிதிய நடைமுறைகள் தொடர்பான ஆலோசனையை வழங்குதல் போன்றவற்றையும் உள்ளடக்குகின்றன. எனினும், ஆண்டுப்பகுதியில், நடத்தப்படவிருக்கும் நடமாடும் பணிகள் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலை காரணமாக தடைப்பட்டன.

### 1.13 பிம்பப்படுத்தும் ஸ்கானிங் செயற்றிட்டம்

ஏறத்தாழ காகிதாதிகளற்ற தொழிற்பாட்டு முறைமையினை நிறுவுவதன் மூலம் ஊ.சே.நிதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிகளின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் பிம்பப்படுத்தும் ஸ்கானிங் செயற்றிட்டம் நடைமுறைக்கிடப்பட்டது. 2013இல் பிம்பப்படுத்தும் ஸ்கானிங் செயற்றிட்டத்திற்காக பெறுகை செய்யப்பட்ட சேமிப்பகங்கள் ஒட்டுமொத்தமாக பயன்பாட்டை ஈட்டியுள்ளன. ஆகவே, ஆண்டுகாலப்பகுதியில், ஊ.சே.நிதியத் திணைக்களம் எஸ்ஏஎஸ் வட்டுக்களைப் பெறுகை செய்து சேமிப்பகங்களின் இயலளவை விரிவுபடுத்தியது.

சேமிப்பகங்களின் இயலளவை விரிவுபடுத்திய பின்னர், 2018 தொடக்கம் 2021 வரையிலான தொழில்தருநர்களிடமிருந்து பங்களிப்பைச் சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட படிவம் ஊ மற்றும் ஊ3, 2016 தொடக்கம் 2021 வரையிலான காலப்பகுதிக்குரிய மீளளிப்பு விபரத்தாள்கள், 2018 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதிக்குரிய திருத்தக் கடிதங்கள் மற்றும் 2015 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதிகளுக்கான மீள்மதிப்பீட்டு ஆவணங்கள் என்பனவற்றை ஸ்கான் செய்வதற்கு பொருத்தமான பணி வழங்குநரை தெரிவுசெய்வதற்கு விலைக்கோரல் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

அனர்த்த மீட்பு ஏற்பாடுகளுடன் ஆவண முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தும் பொருட்டு, "உற்பத்தி மற்றும் அனர்த்த மீட்பு தளத்தில் IBM FileNet & DataCap ஆவண முகாமைத்துவ முறைமைக்கான வன்பொருள் மற்றும் மென்பொருளின் வழங்கல், விநியோகம், நிறுவுதல், தொடங்குதல் மற்றும் பராமரித்தல் அத்துடன் அதன் தனிப்பட்ட தேவைக்கேற்றவாறான கூறுகள் உட்பட ஆவண முகாமைத்துவ முறைமைக்கான முறைமை இற்றைப்படுத்தல், பராமரிப்பு மற்றும் பிரயோக உதவியை வழங்குதல்" போன்ற விடயங்களிலும் ஊ.சே. நிதியத் திணைக்களம் விலைக்கோரல் நடைமுறைகளை நடாத்தியது.

### 1.14 உறுப்பினர்களுக்கான ஏனைய பணிகள்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில், ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் விசாரணைப்பீடங்களும் 2021இல் சவால்நிறைந்த ஆண்டொன்றினை நிறைவுசெய்திருக்கிறது. ஆண்டுப்பகுதியில், திணைக்களத்திற்கு வருகை தந்த 96,561 எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு/ தொழில்தருநர்களுக்கு அதன் பணிகளை வழங்கியதுடன் ஆகியோருக்கு திணைக்களம் தொலைபேசி அழைப்புக்கள், மற்றும் மின்னஞ்சலூடாக முறையே 50,071 விசாரணைகள், 11,059 விசாரணைகளுக்கும் பதிலளித்தது. மேலும், உறுப்பினர்கள், தொழில்தருநர்கள்

தமிழ்

மற்றும் ஏனைய ஆர்வலர்களிடமிருந்தான 76,759 கடிதங்களை திணைக்களம் பெற்றுக்கொண்டது.

2021ஆம் ஆண்டில், ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் பதிவேடுகள் திருத்தப் பிரிவானது உறுப்பினர்களின் பெயரிலும் தே.அ.அ. விபரங்களிலுமுள்ள பொருத்தப்பாடின்மைகளையும் கணக்கு இலக்கங்களின் திருத்தங்களையும் சரிசெய்வதற்கு 33,400 ஊ.சே. நிதிய பதிவேட்டு திருத்தங்களை மேற்கொண்ட அதேவேளை தொடர்புடைய உறுப்பினர்களின் சரியான கணக்கு மீதிகளை இற்றைப்படுத்தியது. ஆட்பதித் திணைக்களத்தின் தரவுத்தளத்தின் அணுகலுடன், ஊ.சே. நிதியத் திணைக்களமானது குறிப்பாக உறுப்பினர்களின் அடையாள சரிபார்ப்பு கட்டத்தில் பதிவேட்டு

## 1.15 செயன்முறை மேம்படுத்தலும் இயலளவு விருத்தியும்

ஊ.சே.நிதியத் திணைக்களத்தில் தற்போது இடம்பெற்று வருகின்ற தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முறைமைகளை தரமுயர்த்துவதற்கும் ஏதேனும் புத்தாக்க முன்னெடுப்புக்களுக்கு உதவுவதற்கும் உலக வங்கியினால் முன்மொழியப்பட்ட நிதியியல் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்திற்காக முக்கியமாகவிருக்கும் செயன்முறை மேம்படுதல் மற்றும் இயலளவு அபிவிருத்தி பிரிவு 2021 ஏப்பிறல் அன்று ஊ.சே.நிதியத் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டுப்பகுதியில், இணையவழி பங்களிப்பு தளம் போன்ற அதன் உறுப்பினர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பணிகளை வழங்குகின்ற ஊ.சே.நிதியத்தின் அலுவலர்சார் வெப்தளத்தை ஊ.சே.நிதியத் திணைக்களம் வெற்றிகரமாக மீண்டும் ஆரம்பித்தது. 2022ஆம் ஆண்டில் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு நுழைவாயில் மூலம் உறுப்பினர்களுக்கு வசதி செய்யப்படவுள்ள இத்தளத்தில் மேலதிக மேம்பாடுகள் சேர்க்கப்படுகின்றன.

2021ஆம் ஆண்டின் இறுதி இரு காலாண்டுகளில், மத்திய வங்கிக்கும் அதன் ஆலோசகரது மற்றும் செயற்றிட்ட முகாமையாளராக தெரிவான இந்தியா பிரைஸ் வோட்டர்ஹவுஸ்கூப்பர்ஸ் ஆகியவற்றுக்கும் இடையேயான ஒப்பந்தத்தை இறுதிசெய்வதற்கு ஊ.சே. நிதியத் திணைக்களம் பணியாற்றியது. இவ்வாலோசனை ஏற்பாடு, அதன் சில வியாபார செயன்முறைகளை மறுவடிவமைப்பு செய்யவும், புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தவும் அத்துடன் இறுதியில், மேம்படுத்தப்பட்ட உறுப்பினர் பணிகளுடன் ஊ.சே.நிதியத் திணைக்களத்தில் புதிய அதிநவீன தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப தீர்வை நடைமுறைப்படுத்தவும் ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் மூத்த முகாமைத்துவத்திற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.



பிரிவு இ

# நிதியியல் கூற்றுக்கள்

# ஊழியர் சேமலாப நிதியம்
## வருமான செலவினக் கூற்று

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | குறிப்பு | 2021 | | | 2020 |
|---|---|---|---|---|---|
| | | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | மொத்தம் | மொத்தம் |
| | | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| வட்டி வருமானம் | 5 | 293,678,260 | - | 293,678,260 | 277,409,000 |
| பங்குலாப வருமானம் | 6 | 6,685,492 | - | 6,685,492 | 2,985,049 |
| இலாபம் அல்லது நட்டமூடாக ஆ சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்) | 7 | 41,840,149 | - | 41,840,149 | 5,023,106 |
| நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழத்தலுக்கான கூடிய/ (குறைந்த) ஏற்பாடு | 8 | (1,016) | - | (1,016) | 1,643 |
| **முதலீட்டு வருமானம்** | | **342,202,885** | **-** | **342,202,885** | **285,418,798** |
| ஏனைய வருமானம் | 9 | 162,652 | 9,009 | 171,661 | 212,090 |
| **மொத்த வருமானம்** | | **342,365,537** | **9,009** | **342,374,546** | **285,630,888** |
| தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 10 | (960,793) | (685,343) | (1,646,136) | (1,645,078) |
| **வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/ (நட்டம்)** | | **341,404,744** | **(676,334)** | **340,728,410** | **283,985,810** |
| வரிச் செலவு | 11 | (41,656,976) | - | (41,656,976) | (39,062,581) |
| **ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)** | | **299,747,768** | **(676,334)** | **299,071,434** | **244,923,230** |
| **முன்கொண்டு வரப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட இலாபம்** | | | | 429,929 | 129,112 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனத்தின் தேறல்செய்யப்படாத இலாபம் | | | | (40,503,848) | - |
| **பகிர்ந்தளிப்புக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள இலாபம்** | | | | **258,997,515** | **245,052,342** |
| **இலாபப் பகிர்ந்தளிப்பு** | | | | | |
| கழிக்குக: மீளளிப்புக்கள் தொடர்பில் நடப்பாண்டில் செலுத்தப்பட்ட வட்டி | | | | (4,549,668) | (4,315,789) |
| கூட்டுக/ (கழிக்குக): பங்குலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள்/ ஒதுக்கிற்கான மாற்றல் | | | | (2,600,000) | (13,000,000) |
| 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறான உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி - 9.00% (2020 - 9.00%) | | | | (251,786,584) | (227,306,624) |
| **அடுத்த ஆண்டிற்காக முன்கொண்டு செல்லப்படும் நிலுவை** | | | | **61,263** | **429,929** |

பக்கங்கள் 08 இலிருந்து 55 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.
இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.
இந்நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

அஜித் நிவாட் கப்ரால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி
திகதி: 2022 பெப்புருவரி 15

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

## ஊழியர் சேமலாப நிதியம்
## அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | குறிப்பு | **2021**<br>ரூ.'000 | **2020**<br>ரூ.'000 |
|---|---|---|---|
| ஆண்டிற்கான இலாபம் | | 299,071,434 | 244,923,230 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான தேறிய இலாபம்/ (நட்டம்) | 12 | 48,794 | 350,829 |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | **299,120,228** | **245,274,059** |

பக்கங்கள் 08 இலிருந்து 55 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.

இந்நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

அஜித் நிவாட் கப்ரால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2022 பெப்புருவரி 15

# ஊழியர் சேமலாப நிதியம்
# நிதியியல் நிலைமைக் கூற்று

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* | குறிப்பு | 2021<br>ரூ.'000 | 2020<br>ரூ.'000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் சாதனம் | 13 | 274,150 | 250,536 |
| தொழிற்பாட்டிலுள்ள மூலதன வேலைகள் | | 235,497 | 81,995 |
| அருவச் சொத்துக்கள் | 14 | 2,009 | 2,989 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குரிமை மூலதனச் சாதனங்கள் | 15 | 9,902,267 | 9,853,473 |
| இலாபம் அல்லது இழப்பினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குரிமை மூலதனச் சாதனங்கள் | 16 | 111,201,978 | 70,094,309 |
| பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் படுகடன் சாதனங்கள் | 17 | 3,052,238,755 | 2,749,546,574 |
| கையிருப்புக்கள் | | 9,618 | 11,099 |
| பெறத்தக்க வட்டி | | 122,125 | 122,125 |
| பெறத்தக்க பங்களிப்புக்கள் | | 14,100,000 | 14,546,427 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 18 | 555,488 | 985,255 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் | 19 | 3,101,966 | 2,613,033 |
| | | **3,191,743,853** | **2,848,107,816** |
| **பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தத்தக்க கணக்குகள் | 20 | 3,967 | 4,554 |
| ஒன்றுசேர்ந்த செலவினங்கள் | | 329,333 | 437,237 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 21 | 25,274,773 | 23,353,148 |
| | | **25,608,073** | **23,794,939** |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **3,166,135,780** | **2,824,312,877** |
| உறுப்பினர் நிலுவைகளினால் காட்டப்பட்டவை | 22 | 3,066,871,294 | 2,767,832,367 |
| | | 3,066,871,294 | 2,767,832,367 |
| ஒதுக்கங்கள் | 23 | 53,699,375 | 56,050,581 |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | | 45,565,111 | 429,929 |
| | | **99,264,486** | **56,480,510** |
| **நிதியத்தின் மொத்தத் தேறிய பெறுமதி** | | **3,166,135,780** | **2,824,312,877** |

பக்கங்கள் 08 இலிருந்து 55 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.

இந்நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

அஜித் நிவாட் கப்ரால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2022 பெப்புருவரி 15

# ஊழியர் சேமலாப நிதியம்
## பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கு

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | குறிப்பு | 2021 | | | 2020 |
|---|---|---|---|---|---|
| | | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| ஆண்டின் ஆரம்பத்திலிருந்த காசு மீதி | | 2,613,062 | 26,392 | 2,639,453 | 3,212,373 |
| மொத்தப் பெறுகைகள் | 24 | 458,937,397 | 863,836 | 459,801,233 | 421,508,877 |
| மொத்தக் கொடுப்பனவுகள் | 25 | (458,448,399) | (890,050) | (459,338,449) | (422,081,797) |
| ஆண்டின் இறுதியிலிருந்த காசு மீதி | | 3,102,060 | 178 | 3,102,238 | 2,639,453 |

பக்கங்கள் 08 இலிருந்து 55 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.

இந்நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

அஜித் நிவாட் கப்ரால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2022 பெப்புருவரி 15

## ஊழியர் சேமலாப நிதியம்
## முதலீடுகளின் கூற்று

| முதலீட்டின் வகுப்பு | குறிப்பு | முகப்புப் பெறுமதி ரூ.'000 | கிரயம் ரூ.'000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ.'000 | பதிவழிக்கப்பட்ட கிரயம் ரூ.'000 | ஏட்டுப் பெறுமதி ரூ.'000 |
|---|---|---|---|---|---|---|
| *2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு* | | | | | | |
| திறைசேரி முறிகள் | 17.1.1 | 2,903,929,508 | 2,840,108,379 | 2,803,156,402 | 2,958,768,982 | 2,958,768,982 |
| திறைசேரி உண்டியல்கள் | 17.1.2 | 20,000 | 19,026 | 19,617 | 19,797 | 19,797 |
| கூட்டாண்மை படுகடன் சாதனங்கள் | 17.2 | 23,164,868 | 23,164,868 | 23,507,445 | 23,967,522 | 23,965,887 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 17.3 | 12,300,000 | 12,300,000 | 12,302,377 | 12,302,377 | 12,302,377 |
| நிலையான வைப்புக்கள் | 17.4 | 55,000,000 | 55,000,000 | 57,182,866 | 57,182,866 | 57,181,712 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனங்கள் | 15.1/16.1 | - | 84,067,293 | 111,963,256 | 84,067,293 | 111,963,256 |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்கள் | 15.2 | - | 9,640,989 | 9,140,989 | 9,640,989 | 9,140,989 |
| | | **2,994,414,376** | **3,024,300,555** | **3,017,272,952** | **3,145,949,826** | **3,173,343,000** |
| *2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு* | | | | | | |
| திறைசேரி முறிகள் | 17.1.1 | 2,609,116,044 | 2,529,082,614 | 3,055,928,375 | 2,639,859,512 | 2,639,859,512 |
| திறைசேரி உண்டியல்கள் | 17.1.2 | 3,100,000 | 3,028,474 | 3,043,021 | 3,049,915 | 3,049,915 |
| கூட்டாண்மை படுகடன் சாதனங்கள் | 17.2/17.5 | 33,901,549 | 33,901,549 | 33,256,205 | 34,867,042 | 34,865,417 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 17.3 | 16,000,000 | 16,000,000 | 16,002,379 | 16,002,379 | 16,002,379 |
| நிலையான வைப்புக்கள் | 17.4 | 53,000,000 | 53,000,000 | 55,769,566 | 55,769,566 | 55,769,351 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனங்கள் | 15.1/16.1 | - | 83,463,472 | 70,806,793 | 83,463,472 | 70,806,793 |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்கள் | 15.2 | - | 9,640,989 | 9,140,989 | 9,640,989 | 9,140,989 |
| | | **2,715,117,593** | **2,728,117,098** | **3,243,947,329** | **2,842,652,874** | **2,829,494,356** |

பக்கங்கள் 08 இலிருந்து 55 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.
இந்நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்

அஜித் நிவாட் கப்ரால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி
திகதி: 2022 பெப்புருவரி 15

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

# ஊழியர் சேமலாப நிதியம்
## காசுப்பாய்ச்சல் கூற்று

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021 | 2020 |
|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்:** | | |
| முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி | 284,632,900 | 266,195,662 |
| பங்குரிமை மூலதனங்களிலிருந்தான பங்குலாபங்கள் | 5,873,448 | 2,512,227 |
| மேலதிகக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானம் | 13,567 | 10,534 |
| பெறத்தக்கவைகளிலிருந்தான அறவீடுகள் | 238 | (234) |
| தொழிற்பாட்டுச் செலவினங்களின் கொடுப்பனவுகள் | (1,380,418) | (1,189,882) |
| வழங்கப்பட்ட முற்பணங்கள் | (6,239) | (38,721) |
| கடன் வழங்கியோர் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவற்றின் தீர்ப்பனவுகள் | (3,919,946) | (3,575,745) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு** | **285,213,550** | **263,913,841** |
| | | |
| செலுத்தப்பட்ட வரிகள் | (40,241,383) | (41,783,609) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **244,972,167** | **222,130,232** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்:** | | |
| நிதியியல் சொத்துக்களில் முதலீடுகள் | (2,572,161,546) | (2,035,967,793) |
| முதலீடுகளின் முதிர்ச்சிகள் | 2,277,746,788 | 1,771,076,730 |
| நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான பெறுகைகள் | 2,684,987 | 1,262,186 |
| ஆதனம், பொறி மற்றும் சாதனங்களின் கொள்வனவு | (206,792) | (94,228) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(291,936,563)** | **(263,723,104)** |
| | | |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:** | | |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 165,723,380 | 150,734,735 |
| பொதுவான வைப்புக் கணக்கு - தொழில் திணைக்களம் | (77,693) | 55,584 |
| உறுப்பினர்களுக்கான மீளளிப்புக்கள் | (118,192,115) | (109,725,147) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **47,453,572** | **41,065,171** |
| | | |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு** | **489,176** | **(527,701)** |
| | | |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | 2,613,062 | 3,167,154 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் - சீராக்கங்களின் முன்** | **3,102,238** | **2,639,453** |
| சீராக்கங்கள்: | | |
| ஆண்டின் இறுதியிலுள்ள காசு மீதி - தொழில் திணைக்களம் | (178) | (26,392) |
| **ஆண்டின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமமானவையும் (குறிப்பு அ)** | **3,102,060** | **2,613,062** |
| | | |
| **குறிப்பு அ** | | |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் பகுப்பாய்வு: | | |
| கையிலுள்ள காசு | 20 | 20 |
| கொடுக்கல்வாங்கலிலுள்ள காசு | - | - |
| வங்கியிலுள்ள காசு | 3,102,040 | 2,613,042 |
| | **3,102,060** | **2,613,062** |
| பெறுமதி இழத்தலுக்கான ஏற்பாடு (-) | (94) | (28) |
| | **3,101,966** | **2,613,033** |

ஊழியர் சேமலாப நிதியம்

பங்குரிமை மூலதனத்தில்/ உறுப்பினர் செல்வத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று

| விபரங்கள் | உறுப்பினர்கள் நிலுவை | கட்டட ஒதுக்கு நிதியம் | தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கு நிதியம் | இலாபச் சமநிலைப் படுத்தல் ஒதுக்கு நிதியம் | பொதுவான ஒதுக்கு நிதியம் | முதலீட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்து வைக்கப்பட்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| **2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை** | **2,497,609,596** | **3,157,000** | **350,000** | **32,550,000** | **6,650,000** | **(7,249)** | **129,112** | **2,540,438,459** |
| 2020ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | 244,923,230 | 244,923,230 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான தேறிய இலாபம்/ (இழப்பு) | - | - | - | - | - | 350,829 | - | 350,829 |
| 2020ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்புக்கள் | 42,916,148 | - | - | - | - | - | - | 42,916,148 |
| 2020இல் மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி | - | - | - | - | - | - | (4,315,789) | (4,315,789) |
| செலுத்தப்படத்தக்க உறுப்பினர் வட்டி (2020: 9.00%) | 227,306,624 | - | - | - | - | - | (227,306,624) | - |
| பகிர்ந்தளிக்கத்தக்க இலாபத்திலிருந்து இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிற்கான மாற்றல்கள் | - | - | - | 13,000,000 | - | - | (13,000,000) | - |
| **2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை** | **2,767,832,367** | **3,157,000** | **350,000** | **45,550,000** | **6,650,000** | **343,581** | **429,929** | **2,824,312,877** |
| 2021ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | 299,071,434 | 299,071,434 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான தேறிய இலாபம்/ (இழப்பு) | - | - | - | - | - | 48,794 | - | 48,794 |
| 2021ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்புக்கள் | 47,252,343 | - | - | - | - | - | - | 47,252,343 |
| 2022இல் மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி | - | - | - | - | - | - | (4,549,668) | (4,549,668) |
| செலுத்தப்படத்தக்க உறுப்பினர் வட்டி (2021: 9.00%) | 251,786,584 | - | - | - | - | - | (251,786,584) | - |
| இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிற்கான மாற்றல்கள் | - | - | - | (5,000,000) | - | - | 5,000,000 | - |
| பகிர்ந்தளிக்கத்தக்க இலாபத்திலிருந்து இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிற்கான மாற்றல்கள் | - | - | - | 2,600,000 | - | - | (2,600,000) | - |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை** | **3,066,871,294** | **3,157,000** | **350,000** | **43,150,000** | **6,650,000** | **392,375** | **45,565,111** | **3,166,135,780** |

# ஊழியர் சேமலாப நிதியம்
# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1. கூட்டாண்மைத் தகவல்கள்

### 1.1 *அறிக்கையிடுகின்ற நிறுவனம்*

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் ("ஊழியர் சேமலாப நிதியம்" அல்லது "நிதியம்") என்பது இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கான கட்டாயப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாகும். தொழில் ஆணையாளர் நிதியத்தின் பொது நிருவாகத்தராகச் செயற்படுகின்ற வேளையில், மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் நிதியத்தின் கட்டுக்காப்பாளராகச் செயற்படும் விதத்தில் அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்பாண்மைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது, சட்டத்தின் மூலம் நாணயச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு அதற்கு வசதியளிக்கின்றது.

## 2. கணக்கீட்டிற்கான அடிப்படை

### 2.1 *இணங்குவிப்புக் கூற்று*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஆக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் (இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 5(1)(ஏ) மற்றும் (ஐ)ஆம் பிரிவுகளின் நியதிகளில் நாணயச் சபை, நிதியம் தொடர்பான பொதுவான கணக்கினைப் பேணுமாறும் பின்வரும் நிதியியல் கூற்றுக்களை ஆண்டுதோறும் தயாரிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அ) வருமானம் மற்றும் செலவினக் கூற்று,

ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று,

இ) பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கூற்று, மற்றும்

ஈ) ஒவ்வொரு வகை முதலீட்டினதும் பெறுமதியினைக் காட்டும் முகப்புப் பெறுமதி, கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதி என்பனவற்றைக் காட்டும் முதலீட்டுக் கூற்று

### *2.2 நிதியியல் கூற்றுக்களுக்கான பொறுப்பாண்மை*

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாக இருக்கின்றது.

### 2.3 *நிதியியல் கூற்றுக்களுக்கான நாணயச் சபையின் ஒப்புதல்*

2021 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2022 பெப்புருவரி 15ஆம் நாளன்று வெளியிடுவதற்கு நாணயச் சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

### *2.4 தயாரிப்பிற்கான அடிப்படை*

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் 09 நிதியியல் சாதனங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 26 ஓய்வுகால நன்மைத் திட்டங்களின் கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் என்பனவற்றின் உரிய தேவைப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு அதற்கேற்ற விதத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அல்லது

பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்டிருக்கின்ற நிதியியல் சொத்துக்கள் தவிர்ந்த, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

### 2.5 *தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் நிதியத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாய்களில் காட்டப்படுகின்றன.

### 2.6 *பொருண்மையத் தன்மையின் பயன்பாடு, எதிரீடு செய்தல் மற்றும் முழுத்தானமாக்குதல்*

*பொருண்மையத் தன்மை மற்றும் கூட்டுதல்*

ஒத்த விடயங்களின் ஒவ்வொரு பொருண்மைய வகுப்பும் நிதியியல் கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன. வேறுபட்ட தன்மையைக் கொண்ட விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மையமற்றனவாக இருந்தாலொழிய தனித்தனியாகக் காட்டப்படுகின்றன.

*எதிரீடு செய்தல்*

நிதியியல் கூற்றுக்களிலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் மற்றும் செலவுகள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய, எதிரீடு செய்யப்படமாட்டா.

*முழுத்தானமாக்குதல்*

வேறுவிதமாக எடுத்துக்காட்டப்பட்டாலன்றி, நிதியியல் கூற்றுக்களிலுள்ள எண் தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாய்களுக்கு முழுத்தானமாக்கப்படுகின்றன.

### 2.7 *நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் பயன்பாடுகள்*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது நாணயச் சபையானது நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்கின்றது. அது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினதும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்களின் வெளிப்படுத்துகை என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கின்றது. நியாயப்படுத்தல்களும் மதிப்பீடுகளும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானவை என நம்பப்படும் எதிர்பார்ப்புக்கள் உட்பட, வரலாற்று ரீதியான அனுபவத்தினையும் ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே, உண்மையான அனுபவமும் பெறுபேறுகளும் இந்நியாயப்படுத்தல்களிலிருந்தும் மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடலாம். மதிப்பீடுகளும் அடிப்படை எடுகோள்களும் தற்பொழுது இடம்பெற்றுவரும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் சாத்தியமான அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இந்நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில், குறிப்பிடத்தக்களவு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமிடத்து முகாமைத்துவம் பின்வரும் விடயங்களைப் பரிசீலனையில் கொள்கிறது.

*தொடர்ந்து செல்லும் கரிசனைகள்*

வியாபாரம் தொடர்ந்து செல்வதற்கான இயலாற்றலை நிதியம் கொண்டிருப்பதனை முகாமைத்துவம் மதிப்பீடு செய்திருப்பதுடன் கிட்டிய எதிர்காலத்தில் வியாபாரத்தினைத் தொடர்வதற்கான மூலவளங்களைக் கொண்டிருப்பதையிட்டும் அது திருப்தியடைந்திருக்கிறது. எனவே, நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் கரிசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

மேலும், குறிப்பிட்ட கணக்கீட்டு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பன பயன்படுத்தப்பட்டமைக்குப் புறம்பாக, பின்வருவன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- நிதியியல் சாதனங்களின் மதிப்பீடு
- சொத்துக்களின் பெறுமதி இழத்தல்
- சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் தேய்மானம்
- பொறுப்புக்களுக்கான ஏற்பாடு

### 2.8 *அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்*

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழ்ந்த அனைத்துப் பொருண்மை வாய்ந்த சம்பவங்களும் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளன. அறியவந்த அனைத்துப் பொறுப்புக்களுக்காக ஏற்பாடுகளும் தொடர்பான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்பாராத பொறுப்புக்கள் என்பது சாத்தியமான கடப்பாடுகளாகும். பொருளாதார நன்மையின் மாற்றலானது சாத்தியமற்றதாக அல்லது அளவிடமுடியாத நம்பகத்தன்மையை கொண்டிருக்குமிடத்து இவற்றின் நிலவுகை நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நடைமுறை கடப்பாடுகளால் மாத்திரம் உறுதி செய்யப்படும். நிதியியல் நிலைமைக் கூற்றில் எதிர்பாராத பெறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை ஆனால், அவை தொலைநிலையில் இருந்தால் மாத்திரம் வெளிப்படுத்தப்படுகின்றன.

## 3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

### 3.1 *வருமானம் மற்றும் செலவினங்களை அங்கீகரித்தல்*

வருமானம் என்பது பொருளாதார நன்மைகள் நிதியத்திற்குப் பாயக்கூடிய சாத்தியப்பாடுகளைக் கொண்ட அளவிற்கும் வருமானத்தினை நம்பகமாக அளவிடக்கூடிய அளவிற்கும் அங்கீகரிக்கப்படுகின்றது. செலவினங்களானது உறப்பட்ட செலவு மற்றும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயத்தின் வருவாய் என்பனவற்றிற்கிடையிலான நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினாலும் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவினாலும் நிதியத்தினை முகாமைப்படுத்துவது தொடர்பில் ஏற்படும் அனைத்துச் செலவினங்களும் நிதியத்தின் செலவினங்களாகக் கருதப்பட்டு அதன் மீது விதிக்கப்படுகின்றன.

#### *3.1.1 வட்டி வருமானம்*

பயனுறு வட்டி முறையினைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் நிதியியல் சாதனங்களுக்குமான வட்டி வருமானம், வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது நறுக்கு வட்டி வருமானம் மற்றும் நிதியியல் சாதனங்களின் கழிவிடல் அல்லது தீர்ப்பனவின் பதிவழிப்பின் மீதான இலாபம் அல்லது இழப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

#### *3.1.2 பங்குலாபங்கள்*

நிதியம் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிலைநிறுத்தப்படுகின்ற வேளையில் பங்குலாப வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது. பங்குலாப வருமானம் தேறிய ஏதேனும் அறவிடமுடியாத பிடித்துவைத்தல் வரிகளில் காட்டப்படுகின்றது.

#### *3.1.3 இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான இலாபம்*

இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான இலாபமானது பட்டியலிடப்பட்ட பங்குகளின் அகற்றல் மீது பெறப்பட்ட தேறிய வர்த்தக இலாபங்களை உள்ளடக்கியிருப்பதுடன் வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதிகளில் நிதியியல் முதலீடுகளின் விற்பனையாக நேரடி வருமானத்தில் காட்டப்படுகின்றது.

### *3.1.4 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாகச் சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் அகற்றல் மீதான இலாபம்*

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதனப் பிணையங்களின் முதலீடுகளின் அகற்றல் மீதான தேறிய மூலதன இலாபங்களை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் அகற்றல் மீதான இலாபம் உள்ளடக்குகிறது. இது பிடித்துவைக்கப்பட்ட இலாபங்களுக்கு நேரடியாக மாற்றல் செய்யப்படுவதுடன் மீண்டெழும் தாக்கங்கள் வருமானச் செலவினக் கூற்றில் பதிவுசெய்யப்படுவதில்லை.

### *3.1.5 இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான இலாபம்*

பட்டியலிடப்பட்ட பங்குகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான (சந்தைப்படியான பெறுமதி) தேறல் செய்யப்படாத இலாபங்களை இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றல்கள் உள்ளடக்குவதுடன், வருமானச் செலவினக் கூற்றில் "இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான இலாபம் அல்லது இழப்பு" என இலாபம் அல்லது இழப்பில் காட்டப்படுகின்றன.

### *3.1.6 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதிகளில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான இலாபம்*

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதிகளில் நிதியியல் முதலீடுகளின் மீதான சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்கள் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனத்தின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான (சந்தைப்படியான பெறுமதி) தேறாத இலாபங்களை உள்ளடக்குகின்றன. வேறு ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றிலுள்ள சீர்மதிப்புப் பெறுமதிகளில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான இலாபம் அல்லது இழப்பாக ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டப்படுகின்றன.

### *3.1.7 ஆளணிச் செலவுகள்*

ஆளணிச் செலவுகள் இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களத்தின் ஊ.சே. நிதியப் பிரிவு ஆகிய இரண்டினாலும் உறப்பட்ட அனைத்து அலுவலர்களுடனும் தொடர்பான செலவுகளை உள்ளடக்குகிறது. இந்நிதியமானது தனியான ஓய்வூதிய நிதியத்தினையோ அல்லது தொழிலுக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டத்தினையோ பேணவில்லை.

### *3.1.8. வருமான வரி*

தற்போதைய மற்றும் முன்னைய ஆண்டிற்கான தற்போதைய வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வரிவிதிப்பு அறவிடுவதற்கு அல்லது அதிகாரிகளுக்கு செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் கணிக்கப்படுகின்றன. தொகையினை கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வரிவீதங்களும் வரிச் சட்டங்களும் அறிக்கையிடும் நாளன்று இயற்றப்பட்டனவாக அல்லது அதன்பின்னர் இயற்றப்பட்டனவாக இருக்கும்.

2018 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கமைவாக நிதியமானது 14 சதவீத வருமான வரியினைச் செலுத்த பொறுப்புடையதாகும்.

## 3.2 சொத்துக்கள்

### 3.2.1 நிதியியல் சாதனங்கள்

3.2.1.1 ஆரம்ப அங்கீகரிப்பு, வகைப்படுத்தல் மற்றும் அதன் பின்னரான அளவு முறைகள்

ஊழியர் சேமலாப நிதியம் அதன் நிதியியல் சொத்துக்களை பின்வரும் அளவு முறை வகைகளுக்குள் வகைப்படுத்துகிறது:

(அ) சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படவுள்ளவை (ஒன்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமாக அல்லது இலாபம் அல்லது இழப்பு ஊடாக); அத்துடன்

(ஆ) பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்படவுள்ளவை

வகைப்படுத்தலானது, நிதியியல் சொத்துக்களின் முகாமைத்துவத்திற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் வியாபார மாதிரியின் மீதும் நிதியியல் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல்களின் ஒப்பந்த ரீதியான நியதிகளிலும் தங்கியிருக்கிறது.

(i) **பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள்**

<u>படுகடன் சாதனங்கள்</u>

உறுப்பினர்களின் கடப்பாடுகளில் சேர்ப்பதற்கு முக்கியமாக பெற்றுக்கொள்ளப்பட்ட படுகடன் சாதனங்களிலிருந்தான முதலீடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்குமிடத்து பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

- குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் காசுப்பாய்ச்சலை அதிகரிக்கின்ற ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல் தொகை மீதான முதலினதும் வட்டியினதும் ஏகக் கொடுப்பனவுகளை பிரதிபலிக்கின்றன; அத்துடன்
- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல் சேகரிப்பினை வைத்திருப்பதன் மூலம் குறிக்கோள்கள் எய்தப்பட்டு வியாபார மாதிரிகளுக்குள் வைத்திருக்கப்படுகின்றன.

இப்படுகடன் சாதனங்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியினையும் நேரடியாகச் சேர்க்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் செலவினைக் கூட்டிய செலவில் அங்கீகரிப்பதுடன் பின்னர் முதிர்ச்சிக்கு நிலையான வீதத்திலான பெறுவனவினை அனுமானித்து பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. இக்கொடுகடன் பெறுமதி இழப்பின் அளவீடானது, கீழேயுள்ள குறிப்பு 3.2.1.2 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியில் விபரிக்கப்பட்டுள்ள மூன்று கட்டங்களில் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

(ii) **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள்**

<u>படுகடன் சாதனங்கள்</u>

படுகடன் சாதனங்களிலிருந்தான முதலீடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்குமிடத்து அவை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

- குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் காசுப்பாய்ச்சலை அதிகரிக்கின்ற ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல்தொகை மீதான முதலினதும் வட்டியினதும் ஏகக் கொடுப்பனவுகளை பிரதிபலிக்கின்றன; அத்துடன்

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலை சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகிய இரண்டின் மூலமும் குறிக்கோள்கள் எய்தப்பட்டு வியாபார மாதிரிகளுக்குள் வைத்திருக்கப்பட்டன.

இப்படுகடன் சாதனங்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியினையும் நேரடியாகச் சேர்க்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் செலவினையும் கூட்டிய செலவில் அங்கீகரிப்பதுடன் பின்னர் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற இலாபம் மற்றும் இழப்புக்கள் பங்குரிமை மூலதனத்தின் வேறானதொரு பிரிவில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றன. பெறுமதி இழப்புக்கள் அல்லது திரும்பல்கள், வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இலாபம் மற்றும் இழப்புக்கள் இலாபம் மற்றும் இழப்புக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. அகற்றப்படுவதனைத் தொடர்ந்து, முன்னர் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது இழப்பு பங்குரிமை மூலதனத்திலிருந்து வருமானக்கூற்றிற்கு மீள் வகைப்படுத்தப்படுகிறது.

கொடுகடன் பெறுமதி இழப்பின் அளவீடானது, பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் நிதியியல் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்பட்டவாறு மூன்று கட்டங்களில் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரி, குறிப்பு 3.2.1.2இல் நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பின் கீழ் விபரிக்கப்படுகிறது.

<u>பங்குரிமை மூலதனச் சாதனங்கள்</u>

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 3இன் “வியாபார இணைப்பு” இற்கு ஏற்புடைத்தான “வியாபார இணைப்புக்கள்” வர்த்தகப்படுத்தலுக்கோ அல்லது எதிர்பாராத இழப்பீடுகளுக்காகவோ வைத்திருக்கப்படாத பங்குரிமைகளிலுள்ள முதலீடுகள் என ஊழியர் சேமலாப நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டவைகள், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றவிடத்து மாற்றமுடியாத தேர்வுகள் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமூடாக சீர்மதிப்புப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்கின்ற மாற்றமுடியாத தேர்வொன்றாக முகாமைத்துவம் கருதாதவிடத்து சொத்துப்பட்டியலானது செலுத்தப்படாத முதலீடு போன்றவற்றின் மூலம் இலாபம் மற்றும் இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படல் வேண்டும்.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டப்பட்டுள்ள தொகைகள் அதன் பின்னர் இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றல் செய்யப்படவில்லை. அத்தகைய முதலீடுகள் மீதான பங்குலாபங்கள் இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**(iii) இலாபம் அல்லது இழப்பூடான சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள விடயங்கள்**

இலாபம் அல்லது இழப்பூடான சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள விடயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

(அ) வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படும் விடயங்கள்;

நிதியியல் சாதனமொன்று கிட்டிய அண்மைக் காலத்தில் விற்பனை செய்யும் அல்லது மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக கையேறக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது உறப்பட்டிருக்குமிடத்து அல்லது நிதியியல் சாதனங்களின் சொத்துப்பட்டியலை உருவாக்குவதற்காக வைத்திருக்கப்படுமிடத்து அவை நிதியியல் சாதனங்கள் என வகைப்படுத்தப்பட்டு ஒன்றாக முகாமைப்படுத்தப்படுவதுடன் சில குறுங்கால

இலாபங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அல்லது தகைமைப் பாதுகாப்பு தொடர்புகளைக் கொண்டிராத பெறுதிகளாகக் காணப்படுகின்ற சான்றுகளைக் கொண்டுள்ளன.

வர்த்தகப்படுத்தலுக்கான பெறுதிகளும் வர்த்தகப்படுத்துவதற்கான பிணையங்களும் வர்த்தகப்படுத்துவதற்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுவதுடன் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) ஆரம்ப அங்கீகரிப்பின் மீது இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியாக விசேடமாக குறித்துரைக்கப்பட்ட விடயங்கள்

ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து, நிதியியல் சாதனங்களை இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டனவாக குறித்துரைக்கமுடியும். நிதியியல் சொத்தொன்று இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் மாத்திரம் குறித்துரைக்கப்படலாம். அவ்வாறு செய்யும் பொழுது வேறுபட்ட அடிப்படையில் நிதியியல் சொத்துக்களை அல்லது பொறுப்புக்களை அளவிடுவதிலிருந்து தோன்றக்கூடியவை தவிர்ந்த அளவீடுகளை அல்லது முரண்பாடுகளை (அதாவது கணக்கீடுகளின் பொருத்தப்பாடற்ற ஒன்றினை நீக்குதல்) நீக்கிவிடும் அல்லது கணிசமானளவிற்குக் குறைத்துவிடும்.

(இ) முதல் மற்றும் வட்டியின் முழுமையான கொடுப்பனவினை எடுத்துக்காட்டாத, ஒப்பந்த நியதிகளுடன் கூடிய படுகடன் சாதனங்கள்

இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கல்வாங்கல் செலவு வருமானக் கூற்றில் உறப்பட்டவைகளாக அங்கீகரிக்கப்படுகின்றது. அதன்பின்னர், சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டு ஏதேனும் இலாபம் அல்லது இழப்பு காணப்படுமிடத்து அவை வருமானக்கூற்றில் அவை தோன்றியவாறு அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதியியல் சொத்துக்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுமிடத்து, கொடுகடன் மதிப்பீட்டுச் சீராக்கம் இணைத்தரப்பினர்களின் கொடுகடன் நன்மதிப்பினைப் பிரதிபலிக்கும் விதத்தில் உள்ளடக்கப்பட்டு கொடுகடன் இடர்நேர்வுகளில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமான சீர்மதிப்புப் பெறுமதியிலான அசைவுகளை பிரதிபலிக்கின்றன.

*பெறுதி நிதியியல் சாதனங்களும் பாதுகாப்புக் கணக்கீடும்*

பெறுதி நிதியியல் சாதனங்கள் ஒப்பந்த ரீதியானவையாக இருப்பதுடன் அவற்றின் பெறுமதி ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான விலை, சுட்டெண் அல்லது வேறு மாறிகளிலிருந்து பெறப்படுவதுடன் உண்மையில் பரஸ்பரபரிமாற்றல் போன்ற பொதுவான சாதனங்கள், முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள், முற்பேரங்கள் மற்றும் தேர்வுகளை உள்ளடக்குகின்றன.

அனைத்துப் பெறுதிகளும் சீர்மதிப்புப் பெறுமதிகளில் ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படுவதுடன், காத்திரமான பாதுகாப்புத் தொடர்பு முறைகளின் ஒரு பகுதியாக குறித்துரைக்கப்பட்ட பெறுதிகள் தவிர்ந்தவை வர்த்தகப்படுத்தலுக்கானவையாக வகைப்படுத்தப்பட்டன. பெறுதிகளின் கொண்டுசெல்லப்படும் பெறுமதி, ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் முழுவதும் சீர்மதிப்புப் பெறுமதியில் மீள அளவிடப்படுகின்றது. சீர்மதிப்புப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்து பெறுதிகள் சொத்துக்களாகவும் சீர்மதிப்புப் பெறுமதி எதிர்க்கணியமக இருக்குமிடத்து பொறுப்புக்களாகவும் கொண்டு செல்லப்படுகின்றன.

3.2.1.2 நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஊழியர் சேமலாப நிதியம், இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத நிதியியல் சொத்துக்களின் பின்வரும் வகைகளுக்காக எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை அளவிடுவதற்காக மூன்று கட்டங்களிலான அணுகுமுறையினை பிரயோகிக்கின்றது:

- பதிவழிக்கப்பட்ட கிரயத்திலும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியிலும் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்;
- கடன் கடப்பாடுகள்; அத்துடன்
- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்

பங்குரிமை மூலதன முதலீடுகளின் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் கொடுகடன் இடர்நேர்வில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் பின்வரும் மூன்று கட்டங்களினூடாக நிதியியல் சொத்துக்கள் மாற்றப்படுகின்றன.

கட்டம் 1: 12 - மாதங்கள் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள்

ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லாதிருக்குமிடத்து வெளிப்படுத்தல்களும் அங்கீகரித்தலினை அடுத்து கொடுகடன் இழப்புக்களாக அங்கீகரிக்கப்பட்டவையும் ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடனின் ஒரு பகுதியும் அடுத்த 12 மாதங்களுக்குள் நிகழ்வதற்கான செலுத்தத்தவறிய நிகழ்தகவுகளுடன் இணைந்தவையாக அங்கீகரிக்கப்பட்டன.

எவருடைய கொடுகடன்கள் குறிப்பிடத்தக்களவிற்குத் தேய்வடையவில்லையோ அந்த வாடிக்கையாளர்களிடமிருந்தான 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை ஊழியர் சேமலாப நிதியம் தீர்மானிக்கிறது.

கட்டம் 2: ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு - கொடுகடன் பெறுமதி இழக்கப்படவில்லை.

வெளிப்படுத்துகைகளுக்காக ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுமிடத்து, ஆனால் கொடுகடன் பெறுமதி இழக்கப்படாதவிடத்து ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு (அதாவது நிதியியல் சொத்துக்களின் எஞ்சிய ஆயுள் காலப்பகுதி பிரதிபலிக்கப்படுகிறது) அங்கீகரிக்கப்படுகிறது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கொள்கைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் BBB- இற்குக் கீழ் தரமிடப்பட்டவைகள் முதலீட்டு தரமல்லா முதலீடுகள் என பரிசீலனையில் கொள்ளப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் அத்தகைய முதலீடுகளைக் கொடுகடன் இடர்நேர்வுவினை இடர்நேர்வுடன் கூடிய குறிப்பிடத்தக்க தேய்வினைக் கொண்டதாக கருதுகிறது. அத்தகைய முதலீடுகள் ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு கணிப்புக்களாகக் கருத்திற் கொள்ளப்படுகிறது.

மேலும், முதலீட்டு தரத்தின் தரமிடலுக்குள்ளேயான அசைவு கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க தேய்வினை குறிப்பிடுகின்றது. குறிப்பிடத்தக்க தேய்வுகள் சாதனத்தின் உருவாக்கத்திலிருந்து இணைத்தரப்பினரின் இசைந்து வெளிவாரி கொடுகடன் தரமிடலில் இரண்டு வெட்டுப்புள்ளிக்குக் கீழான தரமிடலினூடாக அளவிடப்படுகின்றன.

நாட்டிற்கான சாதனங்களின் குறிப்பிடத்தக்க தேய்வு என்பது இணைத்தரப்பினரின் வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலின் நான்கு மட்டங்களின் தரக் குறைப்பு என வரையறை செய்யப்படுகிறது.

கட்டம் 3: ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு - கொடுகடன் பெறுமதி இழப்பு

உறப்பட்ட சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மீது பாதகமான தாக்கத்தினை கொண்டிருக்கின்ற ஒன்று அல்லது கூடுதலான நிகழ்வுகளின் போது வெளிப்படுத்துகைகள் கொடுகடன் பெறுமதி இழப்புக்களாக மதிப்பிடப்படுகின்றன. கொடுகடன் பெறுமதி இழப்புக்களாக மாறுகின்ற வெளிப்படுத்துகைகளுக்காக ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்படுவதுடன், வட்டி வருமானம் மொத்த கொண்டுசெல்லல் தொகையினைவிட பதிவழிக்கப்பட்ட கிரயத்திற்கான (தேறிய ஏற்பாடுகள்) பயனுறு வட்டி வீதங்களைப் பிரயோகிப்பதன் மூலம் கணிக்கப்படுகிறது.

*பெறுமதியிழத்தலுக்கான கட்டத்தினைத் தீர்மானித்தல்*

ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும், அறிக்கையிடுகின்ற நாளுக்கும் ஆரம்ப அங்கீகரிப்பு நாளுக்குமிடையில், எதிர்பார்க்கப்படும் ஆயுள் காலத்தின் போது நிகழ்கின்ற செலுத்தத்தவறும் இடர்நேர்வுகளுடன் ஒப்பிடுவதன் மூலமான ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் வெளிப்படுத்துகைகளுக்கான கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதனைக் கண்டறிவதற்காக ஊழியர் சேமலாப நிதியம் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பானது; இந்நோக்கத்திற்காக நியாயமற்ற செலவுகள் அல்லது இந்நோக்கத்திற்கான முயற்சிகளும் இல்லாமல் கிடைக்கின்ற நியாயமானதும் ஆதரவாக இருக்கத்தக்கதுமான தகவல்களைப் பரிசீலனையில் கொள்கிறது. இது கணியம்சார் மற்றும் தரம்சார் தகவல்களையும் அத்துடன் முன்னோக்கிய பகுப்பாய்வுகளையும் உள்ளடக்குகிறது.

ஊழியர் சேமலாப நிதியம், வெளிப்படுத்துகை ஒன்றின் மீதான கொடுகடன் இடர்நேர்வு தனிப்பட்ட அல்லது ஒன்றுசேர்ந்த அடிப்படையில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளதா என்பதனை மதிப்பிடுகின்றது. பெறுமதி இழப்பின் ஒன்றுசேர்ந்த மதிப்பீட்டு நோக்கத்திற்காக, நிதியியல் சாதனங்கள் அவற்றின் வகை, கொடுகடன் இடர்நேர்வுத் தரமிடல், ஆரம்ப அங்கீகரிப்பின் திகதி, முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலம், கடன்பாட்டாளரின் கைத்தொழில் மற்றும் ஏனைய தொடர்பான காரணிகள் என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு பகிரப்பட்ட கொடுகடன் இடர்நேர்வுப் பண்புகளின் அடிப்படையில் தொகுதிகளாக்கப்படுகின்றன.

*எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் அளவிடல்*

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட இழப்பின் பக்கச்சார்பற்ற மற்றும் நிகழ்தகவுத்தன்மை கொண்ட - நிறையேற்றப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து பெறப்படுவதுடன் பின்வருமாறு அளவிடப்படுகின்றன:

- அறிக்கையிடுகின்ற நாளன்று கொடுகடன் பெறுமதி இழக்கப்படாத நிதியியல் சொத்துக்கள்: நிதியியல் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் காலத்தில் அனைத்து காசுப் பற்றாக்குறைகளினதும் பெறுமதி தற்போதுள்ளவாறு பயனுறு வட்டி வீதத்தினால் கழிவிடப்படுகின்றது. காசுப் பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்தின்படி ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வரவேண்டிய காசுப்பாய்ச்சலுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற காசுப் பாய்ச்சலுக்குமிடையிலான வேறுபாடாகும்.

- அறிக்கையிடுகின்ற நாளன்று கொடுகடன் பெறுமதி இழக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள்: மொத்தமாக கொண்டு செல்லப்படும் தொகைக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக பயனுறு வட்டி வீதத்தினால் கழிவிடப்பட்ட தொகை.

- எடுப்பனவு செய்யப்படாத கடன்கடப்பாடுகள்: கடப்பாடுகள் எடுப்பனவு செய்யப்படாதிருக்குமாயின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வரவேண்டிய ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சலுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைக்குமிடையிலான வேறுபாடுகளின் தற்போதைய பெறுமதி.

- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்: ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் ஏதேனும் தொகையினைக் கழித்து உடமையாளர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கொடுப்பனவுகள்.

முன்னோக்கிய தகவல்களைப் பயன்படுத்துவது உட்பட, எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை ஊழியர் சேமலாப நிதியம் எவ்வாறு கணிக்கிறது என்பது மீதான மேலதிக தகவல்களுக்கு குறிப்பு 29 இலுள்ள நிதியியல் சொத்துக்கள் பிரிவின் கொடுகடன் தரத்தினைப் பார்க்கவும்.

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பானது, இலாபம் மற்றும் இழப்பினூடாக ஐயத்திற்குரிய படுகடன் கணக்கிற்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்டது. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சமச்சீர் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட படுகடன் சாதனங்களைப் பொறுத்த வரையில் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் அளவிடலானது, பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் நிதியியல் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்பட்டவாறு மூன்று கட்ட அணுகுமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பான தொகையுடன் ஊழியர் சேமலாப நிதியம் இலாபம் மற்றும் இழப்பீட்டிலுள்ள ஒதுக்கல் கட்டணத்தினை அங்கீகரித்ததுடன் ஐந்தொகையிலுள்ள சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் குறைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை.

### 3.2.1.3 நிதியியல் சாதனங்களை அங்கீகரித்தல் மற்றும் அங்கீகரிக்காது விடல்

சாதனத்தின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பினராக ஊழியர் சேமலாப நிதியம் மாறும்பொழுது நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் பொறுப்புக்கள் ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன. இது பொதுவாக வர்த்தகத் திகதியில் இடம்பெறுகிறது. கடன்களும் பெறத்தக்கவைகளும் கடன்பாட்டாளர்களுக்கு முன்கூட்டியே காசு வழங்கப்படும் பொழுது (அல்லது தீர்ப்பனவு செய்யப்படும் போது) அங்கீகரிக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது இழப்பினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அமைந்த நிதியியல் சொத்துக்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. மற்றைய அனைத்து நிதியியல் சொத்துக்களும் சீர்மதிப்புப் பெறுமதியிலும் நேரடியாகச் சேர்க்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் செலவினைக் கூட்டிய செலவிலும் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதியம் சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகியிருக்கும் வேளையில் அல்லது கொடுக்கல்வாங்கலொன்றில் நிதியியல் சொத்துக்களின் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்காக நிதியம் அதன் ஒப்பந்த ரீதியான உரிமையினை மாற்றல் செய்யும் போது நிதியியல் சொத்துக்கள் அங்கீகரிக்காதுவிடப்படுகின்றன. இதில், கணிசமாக அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் உரிமையாளரின் வெகுமதிகள் மாற்றியமைக்கப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்ட மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்களிலுள்ள ஏதேனும் வட்டி தனியான சொத்தாக அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகிறது.

ஊழியர் சேமலாப நிதியம் அதன் கடப்பாடுகளை ஆற்றும்பொழுது அல்லது ஒப்பந்தங்கள் இரத்துச்செய்யப்படும் பொழுது அல்லது காலாவதியாகும் போது நிதியியல் பொறுப்புக்கள் ஐந்தொகையிலிருந்து அங்கீகரிக்காது விடப்படுகின்றன.

3.2.1.4 எதிரீடு செய்தல்

நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் தேறிய தொகையானது, ஊழியர் சேமலாப நிதியம் தொகையினை எதிரீடு செய்வதற்கு சட்ட ரீதியான உரிமையினைக் கொண்டிருக்கும் போது அத்துடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான நோக்கம் இருப்பின் அல்லது சொத்துக்கள் தேறல் செய்யப்பட்டு பொறுப்புக்கள் சமகாலத்தில் தீர்ப்பனவு செய்யப்படும்பொழுது தேறிய தொகை ஐந்தொகையில் காட்டப்படுகிறது.

3.2.1.5 முக்கியமான கணக்கீட்டு எடுகோள்களும் மதிப்பீடுகளும்

ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் செய்யப்படுகின்ற எடுகோள்கள் அத்திகதியிலுள்ளவாறான மிகச்சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் நம்பகரமான முறையில் அளவிடப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக ஊழியர் சேமலாப நிதியம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டிருக்கின்ற போதும் உண்மையான தொகை இம்மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடக்கூடும். மதிப்பீடுகளும் அடிப்படை எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடுகள் திருத்தப்படும் காலத்திலும் ஏதேனும் எதிர்கால நடவடிக்கைகளில் போதுமான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற மிக உணர்வு பூர்வமான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறித்துரைக்கப்பட்டுகின்றன.

*சீர்மதிப்புப் பெறுமதிகளின் அளவிடல்*

சீர்மதிப்புப் பெறுமதி என்பது, அளவிடப்படுகின்ற திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களிடையே இடம்பெறுகின்ற ஒழுங்கான கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்தொன்றினை விற்பனை செய்வதற்காக பெறப்படக்கூடிய விலை அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவாகும்.

நிதியியல் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை வகைப்படுத்துமிடத்து பெறுபேறுகள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுவருவதுடன் சாத்தியமானவிடத்து சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பிடப்பட்ட குறிப்பீடுகள் தொடர்பான விடயங்கள் மூலம் அல்லது ஊழியர் சேமலாப நிதியம் உடனடியாக அணுகக்கூடிய மிக அனுகூலமான திரவச்சந்தையின் வழங்கல் விலைகளின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. கொடுகடன் இடர்நேர்விற்கான சீராக்கமும் பொருத்தமான விதத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளடக்கப்படுகின்றன.

தேறிய திறந்த நிலைமைக்கான சீர்மதிப்புப் பெறுமதி என்பது தீவிரமான சந்தையொன்றில் குறிப்பீடு செய்யப்பட்ட நிதியியல் பொறுப்பொன்றில் நடைமுறை வழங்கல் விலையாகவும் நிதியியல் சொத்துக்களுக்கான குறிப்பீட்டு விலையாகவும் இருப்பதுடன் வழங்குவதற்காக அல்லது வைத்திருக்கப்படுவதற்கான சாதனத்தின் கூறுகளது எண்ணிக்கையினால் பெருக்கப்படுகிறது.

குறிப்பிட்ட சொத்து அல்லது பொறுப்புக்கு தீவிரமான சந்தைகள் இல்லாதவிடத்து, ஊழியர் சேமலாப நிதியமானது சீர்மதிப்புப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு, அண்மைய நடுநிலையான கிட்டுமான கொடுக்கல்வாங்கல்கள், கழிவுசெய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் பகுப்பாய்வுகள், தேர்வு விலையிடல் மாதிரிகள் மற்றும் ஏனைய மதிப்பிடல் உத்திகள் என்பனவற்றில் பெறப்பட்ட கொடுக்கல்வாங்கல் விலைகள் உட்பட, பெறுமதி மதிப்பீட்டு உத்திகளை சந்தை நிலைமைகள் மற்றும் அறிக்கையிடும் நாளில் காணப்பட்ட இடர்நேர்வு என்பனவற்றின் அடிப்படையில்

பெற்றுக்கொண்டது. அவ்வாறு செய்யும் போது, சீர்மதிப்புப் பெறுமதியானது, அவதானிக்கத்தக்க சந்தை உள்ளீடுகளின் உயர்ந்தபட்ச பயன்பாட்டினை உருவாக்குகின்ற மதிப்பீட்டு உத்திகளினதும் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்ச நம்பகத்தன்மையினைப் பயன்படுத்துவதன் மூலமும் மதிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும், குறிப்பு 15இல் விளக்கப்பட்டதற்கமைவாக, பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்கள் போதுமானளவிற்கு கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டதுடன் மதிப்பீட்டு உத்திகளைப் பயன்படுத்தி நம்பகமான சீர்மதிப்புப் பெறுமதியை அளவிடுவதற்கு அண்மைய தகவல்கள் கிடைக்கக்கூடியதாக இல்லை. மேலும், மதிப்பிடப்பட்ட பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதன முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதிகள் குறிப்பு 30இல் காட்டப்பட்டுள்ளன.

### *3.2.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்*

***அங்கீகரித்தல்***

சொத்துக்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிதியத்திற்கு பாயக்கூடிய தன்மையும் சொத்துக்களின் செலவினை நம்பகமாக அளவிடக்கூடிய சாத்தியமும் காணப்படுமிடத்து ஆதனம், பொறி மற்றும் சாதனம் அங்கீகரிக்கப்படுகின்றன.

***அளவிடுதல்***

அனைத்து ஆதனம், பொறி மற்றும் சாதனம் ஆரம்பத்தில் அவற்றின் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. கிரயமானது சொத்துக்களின் கொள்வனவு மற்றும் அதன் பின்னரான செலவினையும் ("பின்னரான செலவுகளின்" கீழ் விளக்கப்பட்டவாறு) நேரடியான காரணங்களினால் ஏற்படும் செலவினத்தையும் உள்ளடக்குகிறது. தொடர்பான சாதனங்களின் தொழிற்பாடுகளின் இன்றியமையாத விடயமான மென்பொருளின் கொள்வனவு சாதனங்களின் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டிருக்கிறது.

***செலவு மாதிரி***

ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு ஏதுமிருப்பின், அவை நீங்கலாக ஆதனம், பொறி மற்றும் சாதனம் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. சொத்தொன்றின் கொண்டுசெல்லல் பெறுமதி அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையினைவிட உயர்வாக இருக்கும் பொழுது கொண்டுசெல்லல் பெறுமதி அதன் அறவிடத்தக்க தொகையளவிற்குக் குறைத்துப் பதியப்படுகிறது (தயவுசெய்து குறிப்பு 3.2.6 - நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பினைப் பார்க்கவும்).

***பின்னரான செலவுகள்***

ஆதனம், பொறி மற்றும் சாதனங்களின் குறிப்பிடத்தக்களவான பகுதி கிரமமான இடைவெளிகளில் பதிலீடு செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படும் வேளையில் நிதியமானது பதிலீடு செய்யப்பட்ட பகுதியினை அங்கீகரிக்காது விடுவதுடன், புதிய பகுதியினை அதனுடன் இணைந்த ஆயுள் காலப்பகுதிக்கு அங்கீகரிப்பதுடன், அதற்கேற்றவாறு தேய்மானம் செய்யப்படுகின்றது. இடம்பெற்று வருகின்ற திருத்தல் மற்றும் பேணல் செலவுகள் அவை ஏற்படுவதனைப் பொறுத்து இலாபம் அல்லது இழப்பில் விதிக்கப்படுகின்றன.

***அங்கீகரிக்காதுவிடல்***

ஆதனம், பொறி மற்றும் சாதனத்தின் விடயமொன்று விற்பனை, அகற்றுதல் அல்லது இதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலப் பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத பொழுது அவை

அங்கீகரிக்கப்படாது விடப்படுகின்றன. சொத்து அங்கீகரிக்கப்படாமையிலிருந்து எழுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது இழப்பு, சொத்து அங்கீகரிக்கப்படாத காலப்பகுதியின் இலாபம் அல்லது இழப்பில் உள்ளடக்கப்படுகிறது.

***தேய்மானம்***

தேய்மானமானது சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலத்தின் மீது நேர்கோட்டு முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சொத்தொன்றின் தேய்மானம் பயன்பாட்டிற்குக் கிடைக்கத்தக்க திகதியிலிருந்து ஆரம்பமாகின்றது அல்லது தன்னிச்சையாக கட்டமைக்கப்பட்ட சொத்துக்களைப் பொருத்தவரையில் சொத்து நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டிற்குத் தயாரான திகதியிலிருந்தும் ஆரம்பிக்கிறது. சொத்து விற்பனைக்கு வைத்திருப்பதாக வகைப்படுத்தப்பட்டுள்ள திகதிக்கு முன்னதாக அல்லது சொத்து அங்கீகரிக்கப்படாத திகதியில் தேய்மானம் நிறுத்தப்படுகிறது.

சொத்துக்களின் தேய்மானத்தின் மதிப்பிடப்பட்ட வீதங்கள் வருமாறு;

| **சொத்துக்களின் வகுப்பு** | **தேய்மான வீதம்** |
|---|---|
| கட்டடங்கள் | 02% |
| பொறிகள் மற்றும் பொறித் தொகுதிகள் | 25% |
| அலுவலகச் சாதனங்கள் | 25% |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 10% |
| உந்து ஊர்திகள் | 20% |
| கணனிச் சாதனங்கள் | 25% |
| (2016 திசெம்பர் 31ஆம் நாளிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு 50%) | |
| ஏனையவை | 20% |

எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் தேய்மானத்தின் முறை என்பன ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமானவிடத்து சீராக்கம் செய்யப்படுகின்றன.

*3.2.3 அருவச் சொத்துக்கள்*

கணனி வன்பொருளில், ஒருங்கிணைக்கப்படாத கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டுள்ளதுடன் செலவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகாலப் பயன்மிக்க ஆயுட்கால அடிப்படையில் செலவிலிருந்து ஏதேனும் ஒன்றுசேர்ந்த பதிவழிப்பைக் கழித்த பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகின்றது (2016 திசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருட்களுக்கு இரு ஆண்டுகள்).

*3.2.4 இருப்புக்கள்*

இருப்புக்கள் பயன்படுத்தத்தக்கப் பொருட்களை உள்ளடக்கியுள்ளதுடன் நிறையேற்றப்பட்ட சராசரிச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

*3.2.5 பெறத்தக்கவை*

பெறுமதியிழப்பிற்கான ஏற்பாட்டினை செய்த பின்னர் பெறத்தக்கவைகள் எதிர்பார்க்கப்படும் தேறல்செய்யத்தக்க பெறுமதியில் கொண்டு செல்லப்படுகின்றன. புலப்படத்தக்க சான்றுகளைக் கருத்திற்கொண்டு குறிப்பிடத்தக்க பெறுமதியிழப்பிற்காக அனைத்துப் பெறத்தக்கவைகளும் மதிப்பிடப்படுகின்றன.

*3.2.6 நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதியிழப்பு*

சூழ்நிலைகளில் ஏற்படும் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள், நிதியல்லாச் சொத்துக்கள் பெறுமதியினை இழக்கக்கூடும் என்பதற்கான அறிகுறியொன்றினை எடுத்துக்காட்டுமாயின் ஒவ்வொரு நிதியியல் கால முடிவிலும் நிதியம் மதிப்பீடு செய்யப்படுகிறது. அத்தகைய அறிகுறிகள் காணப்படுமாயின் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையினை நிதியம் மேற்கொள்கின்றது. சொத்தொன்றின் கொண்டு செல்லக்கூடிய தொகையானது அதன் மீளப்பெறக்கூடிய தொகையினை விஞ்சுமாயின் அச்சொத்தானது பெறுமதியிழந்ததாகக் கருதப்பட்டு அதன் அறவிடத்தக்க தொகைக்கு குறைத்து எழுதப்படுகின்றது.

*3.3 பொறுப்புக்கள்*

*3.3.1 கோரப்படாத நன்மைகள்*

ஊழியர் சேமலாப நிதிய நன்மைகள், அதன் உறுப்பினர்களுக்கோ அல்லது அதன் நன்மைபெறுநர்களுக்கோ உரிய முறையில் மீளளிக்கப்படுகின்றன. ஆனால் பல்வேறு காரணங்களினால் திருப்பியனுப்பப்பட்டவையும் அதேபோன்று ஓராண்டிற்கும் மேலாக பிடித்துவைக்கப்பட்ட நன்மைகளும் அவை மீளக்கோரப்படும் வரை கோரப்படாத நன்மைகள் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

*3.3.2 பிடித்துவைக்கப்பட்ட நன்மைகள்*

தொழில் ஆணையாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் பிடித்துவைக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய நன்மைகள், அவற்றை விடுவிக்குமாறு கோரும் அறிவித்தல் பெறப்படும் வரை பிடித்துவைக்கப்பட்ட நன்மைகளாகக் காட்டப்படுகின்றன. அத்தகைய நன்மைகள் இக்கணக்கில் ஒரு கணக்கீட்டு காலப்பகுதிக்கும் மேலாக பிடித்துவைக்கப்பட்டிருப்பதில்லை என்பதுடன் அது கோரப்படாத நன்மைகள் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது.

*3.3.3 குறைக் கொடுப்பனவுகள் மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் (மீளளிப்புக்கள்)*

குறைக் கொடுப்பனவுகள் மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் (மீளளிப்புக்கள்) கணக்கில் காட்டப்படுகின்ற மீதிகள், பகுதிக் கொடுப்பனவாக மேற்கொள்ளப்படவுள்ள நன்மைகளைப் பிரதிபலிக்கின்றன.

*3.3.4 குறைக் கொடுப்பனவுகள் மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் (பங்களிப்புக்கள்)*

குறைக் கொடுப்பனவுகள் மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் (பங்களிப்புக்கள்) கணக்கில் காட்டப்படுகின்ற மீதிகள், பெறப்பட்டு ஆனால் தற்காலிகமாக உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்படாத பங்களிப்பினைக் காட்டுகின்றன.

*3.3.5 ஏற்பாடுகள்*

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக, தற்பொழுது கடப்பாடொன்றினை (சட்ட ரீதியாக அல்லது அமைப்பு ரீதியாக) நிதியம் கொண்டிருக்கின்ற போதும் அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்கான பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் பெரும்பாலும் தேவைப்படுத்துவதுடன் கடப்பாட்டுத் தொகையினை நம்பகமான மதிப்பீடொன்றின் மூலம் மேற்கொள்ள முடியுமாயுள்ள போதும் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

*3.3.6 பொறுப்புக்களை அங்கீகரிக்காது விடல்*

பொறுப்புக்கள் தணிக்கப்பட்டிருக்கும் பொழுது பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படாது விடப்படுகின்றன. அதாவது கடப்பாடுகள் நீக்கப்படும் பொழுது, இரத்துச்செய்யப்படும்பொழுது அல்லது காலாவதியாகும் பொழுது இவை அங்கீகரிக்கப்படாது விடப்படுகின்றன.

### *3.4 வருமானக் கூற்று*

ஊழியர் சேமலாப நிதியம், அதன் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினையும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினையும் காட்டுவதற்காக இரண்டு தனித்தனியான கூற்றுக்களை அதாவது வருமானம் மற்றும் செலவினக் கூற்று மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று என்பனவற்றினைத் தயாரிக்கின்றது.

### *3.5 காசுப்பாய்ச்சல் கூற்று*

காசுப்பாய்ச்சல் கூற்றானது, “இலங்கை கணக்கீட்டு நியமம் 07 - காசுப்பாய்ச்சல் கூற்றிற்கிணங்க” காசுப்பாய்ச்சலைத் தயாரிக்கும் “நேரடி முறை” இனைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கிறது. காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் குறுங்காலம், உயர்ந்த திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் அதாவது உடனடியாக காசாக மாற்றக்கூடியவற்றையும் மாற்றத்தின் போது பெறுமதியில் மிகக் குறைந்த இடர்நேர்வுகளைக் கொண்ட தன்மைகளுக்குட்பட்டவற்றையும் உள்ளடக்கியிருக்கின்றன.

### *3.6 பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கு*

பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கூற்றுக்கள், ஆண்டு காலப்பகுதியில் காசு வடிவில் பெறப்பட்ட அனைத்துப் பெறுகைகளையும் இவ்வாண்டுப் பகுதியில் காசாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளையும் பிரதிபலிக்கிறது.

## 4. ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

முன்னைய ஆண்டின் நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பிப்பும் வகைப்படுத்தலும் திருத்தப்பட்டதுடன், அவை சிறந்த சமர்ப்பிப்புக்களுக்கும் அவற்றினை நடைமுறையாண்டுடன் ஒப்பிடுவதற்கும் பொருத்தமானதாகவிருக்கும்.

ஊழியர் சேமலாப நிதியம்
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 5. வட்டி வருமானம்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021 | | | 2020 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| திறைசேரி முறிகள் மீதான வட்டி | 285,052,453 | - | 285,052,453 | 266,130,027 |
| திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 256,047 | - | 256,047 | 414,639 |
| கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் மீதான வட்டி - பட்டியலிடப்பட்டவை | 3,153,144 | - | 3,153,144 | 3,601,195 |
| கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் மீதான வட்டி - பட்டியலிடப்படாதவை | 815,523 | - | 815,523 | 863,335 |
| நிலையான வைப்புக்கள் மீதான வட்டி | 3,856,550 | - | 3,856,550 | 5,877,047 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் மீதான வட்டி | - | - | - | 1,798 |
| நேர்மாற்று மீள்கொள்வனவுகள் மீதான வட்டி | 544,543 | - | 544,543 | 520,960 |
| | **293,678,260** | **-** | **293,678,260** | **277,409,000** |

## 6. பங்குலாப வருமானம்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021 | | | 2020 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| பங்குரிமை மூலதன பிணையங்களிலிருந்தான பங்குலாபம் - பட்டியலிடப்பட்டது | 4,057,095 | - | 4,057,095 | 2,451,343 |
| பங்குரிமை மூலதன பிணையங்களிலிருந்தான பங்குலாபம் - பட்டியலிடப்படாதது | 2,628,397 | - | 2,628,397 | 465,619 |
| பட்டியலிடப்படாத முன்னுரிமைப் பங்குகளிலிருந்தான பங்குலாபம் | - | - | - | 68,087 |
| | **6,685,492** | **-** | **6,685,492** | **2,985,049** |

## 7. இலாபம் அல்லது இழப்பினூடாகச் சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (இழப்பு)

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021 | | | 2020 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 | மொத்தம் ரூ.'000 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனப் பிணையங்கள் | 41,840,149 | - | 41,840,149 | 5,023,106 |
| | **41,840,149** | - | **41,840,149** | **5,023,106** |

ஊழியர் சேமலாப நிதியம்

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 8. நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021<br>ரூ.'000 | 2020<br>ரூ.'000 |
|---|---|---|
| **பெறுமதி இழத்தலுக்கான குறைந்த/ (கூடிய) ஏற்பாடு (குறிப்பு 17 மற்றும் 19)** | | |
| கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் | 69 | (1,416) |
| நம்பிக்கைச் சான்றிதழ் | - | (14) |
| நிலையான வைப்புக்கள் | 939 | (24) |
| ஏனைய நிதியியல் முதலீடு | (58) | (180) |
| வங்கி மீதிகள் | 66 | (8) |
| | 1,016 | (1,643) |
| | | |
| பெறுமதி இழத்தல்/ பெறுமதி இழத்தல் செலவுகளின் குறைந்த/ கூடிய ஏற்பாடு | **1,016** | **(1,643)** |

## 9. ஏனைய வருமானம்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021 | | | 2020 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை<br>ரூ.'000 | தொழில் திணைக்களம்<br>ரூ.'000 | மொத்தம்<br>ரூ.'000 | மொத்தம்<br>ரூ.'000 |
| மிகைக் கட்டணங்கள் | 162,650 | - | 162,650 | 203,320 |
| ஏனைய வருமானம் | 2 | 9,009 | 9,011 | 8,770 |
| | **162,652** | **9,009** | **171,661** | **212,090** |

## 10. தொழிற்பாட்டுச் செலவினங்கள்

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021 | | | 2020 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை<br>ரூ.'000 | தொழில் திணைக்களம்<br>ரூ.'000 | மொத்தம்<br>ரூ.'000 | மொத்தம்<br>ரூ.'000 |
| ஆளணிச் செலவுகள் | 601,719 | 455,912 | 1,057,631 | 1,102,321 |
| நிர்வாகச் செலவுகள் | 299,212 | 223,840 | 523,052 | 472,014 |
| ஏனைய செலவுகள் | 59,862 | 5,591 | 65,453 | 70,743 |
| | **960,793** | **685,343** | **1,646,136** | **1,645,078** |

## 11. வரிச் செலவு

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021<br>ரூ.'000 | 2020<br>ரூ.'000 |
|---|---|---|
| ஆண்டிற்கான இலாபத்தின் மீதான வருமான வரி (11.1) | 41,650,393 | 39,080,226 |
| முன்னயை ஆண்டுகளின் (கூடிய)/ குறைந்த ஏற்பாடு | 6,583 | (17,645) |
| | **41,656,976** | **39,062,581** |

வரிச் செலவினங்கள், இவ்வாண்டிற்கான வரிவிதிக்கத்தக்க வருமானம் மீதான மதிப்பிடப்பட்ட வரிகளையும், முன்னைய ஆண்டு தொடர்பான வரி மதிப்பீடுகளுக்கான சீராக்கங்களையும் உள்ளடக்குகிறது. நடைமுறை ஆண்டிற்கான வரிச் செலவினத் தொகை என்பது ஏற்புடைத்தான சட்டங்கள், பணிப்புரைகள் மற்றும் தீர்மானங்களின் நியதிகளில் வரிப் பொறுப்புக்களின் சிறந்த மதிப்பீடொன்றாகும்.

## ஊழியர் சேமலாப நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

***தொடர்பான வரிச் சட்டவாக்கங்களின் கீழ் ஏற்புடைத்தான குறிப்பிடத்தக்க ஏற்பாடுகளின் தொகுப்பு***

(அ) 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்படி 2018 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நிதியம் 14 சதவீத வரியினை செலுத்தப் பொறுப்புடையதாகும்.

### 11.1 வரிக்கு முன்னரான இலாபத்திற்கும் வரி விதிக்கத்தக்க வருமானத்திற்குமிடையிலான மீளிணக்கப்படுத்தல்

| | 2021<br>மொத்தம்<br>ரூ.'000 | 2020<br>மொத்தம்<br>ரூ.'000 |
|---|---|---|
| வருமான வரிக்கு/ முதலீட்டு வருமானத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/ (இழப்பு) | 340,728,410 | 283,985,810 |
| சீராக்கம்: | | |
| பங்குலாப வருமானம் | (2,800,870) | (1,231,564) |
| இலாபம்/ (இழப்பு) ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சாதனங்கள் மீதான தேறல் செய்யப்படாத இலாபம்/ இழப்பு | (41,840,149) | (5,023,106) |
| நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழத்தலுக்கான கூடியளவான ஏற்பாடு | 1,016 | (1,643) |
| அனுமதிக்கப்படாத செலவுகள் | 1,414,398 | 1,414,971 |
| வரி விதிப்பிற்கான சீராக்கப்பட்ட வருமானம் | **297,502,806** | **279,144,469** |
| நிதியத்திற்கான நடைமுறை வரிச் செலவினங்கள் | | |
| 14 சதவீதம் (2018.04.01 இற்கு பின்னர்) | 41,650,393 | 39,080,226 |
| | **41,650,393** | **39,080,226** |

### 12. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலான தேறிய இலாபம்/ (இழப்பு)

| *திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை* | 2021<br>மொத்தம்<br>ரூ.'000 | 2020<br>மொத்தம்<br>ரூ.'000 |
|---|---|---|
| பங்குரிமை மூலதனத்தின் மீதான இலாபம்/ (இழப்பு) | 48,794 | 350,829 |
| | **48,794** | **350,829** |

ஊழியர் சேமலாப நிதியம்
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 13. ஆதனம், பொறி மற்றும் சாதனம்

### 13.1 நாணயச் சபை மற்றும் தொழில் திணைக்களம் - 2021

| | கணனிச் சாதனம் | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | அலுவலகச் சாதனம் | உந்து ஊர்திகள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| கிரயம் | | | | | | |
| 2021 சனவரி 01இல் உள்ளவாறு | 571,054 | 110,937 | 424,513 | 97,202 | 6,423 | 1,210,130 |
| இவ்வாண்டுப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 39,155 | 1,253 | 8,228 | - | - | 48,636 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **610,210** | **112,190** | **432,741** | **97,202** | **6,423** | **1,258,766** |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | |
| 2021 சனவரி 01இல் உள்ளவாறு | 504,276 | 93,211 | 300,661 | 56,093 | 5,351 | 959,593 |
| இவ்வாண்டிற்கான விதிப்பு | 13,536 | 6,812 | 4,181 | - | 495 | 25,024 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **517,812** | **100,023** | **304,842** | **56,093** | **5,846** | **984,616** |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | | | | | |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **92,398** | **12,167** | **127,899** | **41,109** | **577** | **274,150** |
| **2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **66,778** | **17,726** | **123,851** | **41,109** | **1,072** | **250,536** |

நாணயச் சபை மற்றும் தொழில் திணைக்களம் - 2020

| | கணனிச் சாதனம் | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | அலுவலகச் சாதனம் | உந்து ஊர்திகள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| கிரயம் | | | | | | |
| 2020 சனவரி 01இல் உள்ளவாறு | 565,032 | 109,999 | 418,267 | 97,202 | 6,423 | 1,196,924 |
| இவ்வாண்டுப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 6,022 | 938 | 6,246 | - | - | 13,206 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - |
| **2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **571,054** | **110,937** | **424,513** | **97,202** | **6,423** | **1,210,130** |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | |
| 2020 சனவரி 01இல் உள்ளவாறு | 484,023 | 86,490 | 294,686 | 56,093 | 4,746 | 926,038 |
| இவ்வாண்டிற்கான விதிப்பு | 20,254 | 6,721 | 5,976 | - | 605 | 33,555 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - |
| **2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **504,276** | **93,211** | **300,661** | **56,093** | **5,351** | **959,593** |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | | | | | |
| **2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **66,778** | **17,726** | **123,851** | **41,109** | **1,072** | **250,536** |
| **2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **81,009** | **23,509** | **123,581** | **41,109** | **1,677** | **270,886** |

ஊழியர் சேமலாப நிதியம்

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**ஆதனம், பொறி மற்றும் சாதனம் (தொடர்ச்சி)**

**13.2**

| 2021 | கணனிச் சாதனம் | | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | | அலுவலகச் சாதனம் | | உந்து ஊர்திகள் | | ஏனையவை | | மொத்தம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | |
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| கிரயம் | | | | | | | | | | | | | |
| 2021 சனவரி 01இல் உள்ளவாறு | 130,662 | 440,392 | 47,966 | 62,971 | 29,237 | 395,276 | - | 97,202 | 6,071 | 352 | 213,937 | 996,193 | 1,210,130 |
| இவ்வாண்டுப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 9,541 | 29,614 | - | 1,253 | 546 | 7,682 | - | - | - | - | 10,087 | 38,549 | 48,636 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **140,203** | **470,006** | **47,966** | **64,224** | **29,783** | **402,958** | **-** | **97,202** | **6,071** | **352** | **224,024** | **1,034,742** | **1,258,766** |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | | | | | | | | |
| 2021 சனவரி 01இல் உள்ளவாறு | 117,686 | 386,590 | 38,464 | 54,747 | 20,298 | 280,363 | - | 56,094 | 4,999 | 352 | 181,448 | 778,146 | 959,593 |
| இவ்வாண்டிற்கான விதிப்பு | 4,582 | 8,953 | 3,654 | 3,158 | 3,047 | 1,134 | - | - | 495 | - | 11,778 | 13,245 | 25,023 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **122,268** | **395,543** | **42,118** | **57,905** | **23,345** | **281,497** | **-** | **56,094** | **5,494** | **352** | **193,226** | **791,391** | **984,616** |
| **2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **17,935** | **74,463** | **5,848** | **6,319** | **6,438** | **121,461** | **-** | **41,108** | **578** | **-** | **30,798** | **243,351** | **274,150** |
| **2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **12,976** | **53,802** | **9,502** | **8,224** | **8,939** | **114,913** | **-** | **41,108** | **1,072** | **-** | **32,489** | **218,047** | **250,537** |

ஊழியர் சேமலாப நிதியம்

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**ஆதனம், பொறி மற்றும் சாதனம் (தொடர்ச்சி)**

**13.2**

| 2020 | கணனிச் சாதனங்கள் | | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | | அலுவலகச் சாதனங்கள் | | உந்து ஊர்திகள் | | ஏனையவை | | மொத்தம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | நாணயச் சபை ரூ.'000 | தொழில் திணைக்களம் ரூ.'000 | ரூ.'000 |
| கிரயம் | | | | | | | | | | | | | |
| 2020 சனவரி 01இல் உள்ளவாறு | 124,640 | 440,392 | 47,932 | 62,067 | 23,592 | 394,676 | - | 97,202 | 6,071 | 352 | 202,235 | 994,688 | 1,196,923 |
| இவ்வாண்டுப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | 6,022 | - | 34 | 904 | 5,646 | 600 | - | - | - | - | 11,702 | 1,504 | 13,206 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு | **130,662** | **440,392** | **47,966** | **62,971** | **29,237** | **395,276** | **-** | **97,202** | **6,071** | **352** | **213,937** | **996,192** | **1,210,129** |
| ஒன்றுசேர்ந்த தேய்மானம் | | | | | | | | | | | | | |
| 2020 சனவரி 01இல் உள்ளவாறு | 113,729 | 370,294 | 34,804 | 51,686 | 17,941 | 276,745 | - | 56,094 | 4,394 | 352 | 170,866 | 755,171 | 926,037 |
| இவ்வாண்டிற்கான விதிப்பு | 3,958 | 16,296 | 3,660 | 3,061 | 2,358 | 3,618 | - | - | 605 | - | 10,581 | 22,974 | 33,555 |
| இவ்வாண்டுப்பகுதியில் அகற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு | **117,686** | **386,590** | **38,464** | **54,747** | **20,298** | **280,363** | **-** | **56,094** | **4,999** | **352** | **181,447** | **778,145** | **959,592** |
| 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி | **12,976** | **53,802** | **9,502** | **8,224** | **8,939** | **114,912** | **-** | **41,109** | **1,073** | **-** | **32,490** | **218,047** | **250,536** |
| 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி | **10,911** | **70,098** | **13,128** | **10,381** | **5,651** | **117,931** | **-** | **41,109** | **1,678** | **-** | **31,368** | **239,517** | **270,886** |

ஊழியர் சேமலாப நிதியம்
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 14. அருவச் சொத்துக்கள்

| கணனி மென்பொருள் | 2021 | | | 2020 |
|---|---|---|---|---|
| | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | மொத்தம் | மொத்தம் |
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| கிரயம் | | | | |
| சனவரி 01 இல் உள்ளவாறு | 35,590 | 4,626 | 40,216 | 40,216 |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான கொள்வனவுகள் | - | 1,040 | 1,040 | - |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **35,590** | **5,666** | **41,256** | **40,216** |
| **பதிவழிப்புக்கள்** | | | | |
| சனவரி 01 இல் உள்ளவாறு | 34,046 | 3,181 | 37,227 | 36,598 |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான பதிவழிப்புக்கள் | 574 | 1,446 | 2,020 | 629 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **34,620** | **4,627** | **39,247** | **37,227** |
| **தேறிய ஏட்டுப் பெறுமதி** | | | | |
| சனவரி 01 இல் உள்ளவாறு | 1,544 | 1,445 | 2,989 | 3,618 |
| **திசெம்பர் 31இல் உள்ளவாறு** | **970** | **1,039** | **2,009** | **2,989** |

## 15. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியின் பங்குரிமை மூலதனச் சாதனங்கள்

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கிரயம் | சீர்மதிப்புப் பெறுமதி | கிரயம் | சீர்மதிப்புப் பெறுமதி |
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| பங்குரிமை மூலதனத்தில் முதலீடு | | | | |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் (குறிப்பு 15.1) | 368,903 | 761,278 | 368,903 | 712,484 |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் (குறிப்பு 15.2) | 9,640,989 | 9,140,989 | 9,640,989 | 9,140,989 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த பங்குரிமை மூலதனச் சாதனங்கள்** | **10,009,892** | **9,902,267** | **10,009,892** | **9,853,473** |

சீர்மதிப்புப் பெறுமதியின் நம்பகரமான அளவுகள் கிடைக்காமையின் காரணமாக சிறிலங்கன் எயார்லையின் தவிர, பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்கள் தொடர்ந்தும் கிரயத்தில் கணக்கிடப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகளுக்காக குறிப்பு 30இல் தனியான வெளிப்படுத்துகையொன்று தரப்பட்டிருக்கிறது.

## 15.1 பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம்

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கிரயம் | ஏட்டுப் பெறுமதி | கிரயம் | ஏட்டுப் பெறுமதி |
| கம்பனியின் பெயர் | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| லா.ஃப் காஸ் பவர் லிமிடெட் - வாக்குரிமையுள்ளது | 281,261 | 607,927 | 281,261 | 578,978 |
| லா.ஃப் காஸ் பவர் லிமிடெட் - வாக்குரிமையற்றது | 87,642 | 153,351 | 87,642 | 133,506 |
| | **368,903** | **761,278** | **368,903** | **712,484** |

ஊழியர் சேமலாப நிதியம்

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 15.2 பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம்

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கிரயம் | ஏட்டுப் பெறுமதி | கிரயம் | ஏட்டுப் பெறுமதி |
| கம்பனியின் பெயர் | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 5,000,000 | 5,000,000 | 5,000,000 | 5,000,000 |
| கார்கில்ஸ் பாங்க் லிமிடெட் | 495,000 | 495,000 | 495,000 | 495,000 |
| பிச்ட் றேட்டிங் லங்கா லிமிடெட் | 625 | 625 | 625 | 625 |
| சிறிலங்கன் எயர்லைன்ஸ் | 500,000 | 0.1 | 500,000 | 0.1 |
| லா.்.ப் காஸ் எக்கோ சிறி லிமிடெட் - வாக்குரிமையுள்ள | 62,282 | 62,282 | 62,282 | 62,282 |
| லா.்.ப் காஸ் எக்கோ சிறி லிமிடெட் - வாக்குரிமையற்ற | 19,407 | 19,407 | 19,407 | 19,407 |
| லா.்.ப் காஸ் லெஷர் லிமிடெட் - வாக்குரிமையுள்ள | 448,820 | 448,820 | 448,820 | 448,820 |
| லா.்.ப் காஸ் லெஷர் லிமிடெட் - வாக்குரிமையற்ற | 139,855 | 139,855 | 139,855 | 139,855 |
| வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிறைவேட்) லிமிடெட் | 2,975,000 | 2,975,000 | 2,975,000 | 2,975,000 |
| | **9,640,989** | **9,140,989** | **9,640,989** | **9,140,989** |

லா.்.ப் காஸ் பிஎல்சியின் கம்பனி மீளமைக்கப்படுவதன் காரணமாக, நிதியமானது லா.்.ப் காஸ் எக்கோ சிறி லிமிடெட், லா.்.ப் காஸ் லெஷர் லிமிடெட், லா.்.ப் காஸ் பவர் லிமிடெட் என்பனவற்றின் பங்குடமையாளராக மாறியது. லா.்.ப் காஸ் பவர் லிமிடெட்டின் பங்குகள் 2019 ஒத்தோபர் 30ஆம் நாளன்று கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன.

## 16. இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குரிமை மூலதனச் சாதனங்கள்

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| | கிரயம் ரூ.'000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ.'000 | கிரயம் ரூ.'000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ.'000 |
| பங்குரிமை மூலதனத்தில் செய்யப்பட்ட முதலீடுகள் | | | | |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் (குறிப்பு 16.1) | 83,698,390 | 111,201,978 | 83,094,569 | 70,094,309 |
| **இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் மொத்த பங்குரிமை மூலதனச் சாதனங்கள்** | **83,698,390** | **111,201,978** | **83,094,569** | **70,094,309** |

ஊழியர் சேமலாப நிதியம்

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 16.1 பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம்

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
| கம்பனியின் பெயர் | கிரயம் ரூ.'000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ.'000 | கிரயம் ரூ.'000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ.'000 |
| அக்ஸஸ் என்ஜினியறிங் பிஎல்சி | 448,736 | 653,257 | 448,736 | 503,766 |
| ஏசிஎல் கேபிள்ஸ் பிஎல்சி | 155,514 | 1,184,440 | 155,514 | 452,509 |
| எய்ட்கன்ஸ் ஸ்பென்ஸ் பிஎல்சி | 1,997,136 | 1,696,697 | 1,997,136 | 1,190,159 |
| எய்ட்கன்ஸ் ஸ்பென்ஸ் ஹோட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | 1,710,207 | 1,332,518 | 1,710,207 | 1,017,502 |
| ஏசியன் ஹோட்டல்ஸ் அன்ட் புறப்பட்டீஸ் பிஎல்சி | 3,273,782 | 1,995,516 | 3,273,782 | 1,941,216 |
| ஆசிரி சேர்ஜிக்கல் ஹொஸ்பிட்டல் பிஎல்சி | 1,681 | 4,113 | 1,681 | 4,113 |
| பயிரா பாம்ஸ் பிஎல்சி - வாக்குரிமையுள்ள பங்குகள் | - | - | 5,274 | 4,985 |
| பொஹுவன்தலாவா ரீ எஸ்ரேற்ஸ் பிஎல்சி | - | - | 1,463 | 1,193 |
| பிறவுண்ஸ் அன்ட் கம்பனி பிஎல்சி | 1,799,560 | 2,554,954 | 1,799,560 | 727,419 |
| புக்கித் டாறா பிஎல்சி | 2,310,609 | 1,150,294 | 2,310,609 | 998,255 |
| சி டபிள்யு மக்கி பிஎல்சி | - | - | 12,644 | 6,708 |
| கார்கிள்ஸ் (சிலோன்) பிஎல்சி | 1,372,001 | 1,809,678 | 1,372,001 | 1,723,503 |
| கார்சன்ஸ் கம்பபச் பிஎல்சி | 2,607,240 | 1,719,994 | 2,607,240 | 1,562,001 |
| சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | 2,741,510 | 2,270,984 | 2,712,636 | 1,997,095 |
| சிலோன் கிரெய்ன் இலிவேற்றர்ஸ் பிஎல்சி | 1,005,585 | 651,429 | 1,005,585 | 593,911 |
| சிலோன் கார்டியன் இன்வெஸ்ட்மென்ற் பிஎல்சி | 555,487 | 308,830 | 555,487 | 378,019 |
| சிலோன் கொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி - வாக்குரிமையுள்ள | - | - | 81,715 | 85,251 |
| சிலோன் கொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி - வாக்குரிமையற்ற | 25,410 | 142,565 | 25,410 | 103,893 |
| சிலோன் ஹோட்டல்ஸ் கோப்பரேசன் பிஎல்சி | 711,243 | 395,956 | 711,243 | 290,511 |
| சிலோன் தியேட்டர்ஸ் பிஎல்சி | 1,086,557 | 1,279,883 | 1,086,557 | 1,267,584 |
| செவ்ரோன் லுப்ரிகன்ற்ஸ் லங்கா பிஎல்சி | 49,564 | 114,799 | 49,564 | 109,719 |
| சிஐசி ஹோல்டிங்ஸ் பிஎல்சி - வாக்குரிமையற்ற | 221,726 | 545,682 | 221,726 | 421,209 |
| சிஐசி ஹோல்டிங்ஸ் பிஎல்சி - வாக்குரிமையுள்ள | 694,300 | 1,717,163 | 694,300 | 1,203,995 |
| கொழும்பு டொக்கியாட் பிஎல்சி | 2,791,809 | 932,474 | 2,791,809 | 1,001,764 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 9,760,191 | 7,682,896 | 9,570,743 | 7,663,152 |
| டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி | 3,481,694 | 1,540,651 | 3,408,152 | 1,600,756 |
| டயலொக் அக்ஸியாட்டா பிஎல்சி | 2,255,649 | 2,587,923 | 2,255,649 | 2,944,059 |
| டீசல் அன்ட் மோட்டர் என்ஜினியறிங் பிஎல்சி | 1,625,690 | 1,134,568 | 1,625,690 | 1,091,284 |
| டிப்ட் புறொடக்ஸ் பிஎல்சி | 312,650 | 1,396,841 | 668,020 | 2,044,441 |
| டில்மா சிலோன் ரி சேர்விசஸ் பிஎல்சி | 1,082,639 | 1,179,382 | 1,082,639 | 1,086,136 |
| ஹலதாரி ஹோட்டல்ஸ் (லங்கா) பிஎல்சி | 810,322 | 526,411 | 810,322 | 225,266 |
| ஹற்றன் நஷனல் பாங்க் பிஎல்சி | 6,932,619 | 5,537,879 | 6,792,640 | 5,059,236 |
| ஹேகாப் பிஎல்சி | 222,565 | 1,016,123 | 238,460 | 806,027 |
| ஹேலீஸ் பப்பிறிக்ஸ் பிஎல்சி | 213,592 | 456,556 | 213,592 | 154,032 |
| ஹேலீஸ் லெஷர் பிஎல்சி | 348,646 | 233,736 | 348,646 | 218,154 |
| ஹேலீஸ் பிஎல்சி | 9,303 | 41,652 | 403,250 | 575,659 |
| ஜெட்வின் சிம்போனி பிஎல்சி | 390,000 | 446,727 | 390,000 | 340,364 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி | 1,597,949 | 1,523,898 | 1,597,949 | 1,519,835 |
| ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ் பிஎல்சி | 1,166,289 | 1,153,574 | 1,166,289 | 863,219 |
| கேகோல் பிளாண்டேஷன் பிஎல்சி | - | - | 24,734 | 10,885 |
| களனி ரயர் பிஎல்சி | 98,635 | 153,205 | 98,635 | 134,404 |
| லங்கா ஐஓசி பிஎல்சி | 76,437 | 171,768 | 76,437 | 52,563 |

## ஊழியர் சேமலாப நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 16.1 பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் (தொடர்ச்சி)

| *திசெம்பர் 31இல் உள்ளவாறு* | 2021 | | 2020 | |
|---|---|---|---|---|
**I. செலுத்தத்தவறிய நிகழ்தகவு சுழற்சியூடான மாற்றல்**

புளூம்போர்க் இழப்பு புள்ளிவிபரம் செலுத்தத்தவறிய நிகழ்தகவு சுழற்சி ஊடான மாற்றல்களைப் பிரதிபலிப்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் படிப்படியான இறங்குமுகத்தினை அடிப்படையாகக் கொண்ட மாற்றல் அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் காரணிச் சீராக்கத்தினை பிரயோகித்து செலுத்தத்தவறிய நிகழ்தகவு சுழற்சி ஊடான மாற்றத்தினை நேரப்புள்ளிக்கு மாற்றியது.

**II. ஆயுட்கால செலுத்தத்தவறிய நிகழ்தகவுக் கட்டமைப்பு**

புளூம்போர்க்கின் செலுத்தத்தவறிய நிகழ்தகவு முதலீட்டிற்கான 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு கணிசமான தேய்வினைக் கொண்டிருந்தமையினைப் பிரதிபலித்தமையினால் ஊழியர் சேமலாப நிதியம் 12 மாத செலுத்தத்தவறிய நிகழ்தகவினைப் பயன்படுத்தி ஆயுட்கால செலுத்தத்தவறிய நிகழ்தகவினை அடிப்படையாகக் கொண்ட ஆயுட்கால நிகழ்தகவினைப் பரிசீலனையில் கொள்கிறது.

**III. கொடுகடன் இடர்நேர்வின் கணிசமான தேய்வினை தீர்மானித்தல்**

ஊழியர் சேமலாப நிதியமானது, பன்னாட்டுத் தரமிடல் முகவர்களினால் வெளியிப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முதலீட்டு/ முதலீடு அல்லாத தரவுத் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்ட கொடுகடன் இடர்நேர்வுகள் கணிசமாகத் தேய்வடைந்தமையைத் தீர்மானித்திருக்கிறது. பொதுவாக, "BBB- இற்குக்கீழ் தரமிடப்பட்டவை" முதலீட்டுத் தரத்தினைக் கொண்டிராத முதலீடுகளாகக் கருதப்பட்டன. எனவே ஊழியர் சேமலாப நிதியம் அத்தகைய உறப்பட்ட முதலீடுகள் கொடுகடன் இடர்நேர்வின் கணிசமான தேய்வினைக் கொண்டனவாகக் கருதுகிறது. அத்தகைய முதலீடுகளுக்காக ஊழியர் சேமலாப நிதியம் ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கணக்கினைப் பரிசீலனையில் கொள்கிறது.

## ஊழியர் சேமலாப நிதியம்

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 29. பெறுமதியிழப்புக்கள் (தொடர்ச்சி)

உலகளாவிய தரமிடல் முகவரினால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரமிடல்களின் பகுப்பாய்வு கீழே தரப்படுகிறது

| ஐசிஆர்ஏ தரமிடல் | பிட்ஜ் ரேட்டிங் | மூடிஸ் தரமிடல் | புளூம்பேர்க் 1 ஆண்டு கொடுகடன் அளவு | | |
|---|---|---|---|---|---|
| | | | அளவு | செலுத்தத்தவறிய நிகழ்தகவின் மேல் எல்லை | |
| AAA | AAA | Aaa | IG-1 | 0.00% | 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு (முதலீட்டுத் தரம்) |
| AA+ | AA+ | Aa1 | IG-2 | 0.00% | |
| AA | AA | Aa2 | IG-3 | 0.01% | |
| AA- | AA- | Aa3 | IG-4 | 0.02% | |
| A+ | A+ | A1 | IG-5 | 0.03% | |
| A | A | A2 | IG-6 | 0.05% | |
| A- | A- | A3 | IG-7 | 0.10% | |
| BBB+ | BBB+ | Baa1 | IG-8 | 0.17% | |
| BBB | BBB | Baa2 | IG-9 | 0.30% | |
| BBB- | BBB- | Baa3 | IG-10 | 0.52% | |
| BB+ | BB+ | Ba1 | HY-1 | 0.88% | ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு (முதலீட்டுத் தரமற்றவை) |
| BB | BB | Ba2 | HY-2 | 1.50% | |
| BB- | BB- | Ba3 | HY-3 | 2.40% | |
| B+ | B+ | B1 | HY-4 | 4.00% | |
| B | B | B2 | HY-5 | 6.00% | |
| B- | B- | B3 | HY-6 | 10.00% | |
| | CCC | Caa1 | DS-1 | 15.00% | |
| | CCC | Caa2 | DS-2 | 22.00% | |
| | CCC | Caa3 | DS-3 | 30.00% | |
| | CCC | Ca | DS-4 | 50.00% | |
| | DDD | C | DS-5 | 100.00% | |
| | D | / | DDD | செலுத்தத் தவறியவை | |

**IV.** இழப்பினை வழங்கும் செலுத்தத்தவறியவை

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மதிப்பீடுகளுக்காக, ஊழியர் சேமலாப நிதியம், 2018 திசெம்பர் 31ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இனைப் பின்பற்றுவது மீதான ஆலோசனைப் பத்திரத்திற்கிணங்க பின்வரும் இழப்பினை வழங்கும் செலுத்தத்தவறியவை/ இழப்பு வீதங்களை பரிசீலனையில் கொள்கிறது.

அ. உள்நாட்டு நாணயத்திலான திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகள் - 0 சதவீதம்

ஆ. மற்றைய அனைத்து உள்நாட்டு நாணய நிதியியல் சாதனங்கள் - 45 சதவீதம்

**V.** எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, ஊழியர் சேமலாப நிதியம் செலுத்தத்தவறுகின்ற சந்தர்ப்பங்கள் ஆண்டின் தொடக்கத்தில் அல்லது ஆண்டின் இறுதிப்பகுதியில் ஏற்படக்கூடும் என்ற உண்மையினை பரிசீலனையில் கொண்டு நடுவாண்டிலுள்ளவாறான (அதாவது 6 மாதங்கள்) செலுத்தத்தவறிய புள்ளியைப் பிரயோகிக்கிறது.

**VI.** பொருளாதார காரணிச் சீராக்கம் 2012 இலிருந்து 2026 வரையான காலப்பகுதிக்கான கடந்த மற்றும் எதிர்வுகூறப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பயன்படுத்தி கணிக்கப்பட்டதுடன் சில பன்னாட்டு நாணய நிதிய களத்தில் கிடைக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீத புள்ளிவிபரங்களிலிருந்து பெறப்பட்டன.

**VII.** நிதியியல் முதலீடுகள்

(அ) இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் முதலீடுகள் இலங்கை மத்திய வங்கியின் அதே நியாயாதிக்கத்திற்குக் கீழான முதலீடுகளாக இருப்பதனால் இலங்கையின் அரசாங்கத்தின் நாட்டிற்கான தரமிடல் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே, கொடுகடன் இடர்நேர்வின் கணிசமான தேய்வு நிகழவில்லை. ஊழியர் சேமலாப நிதியம் மிகச் சிறந்த தரமிடலான AAA தரமிடலை பயன்படுத்துவதன் மூலம் 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை பரிசீலனையில் கொள்கிறது.

# ஊழியர் சேமலாப நிதியம்

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### பெறுமதியிழப்புக்கள் (தொடர்ச்சி)

**29.1** கீழேயுள்ள அட்டவணை வருமானக் கூற்றுக்கள் பதிவுசெய்யப்பட்ட ஆண்டிற்கான நிதியியல் சாதனங்களின் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கட்டணங்களைக் காட்டுகிறது:

| 2021.12.31 | | 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு | | ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ரூ.'000 | குறிப்பு | தனிப் பட்டவர்கள் | கூட்டு | தனிப் பட்டவர்கள் | கூட்டு | |
| வங்கியிலுள்ள காசு | **8** | 66 | - | - | - | 66 |
| | | | | | | - |
| பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள் | **8** | 62 | - | 888 | - | 950 |
| **மொத்த பெறுமதி இழப்புக்கள்** | | **128** | **-** | **888** | **-** | **1,016** |

| 2021.12.31<br>ரூ.'000 | குறித்துரைக் கப்பட்டது | கூட்டு (தனிப்பட்ட ரீதியில் கணிசமான அளவிற்கு வெளிப்படுத்த வில்லை) | கூட்டு (உறப்பட்டவை ஆனால் இன்னமும் அடையாளம் காணப் படாதவை) | மொத்தம் |
|---|---|---|---|---|
| வங்கி மீதி மீதான கொடுகடன் இழப்பு செலவு | 66 | - | - | 66 |
| | 66 | - | | 66 |
| பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள் மீதான கொடுகடன் இழப்புச் செலவு | | | | |
| கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் | 68 | - | - | 68 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | - | - | - | - |
| நிலையான வைப்புக்கள் | 939 | - | - | 939 |
| ஏனைய நிதியியல் முதலீடு | (58) | - | - | (58) |
| | 950 | - | - | 950 |
| ஐந்தொகை விடயங்கள் மீதான மொத்தம் | 1,016 | - | - | 1,016 |
| ஐந்தொகைக்கு வெளியேயான விடயங்கள் | - | - | - | - |
| மொத்தம் | **1,016** | **-** | **-** | **1,016** |

# ஊழியர் சேமலாப நிதியம்

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 29. பெறுமதியிழத்தல் இழப்புக்கள் (தொடர்ச்சி)

### பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்

கீழேயுள்ள அட்டவணை கொடுகடன் தரத்தினையும் வெளிவாரி கொடுகடன் தரமிடலின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படியான கொடுகடன் இடர்நேர்விற்கான கொடுகடன் தரத்தினையும் உயர்ந்த வெளிபடுத்துகையையும் காட்டுகிறது. காட்டப்பட்டுள்ள தொகைகள் பெறுமதி இழப்பு படிகளின் மொத்தமாகும். நிதியத்தின் உள்ளகத் தரமிடல் முறைமையின் விபரங்கள் குறிப்பு 29இல் விளக்கப்பட்டுள்ளதுடன் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் மீதான கொள்கைகள் குறிப்பு 29இல் காட்டப்பட்டுள்ள தனிப்பட்ட அல்லது கூட்டு இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.

| | 2021.12.31 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் ஒன்றுசேர்ந்தவை | | ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் ஒன்றுசேர்ந்தவை | | மொத்தம் | |
| | மீதி | எ.கொ.இழப்பு | மீதி | எ.கொ.இழப்பு | மீதி | எ.கொ.இழப்பு |
| **ரூ.'000** | | | | | | |
| வெளிவாரி தரமிடலின் தரம் | | | | | | |
| AAA | 2,989,685,233 | - | - | - | 2,989,685,233 | - |
| AA+ | - | - | - | - | - | - |
| AA | - | - | - | - | - | - |
| AA- | 45,186,937 | 1,345 | 12,777,433 | 1,029 | 57,964,370 | 2,374 |
| A+ | 5,598,883 | 299 | - | - | 5,598,883 | 299 |
| A | 2,095,098 | 210 | - | - | 2,095,098 | 210 |
| A- | - | - | - | - | - | - |
| BBB+ | - | - | - | - | - | - |
| BBB | - | - | - | - | - | - |
| BBB- | - | - | - | - | - | - |
| BB+ | - | - | - | - | - | - |
| மொத்தம் | **3,042,566,151** | **1,854** | **12,777,433** | **1,029** | **3,055,343,584** | **2,883** |

| | 2021.01.01 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் ஒன்றுசேர்ந்தவை | | ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் ஒன்றுசேர்ந்தவை | | மொத்தம் | |
| | மீதி | எ.கொ.இழப்பு | மீதி | எ.கொ.இழப்பு | மீதி | எ.கொ.இழப்பு |
| **ரூ.'000** | | | | | | |
| வெளிவாரி தரமிடலின் தரம் | | | | | | |
| AAA | 2,692,777,910 | - | - | - | 2,692,777,910 | - |
| AA+ | 39,581,269 | 359 | - | - | 39,581,269 | 359 |
| AA | - | - | - | - | - | - |
| AA- | 5,537,924 | 191 | 1,025,500 | 142 | 6,563,424 | 333 |
| A+ | 8,405,358 | 552 | - | - | 8,405,358 | 552 |
| A | 4,579,846 | 565 | - | - | 4,579,846 | 565 |
| A- | 254,077 | 58 | - | - | 254,077 | 58 |
| BBB+ | - | - | - | - | - | - |
| BBB | - | - | - | - | - | - |
| BBB- | - | - | - | - | - | - |
| BB+ | - | - | | | - | - |
| மொத்தம் | **2,751,136,384** | **1,726** | **1,025,500** | **142** | **2,752,161,884** | **1,868** |

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### பெறுமதியிழத்தல் இழப்புக்கள் (தொடர்ச்சி)

### 29.2 கொடுகடன் தரத்தின் பகுப்பாய்வு

வெளிவாரி கொடுகடன் தரமிடல் முறையின் மீது பகுப்பாய்வு செய்யப்பட்ட 2020 திசெம்பர் 31ஆம் நாளன்று உள்ளவாறு இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் கீழான மொத்த மீதிகளைக் கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது. இது குறிப்பு 29இல் விபரிக்கப்படுகிறது.

| 2021.12.31 | காலம் கடந்தவையோ அல்லது பெறுமதி இழக்கப்பட்டவையோ அல்லாதவை | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ரூ.'000 | AAA | AA+ | AA | AA- | A+ | A | A- | BBB+ | BBB | BBB- | BB+ | மொத்தம் |
| **முதலீட்டு மீதிகள்** | | | | | | | | | | | | |
| *பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்* | | | | | | | | | | | | |
| கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் | - | - | - | 16,315,297 | 5,562,884 | 2,089,341 | - | - | - | - | - | 23,967,522 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| நிலையான வைப்புக்கள் | 18,594,077 | - | - | 38,588,790 | - | - | - | - | - | - | - | 57,182,866 |
| ஏனைய நிதியியல் முதலீடு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| வங்கி மீதிகள் | - | - | - | 3,060,283 | 35,999 | 5,757 | - | - | - | - | - | 3,102,040 |
| | **18,594,077** | **-** | **-** | **57,964,370** | **5,598,883** | **2,095,098** | **-** | **-** | **-** | **-** | **-** | **84,252,428** |
| **எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடு** | | | | | | | | | | | | |
| *பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்* | | | | | | | | | | | | |
| கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் | - | - | - | 1,128 | 297 | 209 | - | - | - | - | - | 1,635 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| நிலையான வைப்புக்கள் | - | - | - | 1,154 | - | - | - | - | - | - | - | 1,154 |
| பழைய படுகடன்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| வங்கி மீதிகள் | - | - | - | 92 | 2 | 1 | - | - | - | - | - | 94 |
| மொத்தம் | **-** | **-** | **-** | **2,374** | **299** | **210** | **-** | **-** | **-** | **-** | **-** | **2,883** |



ஊழியர் சேமலாப நிதியம்

ஊழியர் சேமலாப நிதியம்

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

பெறுமதியிழத்தல் இழப்புக்கள் (தொடர்ச்சி)

## 29.2 கொடுகடன் தரத்தின் பகுப்பாய்வு

| 2021.01.01 | காலம் கடந்தவையோ அல்லது பெறுமதி இழக்கப்பட்டவையோ அல்லாதவை | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ரூ.'000 | AAA | AA+ | AA | AA- | A+ | A | A- | BBB+ | BBB | BBB- | BB+ | மொத்தம் |
| முதலீட்டு மீதிகள் | | | | | | | | | | | | |
| *பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்* | | | | | | | | | | | | |
| கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் | 1,501,603 | 13,630,353 | - | 6,563,424 | 8,338,035 | 4,579,550 | - | - | - | - | - | 34,612,965 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| நிலையான வைப்புக்கள் | 32,364,501 | 23,405,065 | - | - | - | - | - | - | - | - | - | 55,769,566 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | - | - | - | - | - | 254,077 | - | - | - | - | 254,077 |
| வங்கி மீதிகள் | - | 2,545,852 | - | - | 67,323 | 296 | - | - | - | - | - | 2,613,471 |
| | **33,866,104** | **39,581,269** | **-** | **6,563,424** | **8,405,358** | **4,579,846** | **254,077** | **-** | **-** | **-** | **-** | **93,250,078** |
| எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடு | | | | | | | | | | | | |
| *பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்* | | | | | | | | | | | | |
| கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் | - | 121 | - | 333 | 548 | 565 | - | - | - | - | - | 1,566 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| நிலையான வைப்புக்கள் | - | 215 | - | - | - | - | - | - | - | - | - | 215 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | - | - | - | - | - | 58 | - | - | - | - | 58 |
| வங்கி மீதிகள் | - | 23 | - | - | 5 | 0 | - | - | - | - | - | 28 |
| மொத்தம் | **-** | **359** | **-** | **333** | **552** | **565** | **58** | **-** | **-** | **-** | **-** | **1,868** |

## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 30. பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனச் சாதனங்களின் மதிப்பீடு

பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனத்தின் மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகள் கீழே வருமாறு:

| முதலீடு | அடிப்படை | பங்குகளின் எண்ணிக்கை | கொள்வனவுப் பெறுமதி | 2021 பங்கு ஒன்றிற்கான சீர்மதிப்புப் பெறுமதி | 2021 சீர்மதிப்புப் பெறுமதி | 2020 பங்கு ஒன்றிற்கான சீர்மதிப்புப் பெறுமதி | 2020 சீர்மதிப்புப் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ.'000 | ரூ. | ரூ.'000 | ரூ. | ரூ.'000 |
| கன்வில் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிடெட் | தேறிய சொத்தினை அடிப்படையாகக் கொண்டது | 500,000,000 | 5,000,000 | 9.82 | 4,908,155 | 9.91 | 4,953,362 |
| கார்கிள்ஸ் பாங்க் லிமிடெட் | தேறிய சொத்தினை அடிப்படையாகக் கொண்டது | 44,000,000 | 495,000 | 11.02 | 484,983 | 11.81 | 519,767 |
| வெஸ்ட் கோட் பவர் (பிறைவேட்) லிமிடெட் | தேறிய சொத்தினை அடிப்படையாகக் கொண்டது | 29,750,000 | 2,975,000 | 670.79 | 19,955,890 | 552.23 | 16,428,723 |
| பிட்ஜ் ரேட்டிங் லங்கா லிமிடெட் | பங்குலாப மதிப்பீட்டு மாதிரி | 62,500 | 625 | 82.69 | 5,168 | 64.14 | 4,009 |
| லா.்.ப் காஸ் எக்கோ சிறி லிமிடெட் - வாக்குரிமையுள்ள | தேறிய சொத்தினை அடிப்படையாகக் கொண்டது | 57,897,800 | 62,282 | 3.44 | 198,940 | 2.97 | 172,140 |
| லா.்.ப் காஸ் எக்கோ சிறி லிமிடெட் - வாக்குரிமையற்ற | தேறிய சொத்தினை அடிப்படையாகக் கொண்டது | 18,041,300 | 19,407 | 3.44 | 61,991 | 2.97 | 53,640 |
| லா.்.ப் காஸ் லெசர் லிமிடெட் - வாக்குரிமையுள்ள | தேறிய சொத்தினை அடிப்படையாகக் கொண்டது | 57,897,800 | 448,820 | 6.27 | 362,844 | 7.69 | 445,208 |
| லா.்.ப் காஸ் லெசர் லிமிடெட் - வாக்குரிமையற்ற | தேறிய சொத்தினை அடிப்படையாகக் கொண்டது | 18,041,300 | 139,855 | 6.27 | 113,064 | 7.69 | 138,729 |
| முழு மொத்தம் | | | **9,140,989** | | **26,091,034** | | **22,715,578** |

கிடைக்கத்தக்க தகவல்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால், பிட்ஜ் ரேட்டிங் லங்கா லிமிடெட்டிற்கானவை தவிர்ந்த, பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனச் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினை மதிப்பிடுவதற்கு தேறிய சொத்து மாதிரி பயன்படுத்தப்பட்டது. பிட்ஜ் ரேட்டிங் தொடர்ச்சியான அடிப்படையில் பங்கிலாபத்தினைச் செலுத்தியிருப்பதனால், பங்குலாப வளர்ச்சி மாதிரி பிட்ஜ் ரேட்டிங்கின் சீர்மதிப்புப் பெறுமதியை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. மதிப்பீட்டு நோக்கத்திற்கான தகவல்கள் ஒவ்வொரு கம்பனியினதும் கணக்காய்வு செய்யப்பட்ட பிந்திய நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனச் சாதனங்கள் மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகளில் மதிப்பிடப்பட்டிருப்பின் மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மற்றும் முதலீட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு ஏற்பட்ட தாக்கம் பின்வருமாறு இருக்கும்.

**நிதியியல் கூற்றுத் தாக்கம் - ஒட்டுமொத்தம்**

| | 2020 | 2021 |
|---|---|---|
| கிரயம் | 9,140,989 | 9,140,989 |
| மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி | 22,715,578 | 26,091,034 |
| தேறிய சொத்துக்களுக்கேற்பட்ட தாக்கம் | 13,574,590 | 16,950,045 |
| சீர்மதிப்புப் பெறுமதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மீதான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதிக்கு ஏற்பட்ட மொத்தத் தாக்கம் | (674,430) | 3,375,456 |

ஊழியர் சேமலாப நிதியம்

நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 31. சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாட்டின் வகைப்படுத்தல்

2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு

(ரூ.மில்.)

| முதலீட்டின் வகை | 2022 | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 | 2029 | 2030 | 2031 | 2032 | 2033 | 2034 | 2035 | 2039 | 2041 | 2043 | 2044 | 2045 | வரையறுக்கப்படவில்லை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்ட படுகடன் பிணையங்கள்** | | | | | | | | | | | | | | | | | | | | | |
| திறைசேரி முறி | 149,022 | 211,028 | 153,350 | 238,521 | 352,858 | 240,051 | 465,952 | 168,638 | 94,943 | 158,174 | 129,931 | 215,637 | 109,090 | 106,915 | 14,081 | 29,292 | 22,966 | 92,833 | 5,486 | - | 2,958,769 |
| கூட்டாண்மைப் படுகடன் | 350 | 9,545 | 1,117 | 7,835 | 4,095 | - | 1,025 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 23,968 |
| திறைசேரி உண்டியல்கள் | 20 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 20 |
| நிலையான வைப்புக்கள் | 57,183 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 57,183 |
| மீள்கொள்வனவு | 12,302 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 12,302 |
| ஏனைய முதலீடு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **இலாபம் அல்லது இழப்பினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட பங்குரிமை மூலதனச் சாதனங்கள்** | | | | | | | | | | | | | | | | | | | | | |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 111,202 | 111,202 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட பங்குரிமை மூலதனச் சாதனங்கள்** | | | | | | | | | | | | | | | | | | | | | |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 9,141 | 9,141 |
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 761 | 761 |
| முழு மொத்தம் | 218,877 | 220,573 | 154,467 | 246,356 | 356,953 | 240,051 | 466,978 | 168,638 | 94,943 | 158,174 | 129,931 | 215,637 | 109,090 | 106,915 | 14,081 | 29,292 | 22,966 | 92,833 | 5,486 | 121,104 | 3,173,346 |

| | |
|---|---|
| பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் படுகடன் பிணையங்கள் மீதான பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடு | (3) |
| **பெறுமதி இழப்பு நீங்கலான சொத்துப்பட்டியல் பெறுமதி** | **3,173,343** |

## ஊழியர் சேமலாப நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

32. **எதிர்பாரா பொறுப்பு**

அறிக்கையிடல் திகதியன்றுள்ளவாறு, 2018/2009 ஆம் வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான நிதியியல் பணிகள் வழங்குதல் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரியுடன் தொடர்பில் இலங்கை ரூபா. 28.500.657.821.00 அத்துடன் இலங்கை ரூபா 14.250.328.910 கொண்ட தண்டத்தையும் கோரி 2021 யூலை 12 அன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வரி மதிப்பீட்டு அறிவிப்பொன்றை ஊழியர் சேமலாப நிதியம் கிடைக்கப்பெற்றது. 2021 ஓகத்து 11 அன்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வரி மதிப்பீட்டு அறிவித்தலுக்கெதிராக நிதியம் மேன்முறையீடு செய்துள்ளது. தற்போதுள்ள கிடைக்கப்பெறுகின்ற தகவல்களை அடிப்படையாகக்கொண்டு, இறுதித்தீர்மானம் நிதியத்தின் சார்பில் இருக்கக்கூடும் என்பதுடன் நிதியத்தின் மீது முக்கிய பாதகமான தாக்கத்தை கொண்டிருக்கக் கூடியதல்ல என நாயணச் சபை அபிப்பிராயப்படுகிறது. இதற்கமைவாக, இந்நிதியியல் கூற்றுக்களில் பொறுப்பிற்கு எவ்வித ஏற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை.

33. **அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகள்**

**மிகைக்கட்டணவரி**

இலங்கை அரசாங்கம், 2021ஆம் ஆண்டு நவெம்பர் 12ஆம் நாளன்று பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டிற்கான அதன் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவில், 2020/2021 மதிப்பீட்டு ஆண்டுகளுக்கான வரி விதிக்கத்தக்க வருமான ரூ. 2,000 மில்லியனை விட அதிகமாக பதிவுசெய்துள்ள நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்கள் 25 சதவீத ஒரே தடவை மிகைக்கட்டண வரிக்கு பொறுப்புடையவர்களாக இருக்கலாம். எனினும், இது தொடர்பாக இறைவரியின் ஆணையாளர் நாயகத்திடமிருந்து/நிதி அமைச்சிடமிருந்து/தொழில் அமைச்சிடமிருந்து அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய அதிகாரியிடமிருந்து அறிவுறுத்தல்கள்/பணிப்புரைகளை இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இதற்கமைவாக, இந்நிதியியல் கூற்றுக்களில் சொல்லப்பட்ட வரியின் கணக்கில் எவ்வித ஏற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை.

2021ஆம் ஆண்டு நவெம்பர் 12ஆம் நாளன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டிற்கான அதன் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவில் 2020/2021 வரி மதிப்பீட்டு ஆண்டுகளுக்கான வரி விதிக்கத்தக்க வருமானத்தில் ரூ. 2,000 மில்லியனை விட அதிகமாக பதிவு செய்துள்ள கம்பனிகள் அல்லது தனிப்பட்டவர்கள் 25 சதவீதம் கொண்ட ஒரு தடவை மிகைக்கட்டண வரிக்கு பொறுப்புடையவர்களாக இருப்பர் என இலங்கை அரசாங்கம் குறிப்பிடப்பட்டது. எனினும், இது தொடர்பாக இறைவரியின் ஆணையாளர் நாயகத்திடமிருந்து/நிதி அமைச்சிடமிருந்து/தொழில் அமைச்சிடமிருந்து அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய அதிகாரியிடமிருந்து அறிவுறுத்தல்கள்/பணிப்புரைகளை இதுவரையிலும் கிடைக்கப்பெறவில்லை. இதற்கமைவாக, இந்நிதியியல் கூற்றுக்களில் சொல்லப்பட்ட வரியின் கணக்கில் எவ்வித ஏற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை.

பிரிவு ஈ

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



தொழில் ஆணையாளர் நாயகம்,

தொழில் திணைக்களம்,

அதிபதி,

இலங்கை மத்திய வங்கி,

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும், 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரைக்கமைவாக எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்த்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதியத்தின் நிதிக்கூற்றுகளின்ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

(அ) நிதியத்தால் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 08 வங்கி கணக்குகளுக்கு ஏற்புடையதாக வங்கி கணக்கிணக்க கூற்றின் படி 2001 தொடக்கம் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மொத்தம் ரூபா.மில்லியன் 15,779,99 ஆன அடையாளம் காணப்படாத கொடுக்கல் வாங்கல்களை செவ்வையாக்குவதற்கு அல்லது தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளாது தொடர்ச்சியாக வங்கி கணக்கிணக்க கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

i. 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் வழங்கப்பட்ட போதும் மறுக்கப்பட்ட காசோலைகள், வங்கி கூற்றில் குறிப்பு வைக்கப்படாத கொடுக்கல்வாங்கல், காசேட்டில் குறிப்பு வைக்கப்படாத கொடுக்கல்வாங்கல், நேரடியான பற்று/ வரவு மற்றும் அடையாளம் காணப்படாத ஏனைய மீதிகளின் மொத்தம் ரூபா.மில்லியன் 13,316.08 என்ற வகையில் காணப்பட்டதுடன், அதில் ரூபா.மில்லியன் 11,03.61 ஆன தொகை 2022 மே மாதம் 31 ஆம் திகதியிலும் சீராக்கப்படவில்லை.

ii. 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் வைப்புச் செய்யப்பட்ட போதிலும், காசாக்கப்படாத பணக் கட்டளை, காசாக்கப்படாத காசோலைகள் மற்றும் வழங்கிய போதும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்தம் ரூபா.மில்லியன் 2,322.59 ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா.மில்லியன் 715.70 ஐ 2022 மே மாதம் 31 ஆம் திகதியிலும் சீராக்கப்படவில்லை.

iii. நிதியத்தால் பயன்படுத்துகின்ற கணினி கணக்கீட்டு முறைமையின் குறைப்பாடுகள் காரணமாக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்பட்ட ரூபா.மில்லியன் 141.32 ஆன வரவு மீதி செவ்வையாக்குவதற்கு மீளாய்விற்கான ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு தரநியமம் 16 இல் 51 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பொருட்டு பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்தல் வேண்டுமாயினும், நிதியம் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிக் கூற்றுகளுக்கான தேய்மானம் கணக்கிடும் அட்டவணைப்படி, முழுமையாக தேய்மானம் செய்து முடிவுறுத்திய சொத்துக்களின் பெறுமதி ரூபா.மில்லியன் 599.81 ஆகும். அந்த சொத்துக்களுக்கிடையில் மேலும் பயன்படுத்துகின்ற சொத்துக்களை அடையாளம் காணப்பட்டு இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இல் 51 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் செவ்வையாக மீளாய்வு செய்யாமையால், ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 பிரகாரம் செவ்வையாக்குவதற்கும், மேலும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை பொருத்தமான வகையில் அகற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன 04 தொகுதிகளின்கீழ் மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலவினம் ரூபா.மில்லியன் 1,034,75 ஐ (கொள்ளளவு பெறுமதி ரூபா.மில்லியன் 243.35) ஆயினும், தேய்மானம் ஒதுக்கீடு செய்வதற்கான அட்டவணையில் அந்த செலவினம் ரூபா.மில்லியன் 574.27 ஆகியதால், நிதி நிலைமைக் கூற்று மற்றும் அட்டவணை என்பவற்றுக்கிடையில் அந்த சொத்துக்களின் செலவில் ரூபா.460.47 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதியத்தில் கணக்கீட்டு கொள்கை பிரகாரம், மோட்டார் வாகனங்களை வருடாந்தம், எளிய வழி முறையின் கீழ் 20% என்ற வகையில் தேய்மானம் மேற்கொள்ளுதல் வேண்டும். 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிக் கூற்றுகளின்படி மோட்டார் வாகனங்களின் செலவினம் ரூபா.மில்லியன் 97.20 ஆக கானப்பட்டதுடன், தேய்மானம் கணக்கிடும் பதிவேடுகளின்படி முற்றுமுழுதாக தேய்மானம் செய்த மோட்டார் வாகனங்களின் செலவினம் ரூபா.மில்லியன் 36.22 ஆகும். அதன்படி செலவினம் ரூபா.மில்லியன் 60.98 ஆகிய மோட்டார் வாகனங்களின் பொருட்டு தேய்மானம் கணக்கிடல் வேண்டுமாயினும், 2020 மற்றும் 2021 ஆண்டுக்கான தேய்மானம் கணக்கிடப்படவில்லை.

(உ) உறுப்பினர்களின் நிதியத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 05 கணக்கில், நிதிக் கூற்றுகளின்படி மீதிகளின் மொத்தம் ரூபா.மில்லியன் 85,362 ஆயினும், குறித்த கணக்குகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை பிரகாரம் அந்த மீதிகளின் மொத்தம் ரூபா.மில்லியன் 42,580 ஆகியதால், ரூபா.மில்லியன் 42,782 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்**.**

## 1.3 நிதியத்தில் 2021 ஆம் ஆண்டின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மீதும் என்னால் மேற்கொண்ட பணிகளை அடிப்படையாகக்கொண்டும், இந்த ஏனைய தகவல்கள் போருண்மயாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், அந்த விடயங்களை அறிவிக்கப்படுதல் வேண்டும். மேலும் இது தொடர்பாக எனக்கு அறிக்கையிடுவதற்கு ஒன்றும் இல்லை.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிதியம்

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

## 2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

---------------------------------------------------------------------------------------------------

**2.1** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.1.1** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12** (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிதியத்தால் பராமரிக்கப்பட்டிருந்தது.

**2.1.2** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில **6 (1)** (ஈ) **(III)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிதியத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

**2.1.3** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **6 (1)** (ஈ) **(iv)** பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பந்திகள் (ஆ), (இ), (ஈ), (உ) பந்திகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2** கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

**2.2.1** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12** (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் எவரேனுமொரு உறுப்பினர் நிதியத்துடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது.

**2.2.2** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12** (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது.

**2.2.3** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12** (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றியுள்ளது.

**2.2.4** **2018** ஆம் ஆண்டு **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் **12** (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மெஹெவர பியசயில் அமைந்துள்ள நிதியத்தின் அலுவலக வளாகத்தில் உள்ளக கட்டுமானங்களை மேற்கொள்வதற்காக அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையினை உரியவாறு பின்பற்றாது, கட்டிட திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ரூபா.மில்லியன் 135.3 ஆன மொத்த செலவு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த மொத்த தொகையும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டிருப்பினும், 2022 ஏப்ரல் 30 ஆம் திகதியிலும் உள்ளக கட்டுமானங்களை தயாரிக்கும் நடவடிக்கைகளை முற்றுமுழுதாக பூர்த்தி செய்யப்படவில்லை.

### 2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியத்தின் உறுப்பினர் நிதியத்தில் தொழில் ஆணையாளர் பெயரில் நிலவிய கணக்கில், தொழில்தருநருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டதால் திணைக்களத்தால் அறிவிடப்பட்டிருந்த ரூபா.மில்லியன் 11,456 ஆன தொகை மற்றும் அவ்வாறு வழக்கு தொடரப்பட்டதால் அறவிடப்பட்டு சீராக்கும் வரை பொது வைப்புக் கணக்கில் பிடிபணமாக வைக்கப்பட்டிருந்த ரூபா.மில்லியன் 301 ஆன தொகை ஒவ்வொரு உறுப்பினர் கணக்குகளில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் தொழில்தருநர்களின் பெயரில் வெவ்வேறாக பராமரிக்கப்படுகின்ற ''நடைமுறை ஆண்டின் உதவு தொகை இலக்கம் 1'' கணக்கில் 2021 ஆம் ஆண்டு திசெமப்ர் 31 ஆம் திகதியில் ரூபா.மில்லியன் 70,832 ஆன மீதி தொகை தொடர்பில், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை அடையாளம் காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பிடிபணமாக வைக்கப்பட்ட நலன்கள் மற்றும் உரித்துகள் கோரப்படாத நலன் தொகை என்ற வகையில் ரூபா.மில்லியன் 956 தொகையும் பற்றாக்குறை/மிகை உதவு தொகையாக ரூபா.மில்லியன் 2,117 தொகையும், பற்றாக்குறை/மிகை நலன் கொடுப்பனவாக ரூபா.மில்லியன் 353 தொகையும் உறுப்பினர் நிதியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருப்பினும், அந்த மீதிகளை அடையாளம் காணப்பட்டு சீராக்குவதகற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

மேற்படி உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்படாத கணக்குகளை துரிதமாக சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி 2013. 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் அரச கணக்கு செயற்குழு மூலமும் கட்டளையிடப்பட்டிருந்தது.

(ஆ) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பட்டியலிடப்பட்ட 11 கம்பெனிகளுக்கு மேற்கொண்டிருந்த ரூபா.மில்லியன் 7,386 ஆன பொதுவான பங்கு முதலீடுகளின் பொருட்டு 2019,2020 மற்றும் 2021 ஆகிய 03 ஆண்டுகளிலும் பங்கிலாபங்கள் கிடைக்கப்பெறவில்லை. இந்த 11 கம்பெனிகளில் 2 கம்பெனிகள் மட்டும் மேற்கொண்டிருந்த முதலீடு ரூபா.மில்லியன் 3,410,57 ஆகும். 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் நாட்டில் நிலவிய நிலைமைகள் காணரமாக கம்பெனிகளில் தொழில்பாட்டு செயற்பாடுகளில் தடை ஏற்படுதல் இந்த நிலைமைக்கு காரணமாகியதென மத்திய வங்கி அதிபதியால் என்னிடம் அறவிக்கப்பட்டிருந்தது.

(இ) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பட்டியலிடப்பட்ட 08 கம்பெனிகளில் மேற்கொண்டிருந்த ரூபா.மில்லியன் 9,486.07 ஆன பொதுவான பங்கு முதலீடுகளின் பொருட்டு 2021 ஆம் ஆண்டில் பங்கிலாப வருமானம் கிடைக்கப்பெறவில்லை. 2020 – 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 காரணமாக தொழில்முயற்சிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியடைதல் இந்த நிலைமைக்கு காரணமாகியுள்ளது என்று மத்தியவங்கி அதிபதியால் என்னிடம் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2010 ஆம் அண்டில் விமான கம்பெனியொன்றில் மேற்கொண்ட ரூபா.மில்லியன் 500 ஆன முதலீடுகளின் பொருட்டு, ஏற்புடைய முதலீடுகளை மேற்கொண்ட சந்தர்ப்பம் தொடக்கம் எந்தவொரு வருமானமும் நிதியத்திடம் கிடைக்கப்பெறவில்லை.

(உ) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ''த பினான்ஸ் கம்பெனியில்'' அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்தல் காரணமாக நிதியத்திடம் ரூபா.மில்லியன் 205.49 தொகை கிடைக்கப்பெறவில்லை.

(ஊ) நிதியத்தின் உறுப்பினர்களது தரவுகளை கணினிமயப்படுத்தல் மற்றும் scan செய்தல் தொடர்பில் வெளியக தரப்புகளுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மத்திய கடிதக்கோவை பிரிவுமூலம் கணக்கிடப்படும் தரவுகளை கணினிமயப்படுத்தல் மற்றும் Scan செய்தல் ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஏற்படும் குறைப்பாடுகளின் சதவீதத்திற்கு ஏற்புடையதான அபராத தொகையை, மாதத்திற்கு ஏற்புடையதான இன்வொயிஸ் பெறுமதியில் குறைப்பதற்குப் பதிலாக குறைப்பாடுகளின் சதவீதத்தை ஒரு மாதத்திற்கு வழங்கப்படும் இரண்டு இன்வொயிஸ்களில் ஒன்றில் மட்டும் குறைக்கப்பட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது. அதன்படி மீளாய்விற்கான ஆண்டில் உடன்படிக்கை பிரகாரம் கழிக்கப்பட வேண்டிய அபராதம் ரூபா.175,684 ஆல் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.

(எ) பிரதான அலுவலகதத்தில் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களில் கணினி வலையமைப்பில் துண்டிப்பின்றி பராமரிப்பதற்கு தேவையான பழுதுபார்த்தல் மற்றும் சர்விஸ் பணிகளை உரிய காலப்பகுதிக்கு மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும், 2015 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதிக்கு 06 சந்தர்ப்பங்களுக்கு ஏற்புடையதாக அவ்வாறு உடன்படிக்கை மேற்கொண்ட காலப்பகுதி முடிவுறுத்திருப்பினும், மீண்டும் உடன்படிக்கை மேற்கொள்ளாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் பராமரிப்பு சேவைகளை பெற்றுக்கொள்ளும்போது தற்போதுள்ள நிறுவனத்திற்குப் பதிலாக புதிய நிறுவனம் தெரிவுசெய்தலும், அதன்போது நிபுணத்துவ அறிவுள்ள நபர்களைக் கொண்டமைந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமனம் செய்தலும் திணைக்களத்து பெறுகை குழுவால் தீர்மானிக்கப்பட்ட போதிலும், Monitoring system and Pseries Services தொடர்பில் அவ்வாறு மேற்கொள்ளாது தொடர்ச்சியாக உடன்படிக்கை காலத்தை நீடித்து முன்னர் வழங்கியிருந்த நிறுவனத்திடமே பராமரிப்பு சேவை நடவடிக்கைகள் வழங்கப்பட்டன.

(ஏ) பட்டியலிடப்படாத கம்பெனிகளின் பங்கு முதலீடுகளில் ரூபா.மில்லியன் 5000 ம் அதாவது 53% ஐ 2013 ஆம் ஆண்டில் கென்வில் ஹோல்டிங்ஸ் ஹோட்டல் தொகுதி நிருமாணிப்பதற்கு முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த ஹோட்டல் தொகுதியை நிருமாணிப்பதற்கு ஏற்புடையதான கிரான்ஹயிட் கொழும்பு கருத்திட்டத்தின் நிருமாணிப்பு நடவடிக்கைகள் 2020 யூலை மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படினும், அதற்கு தேவையான பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், நிதி தேவைப்பாடுகளை திரட்டுவதற்கும் பணிப்பாளர் சபைக்கு தேவையான அதிகாரம் 2022 ஆம் ஆண்டு சனவரி 04 ஆம் திகதிய 21/2278/306/100 ஆம் இலக்க

அமைச்சரவை பத்திரம் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி திட்டமிடப்பட்டவாறு 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 27 ஆம் திகதியிலும் ஹோட்டல் தொகுதியின் நிருமாணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லை. ஆகையால் மேற்படி முதலீடுகளை மேற்கொண்டு 08 ஆண்டுகள் சென்றிருப்பினும் இந்த முதலீடுகளில் எந்தவொரு நலனும் நிதியத்திடம் கிடைக்கப்பெறவில்லை.

(ஐ) நிதியத்தின் உறுப்பினர்களுக்கு புதிய அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் மீண்டும் பதிவு செய்யும் கணினி நடவடிக்கைகளுக்கான காட் அட்டைகள் 15,000ம் ரூபா.மில்லியன் 12.61 தொகைக்கு 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்திருப்பினும், இந்த காட் அட்டைகளை பயன்படுத்தாது பயனற்று காணப்பட்டன. மேலும், இந்த கருத்திட்டம் பொருட்டு ரூபா.மில்லியன் 17.67 ஐ செலவிடப்பட்டு கொள்வனவு செய்த 35 இயந்திரங்களில் 2 ஐ அகற்றப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 33 இயந்திரங்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லை.

(ஒ) நிதியத்தால் 2021 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பொதுவான பங்கு விற்பனைகளில், 05 கம்பெனிகளில் மேற்கொண்டிருந்த பொதுவான செலவினம் ரூபா.மில்லியன் 93.39 ஆன பங்கு விற்பனையில் ரூபா.மில்லியன் 53.76 ஆன மூலதன நட்டம் காணப்பட்டது.

(ஔ) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் பங்கு சந்தையில் மேற்கொண்ட ரூபா.மில்லியன் 84,067 ஆன ஒட்டுமொத்த முதலீடுகளிலிருந்து ரூபா.மில்லியன் 9,681 அதாவது 12% ஐ ஹோட்டல் துறையில் 11 கம்பெனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. இந்த முதலீடுகளில் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சந்தைப் பெறுமதி ரூபா.மில்லியன் 2,659.51 ஆல் குறைவடைந்திருந்தது.

ii. ஹோட்டல் துறையில் மேற்கொண்ட முதலீடுகள் 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளின் இறுதியில் ரூபா.மில்லியன் 10,084.28 ம், 2021 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா.மில்லியன் 9,681.52 ம் ஆனதுடன், இந்த முதலீடுகளின் பொருட்டு 2021 ஆம் ஆண்டில் எந்தவொரு நலனும் கிடைக்கப்பெறவில்லை. 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் இந்த முதலீடுகளின் மீது நலன் ஒழுங்குமுறையில் ரூபா.மில்லியன் 103.18 ம் ரூபா.மில்லியன் 47.40 அதாவது 2.47% ம் மற்றும் 0.98% ம் ஆகியது. மேலும் 07 கம்பெனிகளில் மேற்கொண்டிருந்த ரூபா.மில்லியன் 3,174.54 ஆன முதலீடுகளின் பொருட்டு 2020 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளிலும் எந்தவொரு நலனும் கிடைக்கப்பெறவில்லை. 2020-2021 ஆகிய ஆண்டுகளில் கொவிட் 19 காரணமாக தொழில்முயற்சிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் இந்த நிலைமைக்கு காரணமாகியுள்ளது என்று மத்தியவங்கி அதிபதியால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

டப்லியு.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி